## கோவி.மணிசேகரன்



# தேரோடும் வீதியிலே...

# தேரோடும் வீதியிலே

இலக்கிய சாம்ராட்
கோவி. மணிசேகரன்

## பாராட்டுக் கடிதம்

அருட்செல்வர் நா. மகாலிங்கம்.

அன்புடைய திரு. கோவி. மணிசேகரன் அவர்கட்கு, வணக்கம்.

உங்களுடைய 'தேரோடும் வீதியிலே' என்ற பெருங்கதையைப் படித்தேன். மகிழ்வுற்றேன். திறமையுடனும் சிந்தனையுடனும் தமிழ் மக்களின் பழங்காலம் குறித்துக் கற்பனையை ஓடவிட்டிருக்கிறீர்கள். மகிழ்ச்சி. தமிழனுடைய பழங்காலத்தைக் கற்கால அநாகரிக நிலையில் சிலர் எழுதுகிறார்கள். பெங்களூரிலிருந்து நான் வந்த பின்னர் சந்திப்போம். நீங்கள் பழந்தமிழ் மக்கள் சரித்திரம் பற்றி (லெமூரியா பற்றி) ஒரு பெரிய புதினம் ஒன்றை எழுதலாம் என்று கருதுகிறேன். நேரில் பேசி முடிவு செய்யலாம். உங்கள் திறம் மேலும் வளர்ந்து தமிழ்த் தாய்க்குச் சிறப்பாக அமையப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன் (ஒப்பம்)

**நா. மகாலிங்கம்**

# அத்தியாயம் - 01

நிலவான வீதியிலே கோலமா மணிப் பிழம்பு, ஒளி வண்ணத் தேரேறிக் கிழக்குமுகம் பொன் கொழிக்க வழக்கம் போல் பவனி வரத் தொடங்குகிறான்.

புலர்ந்துவிட்ட புத்துணர்வில் கண்மலர்ந்த புள்ளினங்கள் புறநீர்மையாய்ப் பண்ணிசைத்து விண்ணில் சிறகடித்து மண்ணைத் துயிலெழுப்புகின்றன.

காலைப் போதின் பொற்கிரணங்கள்பட்டுத் தமிழ்ப் பெரும் தலைநகராம் கவாடபுரம், பொன்னனைய புதுப்பொலிவாய்த் திகழ்ந்து பூரித்துப் புளகிக்கிறது.

குமரி நாட்டின் அழகை ஆயிரம் பிறவிகளாய்க் கவிஞராகப் பிறந்தும் ஆயிரம் நாவாலும் வருணித்து அலச முடியாதே என்று ஏக்கப் பெருமூச்சுவிடுகிறார், இசைப் புலமை மேதை சிகண்டியார்.

துயில் கலைந்த மன்னர் கடுங்கோன் பாண்டியன், மேன்மாடத்துக்குச் சென்று கதிரவனைக் காண்கின்றார்.

அப்படியே தமது தலைநகரையும் கண்ணோட்டமிடுகிறார்.

“ஆ! இந்தக் கவாடபுரமாவது நிலைத்து நீடூழி வாழட்டும்” என்று வாழ்த்திக் கொள்கிறார்.

முதலாவது ஏற்பட்ட கடற்கோளால் பாண்டிய நாடு எவ்விதமாகவெல்லாம் அல்லல்பட்டு, தென் மதுரை அழிந்து, முதற்சங்கம் முறிவு கண்டு, பின்னர் ஏற்பட்ட தொல்லைகள்..

அம்மம்மா..!

இந்த இரண்டாம் தமிழ்ச் சங்கத்தைக் காக்க மீண்டும் எந்தவிதக் கடற்கோளும் ஏற்படக் கூடாது என்பது அவரது பிரார்த்தனையாக இருந்தது.

காலைக் கடனை முடிக்க மேன்மாடத்தைவிட்டு இறங்கி வருகிறார் கடுங்கோன் பாண்டியர்.

அதற்குள்ளாகவே தமது மைந்தன் – பாண்டிய இளவரசன் செழியன், துயில் கலைந்து, காலைக்கடன்களைத் துப்புரவாக முடித்து, ஆடையலங்கார ஒப்பனைகளுடன் எங்குப் புறப்பட்டுவிட்டான்?

ஓரிடமாக நின்று தமது ஒரே அருமந்த புதல்வனை நோக்குகிறார்.

கொஞ்ச நாட்களாகவே தந்தைக்கும் மைந்தனுக்கும் ஒரு சின்ன விஷயத்தில்– சே! காதல் என்ன சின்ன விஷயமா? அது எத்தனை பெரிய விஷயம் – அது விஷயத்தில் மனக்கசப்பு கண்டிருந்தது. அந்தக் கசப்பை எவ்விதமாக இனிப்பாக்குவது என்பதில் இருவருமே இருவேறு கோணங்களில் தத்தமது சிந்தனைப் புரவிகளைச் செலுத்திப் பயணத்தின் முடிவைத் தேடி ஆராய்ந்து வந்தனர்.

என்றைக்குமே இல்லாதவிதத்தில் நன்கு அலங்கரித்துக் கொண்டு வெளியில் புறப்பட்ட பாண்டிய இளவரசன் செழியன், வழியில் நின்றிருந்த காவற்பணியாளனிடம் ஏதோ இரகசியமாகச் சொல்லுகிறான்.

அதனையும் கூர்ந்து கவனிக்கிறார் கடுங்கோன் பாண்டியர்.

என்ன சொல்லுகிறான்..?

வெளியில் சென்ற இளவரசன் செழியன், தனக்கென்றே அயல் தேசத்திலிருந்து தருவித்திருந்த வெண்புரவியில் ஏறிக்கொண்டு கிழக்குமுகம் நோக்கி வேகமாக விரைகிறான்..

அவனது அந்த விரைவை நோக்க, ஏதோ சூரியன் அவசரமாக வானவீதியில் ஏறிச் சென்றுவிடப் போகிறான்; அதற்குள் அவனை எட்டிப் பிடித்து இரண்டொரு வார்த்தை பேசிவிட வேண்டும் என்பது போல இருந்தது.

மெல்ல அந்தக் காவற்பணியாளன் அருகே வந்தார், மன்னர் கடுங்கோன் பாண்டியன்.

மன்னர் அருகே வந்ததும் மலைத்துப் போன அந்தக் காவற்பணியாளன், அங்கம் முழுவதும் நடுநடுங்கக் கரங்கூப்பித் தலைவணங்கினான்.

"இளவரசன் எங்குச் செல்கிறான்?"

அவன் பேந்த விழிக்கிறான்.

"ஏதோ இரகசியமாகச் சொல்லிவிட்டுச் செல்கிறானே? இத்தனை காலையில் எங்கே செல்கிறான்?"

"மலயத்தீவுக்குச் செல்கிறார். அமைச்சர் பெருமானார் கேட்டால் செய்தி அறிவிக்குமாறு கட்டளையிட்டார். வருவதற்கும் அந்தி சாய்ந்துவிடும் என்று அறிவிக்கச் சொன்னார் மன்னர் பெருமானே!"

மலயத்தீவு என்றதும் மன்னருடைய சிந்தனைகள் மீண்டும் அலைமோதிக் கொள்கின்றன.

ஓ.. அந்தக் கறுப்புமுத்துவைக் காணச் செல்கிறான். அவளை இத்தனை காலையில் கண்டுகளிக்க என்ன இருக்கிறது?

சிந்தனைப் போராட்டத்துடன், தமது காலைக்கடன்களை முடித்துப் பின்னர் அமைச்சர் பெருமானுடன் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரலாம் என்று எண்ணி நடக்கிறார்.

மிகவும் அதிவேகத்துடன் புறப்பட்ட செழியன் நேரே கடற்கரையை அடைகிறான். அடைந்த வேகத்துடன் அந்த வெண்புரவியை விட்டிறங்கித் தட்டிக் கொடுத்தான். அளவுக்கு மீறிய வேகத்துடன் வந்ததால் குதிரையின் வாயில் நுரை தள்ளிக் கொண்டிருந்தது.

காலைக் கடற்கரைக் காற்றானாலும் விடிந்து பத்து நாழிகைக்கு மேலாய்விட்டதால் சூரியனின் வெப்பம் சுரீல் என்று தைத்தது. இளவேனில் காலத்து வெப்பம் கடற்கரைக் காற்றுடன் இணைகிற போது ஓர் அலாதியான சுகமாகவே அது இருந்தது.

பரந்து விரிந்த நீலக்கடலைக் கவனிக்கிறான். தொலைவில் பெரிய நாவாய் ஒன்று வந்து கொண்டிருக்கிறது.

“தான் வருவதற்குள் இவர்கள் வந்திருப்பார்கள் என்று நினைத்தால் இத்தனை காலதாமதமாக வருகிறார்களே, சோம்பேறிகள்” என்று மனத்துள் முனகிக் கொள்கிறான்.

சற்றைக்கெல்லாம் அந்த நாவாய் கரையை அடைகிறது.

அதில் மூவர் அமர்ந்திருந்தனர்.

காட்டுவாசிகளான அவர்கள் மேனியில் இடுப்பில் மட்டும் துணி இருந்தது. மற்றபடி

சங்குகளாலும் வண்ணக் கிளிஞ்சல்களாலுமான ஆபரணங்களை அணிந்திருந்தனர். தலையில் தட்டு மாதிரியான ஒரு தலையணி. அதில் வண்ண வண்ணமான இறகுகள்.

அந்நாளைய குமரிக்கண்டத்தில் தோற்றமளித்த பாண்டிய மன்னர்களையும், அவரைச் சார்ந்த பரிவாரங்களையும் தவிர ஏனைய மக்களினமே ஆதிவாசிகள்தாம். முன்தோன்றிய மூத்த குடி என்று தமிழிலக்கியங்கள் பறைசாற்றும் தமிழர்க்குடி, ஆதியில் குமரிக் கண்டத்தில்தானே தோற்றமளித்ததாக வரலாறு.*

குமரிநாட்டின் இளவரசன் செழியனைக் கண்டதும் அந்த மலயத்தீவின் ஆதிவாசியினர் நாவாயை விட்டிறங்கி வந்து, காலில் விழுந்து வணங்குகிறார்கள். பின்னர் எழுந்து, பத்தடித் தொலைவில் போய் நிற்கிறார்கள்.

“ஏன், இவ்வளவு காலதாமதம்?” என்றான் பாண்டிய இளவரசன் செழியன். அவனது குரலில் கோபத்தின் கடுமை தெறிக்கிறது.

மூவரில் ஒருவன் மெல்லக் கூறுகிறான்: “இடையில் ஒரு பிரச்சினை. எங்கள் இளவரசியின் தோழியர் செல்லியை எங்களுடன் அனுப்புவதா வேண்டாமா என்கிற பிரச்சினை. எங்கள் தலைவர்** மலயமான் கீர்த்தி எண்ணமோ தோழிப்பெண் செல்லியை அனுப்பி வைத்து உங்களைக் கவுரவிக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். ஆனால், எங்கள் இளவரசியார் நாகநீலியம்மையார், அதெல்லாம் தேவையில்லை. இளவரசர் எப்படியும் வருவார். அதற்கு இவர்களை அனுப்பினாலே போதுமானது என்று எங்களைச் சுட்டிக்காட்டி வாதாடினார். பின்னர் இளவரசியாரின் வாதமே ஒப்புக் கொள்ளப்பட்டதால் அதன் பிறகு புறப்பட்டு வரக் காலதாமதமாயிற்று.”

கன்னத்தை வலக்கரத்தின் ஆள்காட்டி விரலால் உரசியவாறு கொஞ்ச நேரம் யோசிக்கிறான் பாண்டிய இளவரசன் செழியன்.

ஏனிந்த வாதம் நிகழ்ந்தது?

செல்லியை அனுப்பத் தேவையில்லைதான். ஆயினும் செல்லியை அனுப்புவதால் ஏற்படப் போகிற நட்டம் என்ன? எதற்காக நாகநீலி மறுத்திருக்கிறாள்? இவர்களைக் கேட்கலாமா என்றும் ஒருகணம் யோசிக்கிறான் பாண்டிய இளவரசன் செழியன்.

சே! இவர்களை எதற்காக கேட்க வேண்டும்? நேரே நாகநீலியைக் கண்டு விசாரித்தால் போகிறது. மேலும் இன்றைக்கு அவளது பிறந்த

---

*இலெமூரியா— கண்டம் மனித உற்பத்தியே இங்குத்தான் என்கின்றனர் நில நூல் வல்லுநர்கள். அவ்வாறு தோன்றிய முதல் மனிதன் தமிழன் என்கிற போது நாம் பெருமைப்பட வேண்டும்.

**மலயன்தான் பின்னாளில் மலயமான் என்றும், மலையமான் என்றும் மருவித் திருக்கோவிலூர் ஆட்சியில் உதயம் கண்டதாகவும் இருக்கலாம்.

நாள் விழா. துணைக்காக இருக்கும் செல்லியையும் அனுப்பி வைத்துவிட்டு என்ன செய்வாள்? அவளது பிறந்த நாள் விழாவைக் கொண்டாட வரும் பாண்டிய இளவரசனை முதலாவதாக அழைப்புக் கொடுப்பவள் அவளாக இருக்க வேண்டாமே என்று அவள் ஏன்எண்ணியிருக்கக் கூடாது? தன்னைத் தீவிர வேறு எந்தப் பெண்ணையும் தன்னிடம் பத்தடி தூரம் கூட நெருங்க வைக்கச் சம்மதியாதவள். நாவாயில் ஒன்றுபட்டு வரச் சம்மதியாமலும் இருக்கலாம் அல்லவா?

நாவாயில் முதலில் அந்த வெண்குதிரையை ஏற்றினார்கள் பணியாளர்கள். பின்னர் நாவாயின் கூம்பின் பக்கமாக ஏறியமர்ந்து கொண்டான் பாண்டிய இளவரசன் செழியன்.

நாவாய் புறப்பட்டது.

மலயத்தீவின் கரையில் மலயமக்கள் திரண்டிருக்க, மலயமான் கீர்த்தியும் அவனது அருமந்த புதல்வி நாகநீலியும் நின்று பாண்டிய இளவரசன் செழியனை வரவேற்கக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

குமரிநாட்டுக் கடற்கரையிலிருந்து மலயத்தீவு ஏறத்தாழ ஒன்றரைக் காவதத் (15 மைல்கள்) தொலைவு இருந்தது. காதல் வெறியைப் பொறுத்தமட்டில் அது மிகக் குறைவான தூரமானாலும் நாவாயைப் பொறுத்தமட்டில் கடலலைகளுடன் போராடிக் கடக்க வேண்டுமல்லவா?

சூரியன் உச்சியை முத்தமிடுகிற போது நாவாய் மலயத்தீவின் கரையை முத்தமிட்டது.

இளவரசன் செழியனைக் கண்டதும் மலயத்தீவின் மக்கள் வாழ்த்தொலி கூறி வானையதிரடித்தனர்.

நாவாயை விட்டிறங்கும் செழியனைத் தனது வலக்கரம் நீட்டி உதவினான் மலயத்தீவின் தனிப் பெருந்தலைவன் மலயமான் கீர்த்தி.

பின்னர், “வரவேண்டும், இளவரசரே!” என்று யாழ்குரல் மீட்டி வரவேற்றாள் நாகநீலி. அவளது விருப்பம் போலப் பாண்டிய இளவரசனை அதுவும் தனது பிறந்த நாளில் முதல் குரலிட்டு வரவேற்றதில் அவளுக்குத் தனிப்பெரும் மகிழ்ச்சியாக இருந்தது.

தன் அன்புக்கும் ஆசைக்குமாய் உதயம் கண்ட காதலி நாகநீலியை உற்றுக் கவனிக்கிறான் பாண்டிய இளவரசன் செழியன்.

ஓ.. இவள் இன்றைக்குப் பார்த்து எத்துணை அழகாகக் காட்சி தருகிறாள்!

கொள்ளையழகு கூடு கட்டி அவனைக் குளவியாய்க் கொட்டுவது போலிருக்கிறது.

அவளது கறுத்த மேனிக்கேற்ப வெளிர் நீலச் சுற்றுச் சீலை. அதாவது, இடுப்புக்குக் கீழே முழங்காலுக்கு மேலே கொசுவினைச் சுற்றிய சீலை. இடுப்புக்கு மேலே கச்சை கிடையாது. திறந்த மேனிதான்.

ஆயினும் தன பாகங்களில் வண்ண வண்ணத் தொய்யில் எழுதியிருந்தார்கள். பச்சை குத்திக் கொள்வது போல மேனியில் வண்ண வண்ணப் பூக்கோலங்களை வரைந்து கொள்வது தொய்யில்!

ஆதிவாசிகளான அவர்களுள் தனவந்தர்களின் புதல்விகள் மட்டுமே இவ்வாறு தொய்யில் எழுதிக் கொள்வர். மற்றபடி ஏனைய மகளின் அனைவருமே இடுப்புக்குக் கீழே அணிந்திருக்கும் சுற்றுச் சீலையை நீக்கிப் பிறந்த மேனிதான். அது முக்கால் நாகரிகம்.

குமரி நாட்டின் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப மகளிர் கச்சைகளை அணிந்திருந்தாலும், சுற்றுப்புறங்களிலிருந்து தமிழ் மக்கள்* இவ்வகையாகவே தோற்றமளித்தனர்.

ஏன்? முதற்சங்க காலத்தில் தென் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட நிலந்தரு திருவின் நெடியோன் (கி.மு.30,000) காலத்தில் மன்னர் பரம்பரையிலேயே இவ்விதமான பிறந்த மேனியில் தொய்யில் எழுதி வாழ்ந்திருந்தனர்.

பின்னர் பல காலத்துக்குப் பிறகு ஏற்பட்ட கடற்கோளால் தென்மதுரை அழிந்தது. அப்போது கடைசியாக மிகுந்த பாண்டியர்தான் கடுங்கோன். அவர் இப்போது தென்மதுரையை விட்டு, கவாடபுரத்தைத் தலைநகராக்கிக் கொள்ள முயன்ற முயற்சி..

ஓ.. அதுவே ஒரு பெருங்கதை.

அப்போது நமது செழியன் ஐம்படைத்தாலியின் பருவத்திலிருந்த

---

*இன்றைக்கும், நமது சேரலாயிருந்து இன்று கேரளவர்களான மலையாளத்தவர்கள் ரவிக்கையணிந்தும் மேலாடையற்றிருப்பது, இதன் வளர்ச்சியே ஆகும்.

சிறுவன். இப்போது அந்தக் கவாடபுரத்தை எழிலார்ந்த நகரமாக்கி, அங்கே இடைச் சங்கத்தை நிறுவி, அந்தப் பேரூராட்சியைச் செழியன்பால் ஒப்படைக்க எடுத்துக் கொண்ட பேருழைப்பு..

இப்படி மலயத்தீவின் மகள் நாகநீலிபால் சென்று சரணடைந்துவிட்டதே என்பதுதானே அந்தக் கசப்புக்கே காரணம்.

தலையில் முத்துமணிகளால் வேயப்பெற்ற கிரீடத்தின் தலைப்பு முகப்பில் மயிற்பீலிகளைச் செருகியிருந்தாள் நாகநீலி.

கைகளில் சங்கு வளையல்கள்.

இடையிடையே கனத்த தங்கக்காப்புகள்.

தோளுக்குக் கீழே பொன்னாலான கடையங்கள்.

காலில் கனத்த வெள்ளித்தண்டை. ஏதோ தனது அரச பாரம்பரியத்தில் காணாத ஓர் ஒப்பனை நிறைந்த பேரழகியைக் கண்டுக் கிறங்கிப் போனான் இளவரசன் செழியன்.

அதுவே அவளது தமிழ் நாகரிகத்தின் ஆதி அலங்காரம் என்பதை அவனால் உணர முடிந்தாலும், கண்கூடாக ரசிப்பதில் ஒரு ரசனைமிக்க பேரானந்தமாக இருந்தது.

சீ! இப்போது மன்னர் மரபாய் மருவிய நாகரிகமே அநாகரிகமாக அவனுக்குப்பட்டது.

காதல் வயப்பட்ட போதை அவனை அவ்வாறு நினைக்கச் செய்தது.

பாண்டிய இளவரசன் முன்னால் தானும் கிரீடம் அணிந்து வரக்கூடாது என்கிற மரியாதையுணர்வுடன் காணப்பட்ட மலயமான் கீர்த்தியை நோக்கிய செழியன், "புறப்படலாமா?" என்றான்.

கீர்த்தியும் "சித்தம் இளவரசே!" என்று கூறிக் கைதட்ட, உடன் இரண்டு முத்துப்பல்லக்குகள் வந்தன.

ஒன்றில் இளவரசன் செழியனும், நாகநீலியும் அமர்ந்து கொள்ள மற்றொன்றில் மலயமான் கீர்த்தி அமர்ந்து கொண்டான்.

அவர்களுள் ஓர் ஆட்சியமைப்பு இருந்தாலும் அது பாண்டிய ஆட்சிக்கு அதிகப்படியான வித்தியாசமாக இருந்தது. அது பூர்வீக நாகரிகத்தை அப்படியே, சற்றும் கெடாது காப்பாற்றி வருகிற நாகரிகம். அமைச்சன் முதல் சேனாபதி வரை நடந்தே வர வேண்டும். தொலை தூரமானால் அவர்கள் குதிரைகளைப் பயன்படுத்திக்

கொள்வர். குமரி நாட்டின் சுற்றியுள்ள பல தீவுகளில் இவ்வகையான ஆட்சி முறையும் நாகரிகங்களுமே நிலவி வந்தன.

இதைவிட இன்னும் பச்சையாகவும், கொச்சையாகவும் சில நாகரிகங்கள் தொலை தூரத்துக்கப்பால் இருந்த தீவுகளில் காணப்பட்டன. அவர்கள் பேசுவது ஒருவகையான மாறுபட்ட மொழியானாலும் அது தமிழிலிருந்து உதயம் கண்ட மொழியாகவும் அல்லது திரிந்த மொழியாகவும் காணப்பட்டது. உலக மொழிகளுக்குத் தமிழே வேர் மொழியாக இருந்திருக்கிறது.

மலயத்தீவு மக்கள் பேசுகிற மொழியே தமிழாக இருந்தாலும் குமரிநாட்டு மொழியோடு இணைத்துப் பார்க்கிற போது எவ்வலவோ வேறுபாடு நிறைந்திருந்ததை இளஞ்செழியனால் உணர முடிந்தது.

இந்த வேறுபாட்டினையறியத் தமிழ்ச் சங்கத்திலும் ஒருவித ஆராய்ச்சி நிகழ்த்த அவன் எண்ணினான்.

இடைச்சங்க காலத்து நிலை – மிகவும் அபரிமிதமான நாகரிகத்தில் திளைத்த தமிழ்நாட்டின் நிலை, கவாடபுரத்தின் பொற்கதவங்களில் வைரமணிகளால் பொறிக்கப்பட்ட வரலாறு.

ஓ.. இராமாயணத்தில்* வான்மீகி, கவாடபுரத்து நாகரிகத்தைப் பற்றிப் பேசுகிறான்..

'அர்த்தசாஸ்திரம்' எனும் நூலில் சாணக்கியன் அழகுபடப் பேசுகிறான்..

இன்னும் எத்தனையோ மேல் நாட்டுப் பயணிகள் மேம்படப் பேசிய கவாடபுரத்துக் கதை..

தமிழுக்கு இரண்டாவது சூட்டப்பட்ட பழம் பெரும் நாகரிக மகுடம்..

அந்த மகுடத்துக்குரிய செழியன், நாகநீலிபால் காதல் கொண்டு மயங்கிய கசப்பை எப்படிப் போக்குவது?

கடுங்கோன் பாண்டியர் சிந்திக்கிறார், சிந்திக்கிறார், ஜீவன் குமுறுமளவுக்குச் சிந்திக்கிறார்.

---

*நமது கதை நிகழ்கிற காலந்தான் ராமாயணம் நிகழ்ந்த காலம். சீதை எங்கிருப்பாள் என்கிற ஐயம் ஏற்படுகிற போது அனுமனையும் ஏனை வாணரப்படைகளையும் நோக்கி, 'பொன்னாலும் முத்தாலும் அலங்கரிக்கப்பட்ட கோட்டையுடைய கவாடபுரத்துக்கு சென்று தேடிப் பாருங்கள்' என்று உத்தரவிடுகிறார்கள்.

# அத்தியாயம் - 02

இயற்கையன்னை குதித்துக் குதித்துக் கூத்தாடும் எல்லா வளங்களையும் தன்னகத்தே கொண்ட மலயத் தீவிலேயே தங்கிவிடலாமா என்று பலமுறை நினைத்துப் பார்த்திருக்கிறான் பாண்டிய இளவரசன் செழியன்.

அவனது காதல் மயக்கம் ஒரு காரணமாக இருந்தாலும் உண்மையிலும் மலயத்தீவின் இயற்கை எவரையும் மயக்குறச் செய்துவிடும்.

அந்தத் தீவில் மிகப் பெரும்பாலான வீடுகள் ஓலை வேய்ந்த மண் குடிசைகளாக இருந்தாலும் சதுரவடிவில் அவை பார்ப்பதற்குப் புதுப் பொலிவைத் தருகின்றன. மற்றபடி எங்கோ சில கல்விடுகள். அவர்கள் நிலக்கிழார்கள் — பெருந்தனக்காரர்கள்.

மலயத்தீவின் நடுநாயகமாக விளங்குகிறது மூங்கில் மாளிகை — அவர்களது அரண்மனை. அவர்கள் பாஷையில் மட்டுமல்லாது வேறு எவர்கள் பாஷையில் பகர்ந்தாலும் அது அரண்மனைதானே!

குமரிநாட்டுக் கடுங்கோன் வாழ்கிற மாளிகை மட்டுந்தானா அரண்மனை? காட்டுவாசிகளான இவர்கள் தலைவன் மலயமான் கீர்த்தி வாழ்கிற இந்த மூங்கில் மாளிகையினையும் அரண்மனை என்றே அழைக்க வேண்டும்.

அடித்தளம் கருங்கல்லால் அமைக்கப்பட்டிருந்தாலும் கூம்பு பாணியில் (கேரளக் கோயில் பாணியில்) மரத்தாலும் மூங்கில்களாலும் கீழ்முற்றமாக்கப்பட்டு, மேலே சார்பு இறக்கி, அதன் மேல் கூம்பாக ஒரு மாடம். உள்ளே நல்ல மூங்கில்களைப் பிளந்து வளைவு கட்டி வேய்ந்து இருந்தார்கள். அந்தத் தனியறையில்தான் சில ரகசிய ஆலோசனைகள். கீழ்முற்றம் விசாலமாக இருந்தது. ஏறத்தாழ இருபது அறைகள். எங்கு நோக்கினும் யானைத் தந்த ஜோடனைகள்.

நாகநீலியின் பிறந்த நாள் வைபவத்தை முன்னிட்டு வெளியில் பெரிதாகப் பந்தல் போட்டு அலங்கரித்திருந்தனர். அரண்மனையும் புதிய கோலமுடன் திகழ்ந்தது. பந்தல் நடுவே போடப்பட்டிருந்த தந்த ஆசனத்தில் மிகவும் மரியாதையுடன் பாண்டிய இளவரசனை அமரச் செய்தனர்.

அப்போது யானைகள் எழுப்பிய பிளிறல்களும் தொடர்ந்து மலயமக்கள் எழுப்பிய வாழ்த்தொலிகளும் அந்தத் தீவையே அதிரடித்தன.

மலயமானுக்கென்றிருந்த பெரிய யானையொன்றின் மீது மாலையலங்காரத்துடன் ஏறியமர்ந்து கொண்டாள் நாகநீலி.

அது அவர்களது குலச் சம்பிரதாயம். நீண்டு வளைந்த பெரிய தந்தங்களையுடைய பழங்காலத்து யானையான அதன் துதிக்கையில் கனத்த மாலையொன்றிருந்தது.

யானை மீது பவனி வந்த மலயத்தீவின் இளவரசி நாகநீலி நேரே இளவரசன் அமந்திருக்கிற இடம் நாடி வந்தாள்.

யானைப்பாகள் ஏதோ அவனது மொழியில் கூறி அங்குசத்தால் யானையைக் குத்தவே, அது பெருத்த பிளிறலுடன் துதிக்கையிலிருந்த மாலையை செழியன் கழுத்தில் அணிவித்தது.

அடுத்து கொஞ்சமும் தாமதியாத நாகநீலி யானை மீதிருந்து இறங்கி வந்து, செழியனின் கழல் பணிந்து வாழ்த்துப் பெற்றாள்.

தாய் தந்தையரிடம் பெற வேண்டிய வாழ்த்துகளை காலையிலேயே பெற்றாய்விட்டது.

“இளவரசரே நான் யானை மீது அமர்ந்து மரியாதைக் குறைவாக உங்களுக்கு மாலையணிவித்தேன் என்று எண்ண வேண்டாம். இது எங்கள் குலமரபு. வாருங்கள் உணவு உட்கொள்ளச் செல்லலாம்.”

நாகநீலியின் சொற்களில் ஒரு தெளிவு இருந்தது. ஏனையவர் பேசுகிற அந்தத் தமிழுக்கும் நாகநீலி பேசுகிற தமிழுக்கும் வேறுபாடு தெரிந்தது.

அனைவரும் விருந்துண்ண எழுந்தனர்.

பாண்டிய இளவரசன் செழியன், சைவன். பாண்டியகுலமே அக்காலத்தில் புலால் மறுத்த நாகரிகத்தில் வாழ்ந்து பெருமை கண்டது. ஆனால், மலயத்தீவினர் மாமிச பட்சிணிகள் என்றாலும் செழியன் சைவம் என்றுணர்ந்த நாள் முதற்கொண்டு நாகநீலியும் மாமிசத்தைப் புறக்கணித்துவிட்டாள்.

அவளது அந்தச் செய்கை, செழியனுக்கு மகிழ்ச்சியூட்டுவதாகவும் பெருமைப்படத்தக்கதாகவும் இருந்தது. இருவருக்கெனச் சமைக்கப்பட்ட உணவுகள் என்று தனித்தில்லாமல், வருகை தந்திருக்கிற பாண்டிய இளவரசர் சைவர், அவரைப் பின்பற்றி

நாகநீலியும் சைவம். எனவே, அன்றைய விருந்து எல்லாருக்கும் சைவமாகவே இருந்துவிட்டது.

இதில் சில பெயர்களுக்கு எரிச்சலுங்கூட. ஆனால், மது மாந்துவதில் எந்தவிதத் தடையுமில்லை.

இளவரசனையும், நாகநீலியையும் தவிர, மற்ற அனைவருமே – ஆண் பெண் இருபாலரைச் சார்ந்த அனைவருமே – கள்ளருந்தி களிப்பை வெளிப்படுத்தினர். விருந்து முடிந்ததும் குல வழக்குப்படி அவர்கள் கலை நாகரிகத்துக் கேற்ப இசையும், நடனமும் நிகழ்ந்தன.

அன்றை மாலைப் போது வரை இந்த நிகழ்ச்சிகளே பெரும்பாலான நேரத்தை விழுங்கிவிட்டதால், தனித்து இந்த அலங்காரத்துடன் நாகநீலியுடன் பேசி மகிழ்கிற நேரம் கிடைக்காமல் போய்விடுமோ என்று எண்ணிப் புழுங்கினான் பாண்டிய இளவரசன் செழியன்.

ஆனால், அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. அந்தி சாய இன்னும் ஐந்து நாழிகள் இருந்தன. எனவே இருவரும் தனித்து அந்தக் காட்டுப் பகுதியில் காலாற நடந்து சென்றனர்.

அவர்கள் அவ்வாறு செல்வதை மலயமான் கீர்த்தியும் அவனைச் சார்ந்தவர்களும் பார்த்து மகிழ்ந்தனர். தங்கள் இளவரசி நாகநீலி, குமரிநாட்டுப் பட்டத்தரசியாகப் போகிறாள் என்கிற பெருமை வேறு. எனவே, அந்தக் காதலைப் பகிரங்கமாகவே மலயத்தீவினர் ஆதரித்துப் போற்றினர்.

அவர்களுக்கென்றிருக்கும் கட்டுப்பாட்டிலிருந்து நாகநீலி மீறி நடக்கமாட்டாள் என்கிற நம்பிக்கையும் அவர்களிடமிருந்தது.

செந்தழல் சூரியன் அந்தியை முத்தமிட்டுக் கொண்டிருக்கிறான். வழக்கமாக அவர்கள் கடற்கரையில் அமர்ந்து பொழுது சாயும் வரை ஆனந்தமாக – நாழிகை செல்வதே தெரியாமல் – பேசுவதுண்டு. இன்று அந்த வழக்கத்துக்கு மாறாகக் காட்டுப் பகுதியில் நடந்தனர். எந்தப் பகுதியில் நடந்தால் என்ன? நாகநீலி அனைத்துப் பகுதிக்கும் அவளே ராணி. அந்தக் காட்டு மிருகங்கள் கூட நாகநீலி வந்திருக்கிறாள் என்றால் இருப்பிடத்தைவிட்டு வெளியே வரத் தயங்கும்.

அப்படி வெளியே வந்து ஏதேனும் இசகுபிசகாக நடந்துவிட்டால் மறுநாள் அதன் உயிர் அதனிடம் இராது என்பது அந்த மிருகங்கள் அனுபவத்தில் கண்ட காட்சிகள்.

பச்சைப்பசேல் என்று மரகதப் போர்வையுடன் காட்சி தந்த அந்த அடர்ந்த காட்டில் அவர்கள் வெகு நேரம் பேசிக் கொண்டே நடந்து சென்றார்கள். தொடர்ச்சியாக ஆங்காங்குப் பாறைகள். ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து இருவரும் அமர்ந்தனர். நடந்து வந்த அசதி அவர்களிடம் தலைநீட்டவில்லை. காதல் வயப்பட்ட இன்பத்தில் ஏற்படுகிற அல்லது ஏற்படுத்திக்கொள்கிற மிகப்பெரிய சாகசங்களுக்கு முன்னால் இந்த அசதி ஒரு சாதாரணம்.

செழியன் தன் அமர்ந்த காதலியை உற்று நோக்கி அவளது அழகை உச்சிமுதல் உள்ளங்கால் வரை பரிசீலிக்கிறான்.

அந்த வித்தியாசமான அழகை அவன் பல கோணங்களில் ரசித்துக் கற்பனை செய்கிறான்.

கறுப்பழகியானாலும் கண்கவரும் கவிதை! இதையே அனுபவித்துப் பார்க்கிற போது புலன்கள் இனிக்கும் காவியமாக இருக்குமோ?

தானும் கறுப்புதானானாலும் இந்தக் கறுப்பே ஓர் அலாதியான மொழுமொழுத்த பளபளப்பான மெருகிட்ட கறுப்பு.

எடுப்பான அந்த நாசிக்குத் துடிப்பான கண்கள் கூறும் கட்டியம், மிடுக்காக இருக்கும் மேனிதானே? அல்லது மேனிக்கு அழகு செய்யும் தனபாரங்களோ?

அபாரம்..

“என்ன இளவரசரே வழி நெடுக வாய் நோகாமல் பேசி வந்த நீங்கள், பாறை மீது அமர்ந்ததும் பாறையாகிவிட்டீர்கள்.”

காட்டுவாசிகளிடையேயும் கவிதை மணக்குமோ?

நாகநீலியின் பேச்சும் அழகாகவே இருந்தது.

“பாறையாகிவிடவில்லை நீலி!”

“பின்?”

“உன்னைப் பார்த்துக் கொண்டே பேசாமல் இருக்கலாம் போலத் தோன்றுகிறது.”

“இன்றைக்குத்தான் புதிதாகப் பார்க்கிறீர்களோ?”

“இன்றைக்கு நீ புதிய மாதிரியாக இருக்கிறாய்.”

“பிறந்த நாளல்லவா?”

“அப்படியானால் நீ பிறந்த மேனியாகவல்லவோ இருக்க வேண்டும்.”

நாணத்தால் நாகநீலியின் முகம் கன்றிச் சிவக்கிறது. சிவந்த மேனி சிவப்பதில் அழகில்லை. கறுத்த மேனி சிவப்பதில்தான் ஒரு புதிய ரசனையே ஏற்படுகிறது.

அவன் ரசிக்கிறான்.

அவள் ஒருகணம் தலை தாழ்த்தி மெல்லிய குரலில் சொல்லுகிறாள்:

“அப்படி ஓர் ஆசையா? உங்கள் ஆசைதான் எனது சாம்ராஜ்யம். அப்படிப் பார்க்க வேண்டும் என்றால் நான் தடை சொல்லப் போவதில்லை. எங்கள் சம்பிரதாயப்படி பிற ஆடவனைக் காமக்கண் கொண்டு பார்ப்பதே தவறு. காதலிப்பது இரண்டாவது தவறு. தொட்டுப் பழகுவது பெரிய தவறு. இத்தனை தவறுகளையும் எங்கள் சம்பிரதாயம் உங்களுக்காக விட்டுக் கொடுத்துவிட்டது. இந்தத் தவறென்ன? இதனினும் பெரிய தவறு – அதற்கு மேல் ஒரு தவறு இருக்க முடியாதென்றால் அந்தத் தவறுக்கும் நான் சம்மதிப்பேன். காரணம், உங்கள் அங்கத்தின் ஒவ்வொரு பாகத்திலும் எனது உயிரைத் தேக்கி வைத்திருக்கிறேன். ‘இந்த விநாடியே என்னைப் பூரண ரசனையுடன் அனுபவித்துவிட்டு உயிரை மாய்த்துக் கொள் நீலி’ என்று நீங்கள் கட்டளையிட்டால்.. சத்தியமாகச் சொல்லுகிறேன். இந்த நீலி இம்மியும் பின்வாங்கமாட்டாள்.”

அவளுடைய கண்களில் ஆனந்தத்தாலுண்டான ஆரோக்கியமான நீர்த்திவலைகள். அந்த நீர்த்திவலைகளுக்குள் அடங்கிய நம்பிக்கை நிறைந்த காதல் கதையினைச் செழியனால் உணர்ந்து கொள்ள முடிகிறது. ஏறத்தாழ ஒன்றரையாண்டுகள்தாம் அந்தக் காதலின் வயது. இந்தப் பதினெட்டுத் திங்களாக அவர்கள் ஏறி வந்த பதினெட்டுப் படிகளையும் நினைத்துப் பார்க்கிறான். ஏதோ விதிவசமாக இந்தக் காதல் முளைத்ததாக அவன் எப்போதும் நினைத்துப் பார்த்ததில்லை.

அவளும் இது ஓர் அதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட காதல் என்றும் நினைத்துப் பார்க்கவில்லை.

குமரிநாட்டின் இளவரசனது காதல் அதிர்ஷ்டவசமானது அல்லாது வேறு என்ன?

ஆனால், அவள் அவ்வாறு நினைக்க நாணினாள். இருவருமே, இதனை ஜென்ம ஜென்மமாகத் தொடர்ந்து வரும் காதலாகவே கருதி ஒருவரையொருவர் புரிந்து நேசித்தனர்.

அது ஒரு தெய்வீக நேசமாகவே அவர்கள் கருதினர் என்று சொல்வதைவிட வழிபட்டனர். இடையில் காட்டுவாசிகளுக்குள் பிரச்சினைகளும் போராட்டங்களும் முகிழ்த்தன. இயல்பானவையே! ஒரு பெரிய பேரரசின் இளவரசனைக் காதலிப்பது அவர்கள் தகுதிக்குப் பெருங்குற்றமாகவே கருதி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஆனால் நாளடைவில் இளவரசன் செழியன் நடந்து கொண்டவிதம் – கொடுத்த வாக்குறுதிகள் அந்த மக்களை மெய்சிலிர்க்கச் செய்து அந்தக் காதலைப் பரிபூரணமாக அனுமதிக்கச் செய்தன.

தனது கட்டை விரலால் நாகநீலியின் கண்களில் அரும்பிய ஆனந்த நீர்த்திவலைகளைத் துடைத்துவிடுகிறான் செழியன்.

"இந்தக் கண்ணீர் எனக்குப் பல கதைகளைச் சொல்லுகிறது நாகநீலி. நான் உனது பிறந்தநாள் விழாவில்தான் பிறந்த மேனியாகப் பார்க்க வேண்டுமா என்ன? நான் நினைத்தால் என்றைக்கு வேண்டுமானாலும் பார்க்கலாம்; எப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம்; அந்த உரிமை எனக்குண்டு. அதனை நீ பரிபூரணமாக நேசிக்கிறாய்; யாசிக்கிறாய் என்பதும் நானறிந்தவையே! உன்னைப் பொறுத்தமட்டில் பிறந்த மேனி என்பது என்ன? உனது இடுப்புக்குக் கீழே சுற்றியுள்ள சீலை மட்டுந்தானே? மற்றபடி நீ பிறந்த மேனியாள்தான்."

நாகநீலியின் கண்கள் பாண்டிய இளவரசனை நோக்குகின்றன.

ஆ! பார்க்கப் போனால் இப்போது தன்னைப் பொறுத்தமட்டில் பாதி பிறந்த மேனியாள்தானே! இளவரசர் சொல்லுவதில்..

அவளது சிந்தனை தடைப்படுகிறது.

தனது மார்பகத்தை ஒருகணம் உற்று நோக்கிக் கொள்கிறாள். என்னதான் தொய்யில் எழுதியிருந்தாலும் இது திறந்த மார்பகந்தானே? பாதி நிர்வாணம்தானே?

நாணம் மெல்லியதாய்ப் படருகிறது..

ஆ! இது போன்ற நிலைகள்தாம் மனித நாகரிகத்தை மெல்ல மெல்ல வளர்த்திருக்கின்றன! அது வரையிலும் அது நாணமாகப் படாத நாகநீலிக்கு, இளவரசனின் இந்த உரையாடலுக்குப் பிறகு எங்கிருந்து இந்த நாணம் கவிந்தது..? பிறந்த மேனி என்ற சொல்லா?

நிர்வாணத்தின் நிஜமான அர்த்தங்கள் அவளுக்குப் புரிய வருகின்றன.

ஓ.. எத்தனை அசிங்கமான நாகரிகம் என்பதும் கூடப் புரிகிறது. இளவரசன் தோளில் துவண்டு கொண்டிருக்கும் உத்தரியத்தை எடுத்து மார்பகத்தை மூடிக்கொள்ளலாம் என்றும் ஒருகணம் நினைத்துப் பார்க்கிறாள்.

“நீலி! எனது சொற்கள் உனது காதுகளில் நுழைந்து மேனியைப் பலவாறு சிலிர்க்கச் செய்கின்றன என்று நினைக்கிறேன். இவ்விதம் என்றாவது உனது மேனி சிலிர்க்குமா என்று நான் எதிர்பார்த்ததுண்டு. அது இந்த உனது பிறந்த நாளில் சிலிர்த்தது வாழ்த்துக்குரியது. சொல்லப் போனால் உனது இந்த நிலைதான்— பாதி நிர்வாண நிலைதான் எனது காமத்தையடக்கிவிட்டதோ என்று நினைக்கிறேன். இது நீடித்தால் நான் துறவியானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.”

“ஐய்யய்யோ!”

“ஆமாம் நீலி! எதையும் மூடிவைப்பதில்தான் பரிசுத்தமிருக்கிறது. திறந்து போட்டுவிட்டால் கொள்வாரில்லாமல் போய்விடும். காமமும் அப்படித்தான். மூடி வைக்க மூடிவைக்கத் தான் அழகு பெருகுகிறது; ஆசை வளருகிறது. ஓ.. திறந்து காட்டமாட்டாளா என்கிற எதிர்பார்ப்பு முளைக்கிறது. திறந்துவிட்டால், பூ! இவ்வளவுதானா என்கிற வெறுப்பே மேலோங்குகிறது. எனவே, உனது பிறந்த நாளில் நான் வேண்டுவது இதுதான். நீ நாளை முதல் உனது மார்பில் கச்சையணிவாய் என்று எதிர்பார்க்கிறேன்.”

எத்தனையோ அர்த்தங்கள் புரிபட்டவள் போல அலைமோதக் கவனிக்கிறாள் நாகநீலி. அவளுக்கு இப்போதே கச்சையணிந்து கொள்ளலாம் போலத் தோன்றுகிறது..

ஏன்? தனது இனத்துக்கே கச்சையணிய ஒரு கட்டளை பிறப்பித்தால் என்ன என்றும் தோன்றுகிறது.

ஆ! இவ்விதமாகத்தான் மனித நாகரிக வளர்ச்சி எண்ணங்களாலும் அவற்றால் ஏற்படும் உணர்வுகளின் எதிர்ப்புகளாலும் ஏற்படுகிறது போலும்!

“என்ன நீலி! நீ மவுனமாக இருந்தால் எப்படி?”

“மவுனம் சம்மதத்துக்கு அறிகுறியேயானாலும் எங்கள் மரபுச் சம்பிரதாயம் இடம் தராதே! எனக்கென்னவோ, எனக்கு மட்டுமல்லாது எனது மரபுக்கே இந்த ஆணையைப் பிறப்பித்துக் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டும் என்றுதான் தோன்றுகிறது. ஆனால், அதற்கு இது நேரமல்ல. நான் குமரிநாட்டின் பாண்டிய பட்டத்தரசியாகிற அன்று கச்சையணிவேன். அதுமட்டுமல்ல, எனது தீவுப் பெண்களையும் கச்சையணிய ஆணை பிறப்பிப்பேன். இப்போது நான் அவ்வாறு பிறப்பித்தால் இளவரசனது மோகத்தில் சம்பிரதாயத்தையே தூக்கி எறிகிறாள் என்று பல பேர் பலவிதமாய்ப் பேசத் தொடங்குவார்கள். எனவே நீங்கள் எவ்வளவு விரைந்து என்னை மணக்கிறீர்களோ அவ்வளவு விரைவில் உங்கள் எண்ணம் பிரகடனப்படுத்தப்படும்!”

மிகவும் வேகமாகவும் உணர்ச்சி வயப்பட்டும் பேசிய நாகநீலியின் சொற்கள் அனைத்துமே ஏற்புடைத்தாயிருந்தன.

உண்மைதானே!

காலம் காலமாக இந்தத் தீவுகளில் வசிக்கும் மக்கள் பின்பற்றி வரும் நடைமுறைப் பழக்கங்களை அவ்வளவு எளிதாக மாற்றிவிட முடியாது. இவள் பாண்டிய ராணியானதும் உத்தரவிட்டால் அந்த உத்தரவுக்கும் ஒரு தனியான மரியாதை ஏற்படும். அதுவே நியாயமுங் கூட!

“நீ சொல்வது முழுக்கவும் நியாயம் நீலி! நீ விரைவில் பாண்டிய ராணியாகிற ஏற்பாடுகள் இனித் துரித கதியில் நடக்கும். எத்தனை நாள்களுக்குத்தான் இப்படித் தனித்துப் பேசி, மகிழ்ந்து, அந்தப் பேச்சிலும் மகிழ்ச்சியிலும் ஓர் இனிப்பும் இல்லாது ஒரு கசப்புமில்லாது வாழ்ந்து கொண்டிருக்க முடியும் என்று நீ சுட்டிக்காட்டவில்லை என்றாலும் தொக்கி நிற்பதை நானறிவேன். எனக்கு மட்டும் இந்தக் கசப்பினிப்பு உணர்வுகளில்லையா என்ன? ஆனால், உன்னைப் பாண்டிய நாட்டுப் பட்டத்து ராணியாக அனுபவிக்க விரும்புகிறேனேயல்லாது மலயத்தீவின் இளவரசியாக அனுபவிக்க

அல்ல. விரைவில் நமது குலதெய்வம் கொற்றவை ஆசி வழங்குவாள்.”

அந்திச் சூரியன் மேற்கு வானில் விழுந்து கொண்டிருக்கிறான்.

“நாகநீலி! நேரமாகிறது. நான் காலையில் புறப்பட்டவன். என்றைக்குமே இப்படி இருந்ததில்லை! அரண்மனைக்குச் செல்ல வேண்டும், புறப்படு.”

இருவரும் அன்றைய சந்திப்பு போதும் என்பது போல எழுந்து கொண்டாலும் இருவருள்ளும் பிரிய மனமில்லை. இரவு முழுவதும் தனித்தே பேசிக் கொண்டிருக்கலாம் போலத் தோன்றியது.

கடற்கரையில் வெண்குதிரை நின்று கொண்டிருக்கிறது. இளவரசன் செழியனையும் அவனது குதிரையையும் ஏற்றிச் செல்ல நாவாய் ஆய்த்தமாக இருக்கிறது. இன்று குதிரைக்கே வேலையில்லை. எங்கேனும் செல்ல வேண்டியிருந்தால் தனது குதிரைமீது சென்று பெருமை கொள்ள நினைத்தது வீணாகிவிட்டது.

நாகலியும் செழியனும் இருபுரவிகளில் ஏறிக் கொண்டுதான் மலயத்தீவை வலம் வருவார்கள். அது இன்றைக்கு இல்லாமல் போய்விட்டது.

சில நாள்களில் நாகநீலியே குமரிக்கடற்கரைக்கு வருவாள். அப்போது அவள் தனது குதிரையை நாவாயில் ஏற்றி வரமாட்டாள். அவளது பயணம் கடற்கரையுடன்தான்! அப்போதெல்லாம் அவள் கற்பனை செய்வாள்.

‘ஆ! இந்தப் பரந்த குமரிநாட்டின் அரியணையில் நாம் அமரப் போகிறோம்!’

அந்தக் கற்பனையில் அவள் திளைக்கிற போதெல்லாம் உள்ளே இனந்தெரியாத உணர்வுகள். தன் காதலனை நாவாயில் ஏற்றி வழிகூட்டியனுப்புகிறாள் நாகநீலி.

நாவாய் செல்கிறது.

அது கண்களை விட்டு நீங்கும் வரை கடற்கரையில் நின்று கவனிக்கிறாள் நாகநீலி. அவளது காதல் அழியாத காவியத்துக்கும் ஒருபடி மேலோங்கி ஒளிர்கிறது.

# அத்தியாயம் – 03

அரண்மனையே தீப்பிடித்து எரிவது போன்ற உணர்வுடன் நடுமாட முற்றத்தில் உலவிக் கொண்டிருக்கிறார் குமரிநாட்டு மன்னர் கடுங்கோன் பாண்டியர்.

தன் மகனுடைய இந்தப் பொருந்தாக் காதலால் குமரி நாட்டுக்கு என்ன உற்பாதம் நிகழ்ந்துவிடுமோ என்று அவரது மனம் அஞ்சியது.

காலையில்தான் ஆயங்களைக் கூட்டி ஆலோசனை நடத்தினார். அவரவர் தங்கள் அபிப்பிராயங்களை இது விஷயத்தில் பகிரங்கமாகக் கூறத் தயங்கிவிட்டனர்.

என்ன இருந்தாலும் இது இளவரசன் பற்றிய விஷயம். நாளை எதுவும் நிகழலாம்; மாறலாம். இதனால் ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் இளவரசருக்குப் பகையாகி நிற்க நேர்ந்தால்..

எவ்விதமாகவெல்லாம் பழியுணர்வுகள் தலைதூக்கி ஆடுமோ?

பட்டத்தரசி – செழியனின் தாய் *வானவன் தேவியிடம் இது குறித்து ஆலோசித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்கிற தீவிரச் சிந்தனையுடன் உலவிக் கொண்டிருக்கிறார் கடுங்கோன் பாண்டியர்.

அரண்மனையில் கனக தீபங்கள் கண்விழிக்கத் தொடங்கின. இன்னமும் செழியனைக் காணவில்லை.

மன்னர் கடுங்கோன் பாண்டியர் நேரே தம் பட்டத்தரசி வானவன் தேவியைக் காணப் புறப்பட்டார்.

கடற்கரையை ஒட்டி அமைந்திருந்த பாண்டிய அரண்மனை, ஓர் அழகு விலாசம் என்றால், அதன் அந்தப்புரம் அந்த அழகு விலாசத்துக்குத் திலகம் போலமைந்திருந்தது. அந்தப்புரம் பெரும்பாலும் தந்தங்களால் இழைக்கப்பட்டிருந்தன. குமரிநாடும்

---

*அக்காலத்தே – இடைச்சங்க காலத்தே சேரநாடும் ஓங்கி நின்றது. சேரர்களை வானவர் என்று அழைத்தனர். வான்மீகி ராமாயணத்தில் சுக்ரீவன் சில இடங்களைக் குறிப்பிடுகிறான். அந்த இடங்களுள் கேரள நாடும் அதன் துறைமுகப்பட்டினமுமான முசிறியும் குறிக்கப்படுகின்றன. முசிறியை முரசிபந்தனம் என்று கூறப்பட்டுள்ளது. அது இன்றைய முசிறியல்ல.

அதன் சுற்றுப்புறமும் யானைகள் மலிந்த பூமியானாலும், வானவன் தேவி தந்தம் விளையும் சேரப்பூமிக்குரியவளாயிற்றே! தந்தம் தந்தத்துடன் இணைந்தும் இழைந்தும் காணப்பட்டது.

கவின்மிகுந்த அந்தப்புரம் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எப்போதுமே விளக்குகளை அணைக்கிற போதுதான் இரவில் பாண்டிய மன்னர் வருவதுண்டு.

இன்று விளக்கு வைக்கிற போதே வருகிறாரே என்று எண்ணி வியந்தனர் அந்தப்புரப் பணிப்பெண்கள்.

அவர்களுள் சில கொழுப்பெடுத்த தோழிகள் தங்களுக்குள் ரகசியமாக இனக் கவர்ச்சி நகைச்சுவையையும் பேசிச் சிரித்துக் கொண்டனர்.

ஒரே பிள்ளை, ஓர் இளவரசி உதயம் கண்டுவிட்டால் மன்னருக்கும் நிறைவாக இருக்கும்..

– இத்தனை வயது கழிந்தா?

– தேகத்துக்குத்தான் வயதே ஒழிய, உற்பத்திக்கு வயது ஏது?

– விளக்கு வைக்கிற நேரத்தில் நுழைந்தால் நல்ல லட்சணமுடைய ராஜகுமாரி பிறப்பாள் என்று அரண்மனை நிமித்திகர் சொல்லியிருப்பார்..

– விளையாட்டு மாதிரி யார் காதுகளிலாவது இந்தப் பேச்சு விழுந்துவிட்டால், பாறையிலே கட்டிக் கடலில் தூக்கி எறிந்துவிடுவார்கள்.

சின்னச் சிரிப்பு.

அந்தப்புரத்துள் நுழைந்து சென்ற பாண்டிய மன்னர் கடுங்கோன், நேரே தமது தனியறை நாடிச் சென்றார். அகில் துகள்களை நெருப்பில் தூவிக் கொண்டிருந்தார்கள் வேறு பணிப்பெண்கள்.

மன்னருடைய இந்தத் திடீர் வருகை வானவன் தேவிக்கு வியப்பை அளித்தது. ஏதோ முக்கிய அவசரச் செய்தியல்லாது மன்னர் இந்த நேரத்தில் வருகை தரக் காரணமே இல்லை என்ற நினைப்புடன், அறையை நோக்கி நடந்தாள்.

காலில் அணிந்திருந்த சிலம்புகள் ‘கணீர் கணீர்’ என்று ஓசையெழுப்பின. மஞ்சத்துக்கு நேரே போட்டிருந்த

பொன்னாலிழைத்த ஆசனத்தில் கவலையே வடிவாக அமர்ந்திருந்தார் கடுங்கோன் பாண்டியர்.

சிலம்போசை பட்டத்தரசியின் வருகை குறித்துக் கட்டியம் கூறியது. சற்றைக்கெல்லாம் வானவன் தேவி உள்ளே நுழைந்தாள்.

சற்றே நின்று தன் கணவரை உற்றுக் கவனிக்கிறாள்.

முகம் வாட்டங் கண்டிருக்கிறது.

இன்னொரு ஆசனத்தை அருகே இழுத்துப் போட்டு அமர்ந்தாள்.

“பெரும! ஏதோ மனக்கவலையுடன் வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்” வானவன் தேவியின் குரல் யாழாய் ஒலிக்கிறது.

கடுங்கோன் பாண்டியற் சாம்பிய முகத்துடன் அண்ணாந்து கவனிக்கிறார். “தேவி, எல்லாம் நம் செழியனால் வந்த கவலை. அவண் எல்லாக் கட்டுப்பாட்டுகளையும் மீறிவிட்டாண் என்று நினைக்கிறேன்.”

“அந்த மலயத்தீவுப் பெண்ணைப் பற்றித்தானே?”

“அது என் மகனை இழக்கச் செய்துவிடுமோ என்ற அச்சத்தையுண்டு பண்ணிவிட்டது. காலையில் மலயத்தீவு நோக்கிப் புறப்பட்ட செழியன், இன்னமும் திரும்பவில்லை. ஒருகால் இரவு தங்கி நாளை வருகிறானோ என்னமோ!”

“அப்படியெல்லாம் இராத் தங்குகிற அளவுக்கு அவனுக்குத் துணிச்சல் வந்துவிடவில்லை. எப்படியோ காதல் வயப்பட்டுவிட்டான். அதிலிருந்து அவனை எப்படி மீட்பது என்பது குறித்துத்தான் நாம் யோசிக்க வேண்டும்.” ப௦

“அதை யோசிக்கத்தானே இப்போது நான் அவசரமாக வந்தது தேவி! மலயத்தீவு மக்களையும் நாம் பகைத்துக் கொள்ள முடியாது. ஒரு தீவு மக்களை நாம் பகைத்துக் கொண்டாலும் பழந்தீவு பன்னிராயிரம் வரை நாம் பகையைச் சம்பாதிக்க நேரிட்டுவிடும். இவர்களை நாம் பகைத்துக் கொண்ட பிறகு கவாடபுரத்திலிருந்து ஒழுங்காக ஆட்சி செய்ய முடியாது. கடற்கோளைவிடப் பயங்கரம் இவர்களது பகைக்கோள்! நாளைக்கே நமது பகைவர்கள் நம்மீது போர் தொடுத்துவிடுவார்களேயானால், நாம் இந்தத் தீவு மக்களுடைய உதவிகளைத்தான் எதிர்பாக்க முடியும். இதே மக்கள், பகைவர்கள் பால் சேர்ந்து கொண்டால், இந்தக் குமரிநாட்டின்

*எழுநூறு காவதத் தொலைவு கொண்ட பரந்த எல்லையையே விழுங்கி ஏப்பம் விட்டுவிடுவார்கள். **பஃறுளியாற்றங்கரையில் வாழ்ந்து ஏழ்மதுரை நாட்டைக் கடலுக்கு இரையாக்கிவிட்டுக் குமரியாற்றங்கரைக்கு வந்திருக்கிறோம். இங்கே ஒரு குமரியின் காதலால் குமரிநாடு அழிந்து போகுமோ என்கிற பயம் தலைதூக்கி நிற்கிறது.''

தன் வீரமாப் புருஷரது கண்கள் கலங்கிவிட்டதைக் கவனித்த வானவன் தேவிக்கு மெல்லிய நடுக்கம் கண்டு வருந்தினாள்.

பெற்ற பிள்ளையால் இந்தக் குமரிநாடு தழைக்கும்; இடைச் சங்கப்பணி தொடரும் என்றெல்லாம் கனவு கண்டது போக இப்போது கண்ணீர் சிந்தும்படியான நிலைக்குக் கொண்டு வந்துவிட்டானே செழியன் என்று வேதனைப்பட்டாள். அவளுக்கு அப்போதைக்கு ஒன்றையும் யோசித்து மறுமொழி கூற முடியவில்லை. எனவே, இது குறித்துச் சிந்திக்க அவகாசம் தேவை என்பது போலுணர்ந்தாள்.

``நல்லது ஆடையணிகளைக் களைந்து, உணவருந்தி இப்படியே உறக்கங் கொள்ளுங்கள். நீங்கள் அரண்மனைக்குள் நுழைகிற நேரத்தில் செழியன் வருவான். கோபத்தால் நீங்கள் ஏதேனும் பேசிவிடுவீர்கள். அது சாதகத்தை விளைவிப்பதற்கு மாறாகப் பாதகத்தையுண்டுபண்ணிவிடக் கூடாது. நான் அரண்மனைக்குச் சென்று வருகிறேன். உணவை அனுப்பி வைப்பேன். நன்கு ஓய்வு கொள்ளுங்கள். மனதைப் போட்டு அலட்டிக் கொள்ள வேண்டாம். நாம் நமது முயற்சியில் தீவிரமாக இருப்போம். பயன் கடவுளுடையது.''

அன்பு மனையாளும் குமரிநாட்டுப் பட்டத்தரசியுமான வானவள் தேவி கூறியதைக் கேட்டு மவுனமாக இருந்துவிட்டார் கடுங்கோள் பாண்டியர்.

---

*சற்றேறக் குறைய 7000 கிலோ மீட்டர்.

**இதனை நிலந்தரு திருவிற்பாண்டியன் வெட்டுவித்தான். இவனது காலம் கி.மு.30,000 என்பர். இவன்தான் முதற்சங்கத்தின் மூலவன். சிவபெருமான், முருகவேள், முரஞ்சியூர் முடிநாகராயர் போன்ற 549 புலவர்கள் முதற்சங்கத்தில் தமிழை ஆய்ந்தனர்.

வானவன் தேவி அந்தப்புரத்தைவிட்டு வெளியேறினாள். அவ்விதம் செல்கையில் பணிப்பெண்களுக்குச் சில கட்டளைகளை இரகசியமாகப் பணிக்கிறாள்.

மன்னர் நுழைகிற போது தங்களுக்குள் தாறுமாறாக விமர்சித்துக் கொண்ட பணிப்பெண்களும் அவ்விதம் விமர்சித்துக் கொண்ட தவற்றை எண்ணித் தங்களுக்குள் நாணி ஒருவரையொருவர் உற்று நோக்கிக் கொள்கின்றனர்.

அந்தப்புரத்தைவிட்டு அரண்மனைக்கு வந்த பாண்டியப் பட்டத்து ராணியைக் கண்டு பணியாளர்கள் பரபரப்புக் கொள்கின்றனர். ஏதேனும் முக்கிய ஆலோசனைகள் அல்லது அலுவல்களின்றிப் பட்டத்தரசி இவ்வாறு அரண்மனைக்குள் பிரவேசிக்கமாட்டாள் என்பது அவர்களறிந்ததே!

அரண்மனையின் கீழ்முற்றத்துத் தனது தனியறையுள் நுழைந்தாள்.

உடன் எந்தப் பணிப்பெண்களையும் அழைத்து வராதது பலருக்கு வியப்பையளித்தது.

அரண்மனையில் இருந்த அமைதியான சூழ்நிலையிலிருந்து இன்னும் செழியன் வரவில்லை என்பது தெரிய வந்தது. அவன் எப்போது வருகிறானோ அதுவரை காத்திருப்பது என்ற முடிவுடன் தனது ஆசனத்தில் அமர்ந்து ஆலோசிக்கத் தொடங்குகிறாள் வானவன் தேவி.

இருநாழிகைப் போதுக்குப் பிறகு அரண்மனை வெளி வாயிலில் ஆளரவம் கேட்கிறது.

எட்டிப் பார்க்கிறாள். இளவரசன் வந்துவிட்ட செய்தி அவளது காதுகளுக்கு எட்டுகிறது.

மகாராணியார் வந்திருக்கிறார்கள் என்றும், மன்னர் அந்தப்புரத்துக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டார் என்றும் கேள்விப்படுகிறாள் செழியன்.

இது என்ன முரண்பட்ட செய்தியாக இருக்கிறது என்றும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்கிறான்.

ஆடையாபரணங்களைக் கூடக் களையாது நேரே தாயின் தனியறை நாடி வந்தான்.

அவன் உள்ளே நுழைகிற போதே ஏதோ மிகப் பெரிய பிரச்சினையை முன்னிட்டுத்தான் இந்த முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தன்னுள் தீர்மானித்துக் கொள்கிறான்.

அறையினுள் பிரவேசித்த மகனை அண்ணாந்து கவனிக்கிறாள் அன்னை வானவன் தேவி.

அவளது பார்வையில் சாந்தமில்லை.

அதில் சாட்டையடித் தோரணையிருந்தது. மகனை அமரச் சொல்லக்கூட அவளுக்கு விருப்பமில்லை. அப்படி ஒரு மதிப்பை அவனுக்குத் தர மனமில்லாதவளே போன்று, "எங்கேயடா காலையில் சென்றவன் இந்நேரம் பார்த்துத் திரும்புகிறாய்? உனக்கு ஏதேனும் ராஜாங்க பொறுப்புணர்ச்சிகள் இருக்கின்றனவா? அல்லது அரசியல் பிரக்ஞையாவது உண்டா? நீ ஓர் இளவரசன் என்கிற ஞாபகமாவது எழுவதுண்டா? ஏதோ அன்னாடிகள் மாதிரி நடந்து கொள்வது உன் தாய் தந்தையர்களுக்கு நீ தேடுகிற முதல் இழுக்கு; இந்தப் பரந்த பாண்டியப் பேரரசுக்கு இழைக்கிற இரண்டாவது கொடுமை" என்று பொரிந்து தள்ளினாள்.

அந்தத் தீட்சண்யமான சொற்களின் தாக்கம் தாளது மவுனமாக நின்றிருந்தான் செழியன்.

தனது பேச்சுக்கு எந்தவித மறுமொழியும் கூறாது நிற்கும் மகன் மீது மேலும் கடுப்புக் கண்டது.

"என்னடா! நான் கேட்பது புரியவில்லையா? குமரித் தமிழில்தானே பேசுகிறேன். மலயத்தமிழில் பேசினாலே நீ புரிந்து கொள்வாயே! இது புரியவில்லையா?"

"நன்றாகப் புரிகிறது அம்மா!"

"என்ன புரிகிறது?"

"மலயத் தமிழ்!"

"ஓ.. குமரித்தமிழ் மறந்துவிட்டதா?"

"மறந்துவிடும்படிச் சொன்னால் நான் மறக்கவும் சித்தமாயிருக்கிறேன்! ஏன், துறக்கவும் ஆயத்தமாக இருக்கிறேன்."

அதிகமாகப் பேச்சு நீளாது இப்படிக் கிடைத்த ஓரிரு சொற்களை வைத்துக் கொண்டு தாயும் மகனுமாகத் தங்கள் உள்ளக்

கிடக்கைகளை வெளிப்படுத்திப் புரிந்து கொள்ளச் செய்துவிட்டதில் ஓர் அமைதியான அதிருப்தி நிலவுகிறது.

ஆ! மகன் எத்துணைச் சூசகமாகத் தனது கருத்தை வெளிப்படுத்திவிட்டான்.

மறக்கவும் சித்தமாயிருக்கிறேன், துறக்கவும் ஆயத்தமாக இருக்கிறேன்..

இதிலிருந்து தெரிவதென்ன?

தனக்குத் தேவை அந்த மலைத்தீவு மங்கை. இதற்காக எதையும் இழக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன்.

இனிமேல் இவனிடம் பேச என்ன இருக்கிறது என்பது போன்ற உணர்வு ஏற்பட்டாலும் அவ்வளவு எளிதில் இந்த முடிவுக்கு வந்துவிட முடியுமா? அரசகுமாரனாயிற்றே..

வானவன் தேவி சிந்தனையுடன் நோக்குகிறாள்.

முகத்திலடித்தது போல மறுமொழி கூறிய மகனைக் கோபத்துடன் இப்போது நடத்தினால் அது வீணாகிவிடும். இதே வேகத்துடன் அவன் புரவி ஏறி மலயத்தீவுக்குச் சென்றாலும் மறுக்க முடியாது. முள்ளை முள் கொண்டு எடுப்பது போல ராஜதந்திரமாகப் பேசி இவனையும் வழிக்கு கொண்டு வர வேண்டும்; இந்த ராஜாங்கத்தையும் காப்பாற்ற வேண்டும்.

“உட்காரடா செழியா!” என்றாள் வானவன் தேவி.

ஆரம்பத்தில் இந்த மதிப்பளிக்க விரும்பாத அன்னை இப்போது அளிக்கிறாள். தலைக்கு மீறிவிட்ட தனயன்..

தனக்கு மேல் இரண்டு பெரிய தலைகளிருக்கின்றன என்கிற சிந்தனைக்கே முழுக்குப் போட்டவன் போலப் பேசுகிற தனயன்.

செழியன் தாயின் எதிரே அமர்ந்தான். தான் பேசியது எந்த அளவுக்கு அன்னையைக் காயப்படுத்தியிருக்கும் என்பதை அவன் நன்றாகவே உணர்ந்திருந்தான்.

“அம்மா! நான் உங்கள் மனம் புண்படப் பேசிவிட்டதாக நினைக்க வேண்டாம்” என்று சமாதானமாய்ப் பேசினான் செழியன்.

அவனது அந்தச் சமாதான வார்த்தையையே அடித்தளமாகப் பற்றிக் கொண்டு மேலே தனது பேச்சைத் தொடங்கினாள் வானவன்தேவி.

“மகன் பேசித் தாய்க்குப் புண்படுவதாவது? தாய் பேசி வேண்டுமானால் மகனுக்குப் புண்படலாம். இல்லையா செழியா?”

“..”

தாயார் தலைகீழாகப் பேசுகிறார்கள் என்பதும் அவனுக்குப் புரியாமலில்லை.

அவன் மவுனமாக இருந்தான்.

“செழியா! நான் உனது மலயத் தீவைப் புறக்கணிக்கவில்லை. காதல் என்பது இளமையில் ஏற்படும் ஒரு வியாதி மாதிரி. அதுவே வாழ்க்கையாகிவிட முடியாது. நான் இந்த வியாதிக்கு எந்த மருத்துவரையும் நாட விரும்பவில்லை. ஏனென்றால் மருத்துவத்துக்கு உட்பட்ட வியாதியல்ல அது மகனே! நீ ஒரு குடிமகனைப் போலப் பேசிவிட்டாய். ஒரு ராஜாங்கத்தைப் பரிபாலிக்கப் போகிறோம் என்கிற உணர்ச்சி இம்மியும் இல்லாமல் பேசிவிட்டாய். காதல் சாம்ராஜ்யம் உலகிலுள்ள எல்லா சாம்ராஜ்யங்களைவிடப் பெரிதுதான். மறுக்கவில்லை. ஆனால், அதற்குக் கொடி கிடையாது. வெண்கொற்றக் குடை கிடையாது. கோட்டை கிடையாது அரண் கிடையாது. ஆனால், பகை அதிகம். அதனால்தான் அது எப்போதோ ஒருமுறை வெற்றி பெறுகிறது. உனது காதலும் வெற்றி பெற வாழ்த்துகிறேன். ஆனால், ஒன்றைச் சிந்தித்துப் பார். உனக்கு ஒரு துணை தேவை. இளம் ரத்தம் காதலித்து அந்தத் துணையைத் தேடுகிறது. ஆனால், இந்த அரசாங்கத்துக்கு ஒரு வாரிசு தேவையல்லவா?

“ஏன், நாகநீலி பெற்றெடுக்கிற குழந்தை வாரிசாக முடியாதா?”

“நிச்சயம் முடியும். ஆனால் பாண்டியக்குடி – நெடியோன் வளர்த்த குடி. காட்டுமிராண்டிக் குடியாகிவிடும். சிவபெருமானும், முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதிக்கிழவனாரும் போன்ற ஐநூற்று நாற்பத்தொன்பதின்மர் வளர்த்த தமிழ், இனி இந்த இடைச்சங்கம் வளர்க்கப் போகிற தமிழ் அநாகரிகத்தைக் காணப் பின்னோக்கிச் சென்றுவிடும். நாகநீலியை நீ மணந்து கொள். நாங்கள் குறுக்கே நிற்கவில்லை. ஆனால், பெயருக்கு ஒரு பட்டத்தரசியும் அவள் மூலம் ஒரு வாரிசையும் கொடுத்துவிடு. இது பெற்றவர்கள் யாசிக்கும் பிச்சையாகவே கருதி ஏற்றுக் கொள்ளடா!”

தாயின் கண்களில் கலகலவென்று நீர்.

தொண்டை கம்மியது.

ஒரு தாயின் கண்ணீர் எதையும் சாதித்துவிடும் என்பது போல இளகி வந்தான் செழியன்.

“இதற்காக நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுகிறீர்கள் அம்மா?”

“நமது ராஜபரம்பரையில் ஒருத்தியை மணந்து அரண்மனையில் வை. ஒரு ராஜரிக மாளிகையை கட்டி அதில் நாகநீலியை வை. நாங்கள் தடை சொல்லவில்லை.”

சிறிது நேரம் சிந்திக்கிறான் செழியன்.

எப்படியோ பெற்றவர்கள் சம்மதத்துடன் இது நிகழுமா என்று ஐயப்பட்ட மனத்துக்கு ஓர் ஆறுதல்.

பெற்றவர்கள் சம்மதமில்லாது நாகநீலியின் கரம் பற்றவும் மலயத்தீவு மக்கள் சம்மதிக்கமாட்டார்கள். ஏதோ முரட்டுத்தனமாக இரண்டொரு வார்த்தைகளைக் கேட்ட அன்னையை அச்சத்திற்குள்ளாக்கி இந்த அளவுக்கு இறங்கி வந்ததே மேலாகப்பட்டது செழியனுக்கு!

“நான் ஒன்றைப் பகிரங்கமாகக் கேட்கலாமா தாயே?”

“நன்றாக கேள் மகனே!”

“நாகநீலி இரண்டாம் பட்டத்தரசியாகக் கூட யோக்கியதையில்லாமல் போய்விடுமா?”

“நீ முதலில் இதற்குச் சம்மதி. நான் உனது தந்தையாரை வழிக்குக் கொண்டு வந்து நாகநீலிக்கான உத்தரவாதத்தைப் பெறுகிறேன்.”

“அப்படியென்றால் எனது திருமணத்துக்கான முயற்சிகளில் நீங்கள் தயங்காமல் இறங்கலாம் தாயே!”

ஆ! இதயத்தில் பால் வார்த்தது போலிருக்கிறது.

தனது வெற்றியைக் கணவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற முழுமையான தெம்புடன் எழுந்தாள் பாண்டியராணி வானவன்தேவி.

நாளையே திருமணத்துக்கான ஏற்பாடுகளில் முழு மூச்சாக இறங்க வேண்டும்.

# அத்தியாயம் - 04

குமரிநாட்டின் இளவரசன் செழியனுக்குத் திருமண ஏற்பாடாகிவிட்டது என்கிற நற்செய்தி எழுநூறு காவதத் தொலைவுக்கும் மட்டுமல்லாது குமரி மலைக்கு அப்பால் இருந்த சேர நாட்டுக்கும் பரவியது.

பெண்ணோ சேரர் குடியிலிருந்து எடுக்கிறார்கள் என்றால் எவ்வளவு பெரிய மகிழ்ச்சியான செய்தி. தாய் வழியும் சேரர் குடி; மகனுக்கும் சேர குலம். அரசாங்கம் பெரிதாகப் பலப்பட்டு வருகிறது என்கிற நிறைவு.

அந்நாளில் தமிழகத்தில் பாண்டியப் பேரரசுக்கு இணையாகச் சேரர்க் குலம் அடுத்துப் பல குறுநிலவரசர்கள்.

காவிரிக்கரையில் சோழர்குலம் உதயமாகிக் கொண்டிருந்தது. ஆனால் அது வல்லரசாகத் திகழவில்லை. பொருநை நதிக்கும் குமரியாற்றுக்கும் இடைப்பட்டத் தலைநகரமாம் – குமரியாறு கடலோடு கலக்கும் சங்கமத் துறையில் எழுந்து நின்ற தலைநகராம் கவாடபுரத்தில், கோலாகலமான திருவிழாவாக இத்திருமணம் நடைபெற மன்னர் கடுங்கோன் பாண்டியர் உத்தரவிட்டிருந்தார்.

கலங்கிப் போன மனத்தில் இப்போது கலசம் வைத்தது போலத் தமது பட்டத்தரசி மகனைத் திருத்திக் கொண்டு வந்த இச்செய்கையே ஒரு மாபெரும் வெற்றியாயிற்றே!

கவாடபுரத் தலைநகரில் இப்படியான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் இதே நேரத்தில் –

மலயத்தீவின் கடற்கரையில் நாகநீலியின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தான் இளவரசன் செழியன்.

நாகநீலியை அவனால் தேற்றவே முடியவில்லை.

தன் தாயார் தன்னிடம் சொன்ன வார்த்தைகள் அனைத்தையும் அவன் தினமும் கொட்டிப் பார்க்கிறான். நாகநீலியால் நம்ப முடிகிறதேயொழிய ஏற்க முடியவில்லை. முதல் பட்டத்தரசியாக வருவோம் என்கிற தனது கனவு இடிந்து சிதிலமாகிக் கொண்டிருப்பதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

இச்செய்தி குறித்து அவள் இன்னமும் தனது பெற்றோரிடம் எடுத்துரைக்கவில்லை.

இச்செய்தி இனிதான் பக்கத்துத் தீவுகளில் பரவ வேண்டும். தனது குலமரபினை எடுத்தியம்புகிறான்.

“எப்படிக் கச்சையணிவதில் நீ உனது குலமரபை முன் வைத்துப் பேசுகிறாயோ, திருமணம் பற்றியதில் நான் எனது குலமரபை மதித்தே ஆக வேண்டும். இல்லையேல் நான் அரசைத் துறக்க நேரிடும். மலயத்தீவில் நானும் ஒரு மனிதனாக உலவ முடியுமேயல்லாது ஒரு மதிப்பு வாய்ந்த மன்னனாக நிமிர்ந்திருக்க முடியாது. ஒருகால் நான் அரசைத் துறப்பேனேயானால், மலயத்தீவு மக்களே என்னைப் புறக்கணித்தாலும் வியப்பதற்கில்லை.”

அவனது வாதங்கள் நியாயமானவைகளாகப் படுகின்றன. அவள் ஒருவாறு தனது சம்மதத்தை அரைமனத்துடன் தெரிவித்தாள். ஆனால், அடுத்துத் தன்னை இரண்டாம் பட்டத்தரசியாக்கிக் கொள்வதில் எந்தவிதத் தங்குதடையுமிருக்கக் கூடாது என்பதில் சத்தியம் பெற்றுக் கொண்டாள்.

இப்போது நெஞ்சிலிருந்து சுமை கொஞ்சம் கொஞ்சமாக இறங்கிக் கொண்டிருக்கிறது.

அவள் எழுந்து கொள்கிறாள்.

இப்படித் திடுமென்று அவள் எழுந்து கொண்டதைக் கவனித்த செழியனுக்கு ஒன்றும் புரியவில்லை.

இன்னும் நேரமிருக்கிறதே.

“ஏன் நீலி புறப்பட வேண்டுமா?”

“ஆமாம்; நீங்கள் வேளையோடு அரண்மனைக்குச் செல்லுங்கள்.”

இது என்ன புதுத்திருப்பம்?

“என்ன நீலி! இன்றைக்கு மட்டும் எதற்காக வேளையோடு அரண்மனைக்கு அனுப்புகிறாய்?”

“இன்று முதல் இந்தப் பயிற்சியை நான் எடுத்துக்கொள்ளுகிறேன்.”

“புரியவில்லை.”

“நாளை உங்களுக்குத் திருமணமானதும் நீங்களே வேளையோடு புறப்பட வேண்டும் என்று எழுந்து கொள்வீர்கள். நான் ஏமாற்றம் அடையக் கூடாதல்லவா? அதனால்தான் இந்தப் பயிற்சி.”

பேயறைந்தவன் போலக் கவனிக்கிறான் இளவரசன் செழியன்.

“இளவரசரே! இப்போதும் நான் சற்று மனம் திரும்பினால் உங்களை அனுபவித்துவிட முடியும். நீங்கள் முன்பு சொன்ன வார்த்தைகள்தாம். நீங்களும் மறுக்க முடியாது நானும் இதையேதான் முன்பும் சொன்னேன்; இப்போதும் சொல்லுகிறேன். அந்த அனுபவத்துக்குப் பிறகு நீங்கள் என்னைத் தேடியலைகிற சூழ்நிலையையும் உண்டுபண்ண முடியும். ஆனால் நீங்கள் வேறு; நான் வேறாக நான் எண்ணியதில்லை; இனி எண்ணப் போவதுமில்லை. பாண்டிய குலத்தில் கலப்பற்ற ரத்தம் பாயட்டும். பிறகு நான் கலந்து சங்கமித்துக் கொள்ளுகிறேன்.”

ஓ.. எத்தனை பெரிய தத்துவத்தை எவ்வளவு தியாக உணர்வுடன் பேசுகிறாள் இந்த நாகநீலி.

அவளை அப்படியே சேர்த்து அணைத்து இறுக்கித் தனது ஆசைதீர மகிழ்ச்சியைத் தெரிவித்தான். இவ்விதம் அணைப்பது இதுவே முதல் தடவையாதலால், நாகநீலியின் உடற்கட்டின் இரும்புத் தன்மையைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனான்.

எவ்வளவு வலிவான தேகம் இது.

அடுத்து இருவரும் அந்த அணைப்பில் தங்களை அடிமைப்படுத்திவிட்டதால்.. பெண் தளர்ந்தது..

அறியாத சுகம்..

நாகநீலிக்கு அனுபவித்துவிட்டால்தான் என்ன என்று தோன்றுகிறது.

செழியனுக்கோ அனுபவித்தேவிட வேண்டும் என்கிற தீர்மானம் எழுகிறது.

“நாகநீலி!”

“ம்ம்...!”

“நீதான் எனது முதல் காதலி. அந்தச் சங்கமம் இன்றே இங்கேயே நடந்துவிட்டால் என்ன?”

ஒருகணம் யோசிக்கிறாள்.

சே! முதலில் சொன்ன சொற்கள் என்னாகும்?

“இளவரசரே! வேண்டாம். பாண்டியகுலம் பரிசுத்தமாகத் தொடங்கட்டும்.”

“நீலி.. ஒரே ஒரு முத்தம்.”

“மூச்! அதுவும் பரிசுத்தமாகவே ஆரம்பமாகட்டும்.”

“இந்த அணைப்பு..”

“நான் எதிர்பாராதது. இல்லையென்றால் அனுமதித்து இருக்கமாட்டேன்.”

“இதில் பரிசுத்தம் கெடவில்லையா?”

“நிச்சயமாகக் கெடவில்லை.”

“எதுவும் நாம் நினைத்தால்தான்..”

“இது விபசாரிகள் பேசுகிற பேச்சு.”

“நீலி!”

“தயவு செய்து நடைபெறவிருக்கும் திருமணம் இனிது முடியட்டும். பிறகு நமது திருமணம் ஆரம்பமாகட்டும். அதுவரை குலமரபு பவித்திரத்தை நாம் கடைப்பிடிக்க முயல்வோம். இப்போது நான் அவசரமாகப் புறப்படுவதற்குக் காரணமிருக்கிறது. உங்கள் திருமணச் செய்தி இன்னும் மலயத்தீவு காதுகளுக்கு எட்டவில்லை. அது எட்டுமுன் நான் எனது தந்தையாரைச் சமாதானம் செய்ய வேண்டும். எப்படிச் சமாதானப்படுத்துவது என்பது ஒரு பெரிய கேள்விக் குறியாக இருந்தாலும், சமாதானப்படுத்தித்தானே ஆக வேண்டும்?”

நாகநீலியின் கண்களில் நீர் மீண்டும் திரையிடுகிறது.

“நீங்கள் புறப்படுங்கள்..”

வேறு எந்தவித மறுமொழியையும் கூறமுடியாத இளவரசன் செழியன் புறப்பட்டான்.

வழக்கம் போல் அவன் செல்கிற திசை நோக்கிக் கவனிக்கிறாள்.

முன்பெல்லாம் மகிழ்ச்சி நிறைந்த பார்வையுடன் நோக்குவாள். இப்போது அவளது கண்களில் சோகம் கூடுகட்டிக் கொண்டிருந்தது. கண்ணீர், தாரை, தாரையாகவே வழியத் தொடங்கியது.

ஆனித்திங்களில் ஓர் அற்புத நன்னாளில் குமரி நாட்டு இளவரசன் செழியனுக்கும் கொல்லத்துக் குமரி குணசேகரிக்கும் கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது.

பொருநை நதியாள் பொங்கி மகிழ்ந்தாள்!

குமரியாற்றழகி குதித்துப் பூரித்தாள்!

குமரியாறு கடலோடு கலக்குமிடத்தில் பிரம்மாண்டமாக எழுந்திருந்த கவாடபுரத்து தலைநகரமே தனிப்பேருவகையெய்தி நர்த்தனம் புரிந்தது. அந்தக் கோலாகலமான திருமணத்துக்கே மகுடம் வைத்தது போல ஒரு நிகழ்ச்சி நடந்தது. அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையுமே மெய்சிலிர்க்கச் செய்து வாய் பிளக்க வைத்தது.

அது..

மலயத்திவின் தலைவன் மலையமான் கீர்த்தி என்பான், யானைத் தந்தங்களாலேயே ஓர் அற்புதமான தேரை உருவாக்கி அளித்த பிரமிக்கத்தக்க வெகுமதிதான். இருவர் மட்டுமே அமர்ந்து செலுத்தவல்ல அந்த வெண்டேர் – வெண்தேர் – வெள்ளைத் தேர் கவாடபுரத்தின் மிகப்பெரிய காட்சிப் பொருளாகத் திகழ்ந்தது.

திருமணத்துக்கு நாகநீலி வரவில்லை. ஆனால், மலயத்தீவு மக்களே திரண்டு வந்தனர். மற்றும், அடுத்தடுத்திருந்த அனைத்துத் தீவுகளின் தலைவர்களும் வருகை தந்திருந்தனர். மலயமான் கீர்த்தி, வெண்தேரைத் திருமணப் பரிசாகக் கொடுக்கிற போது, இளவரசன் செழியனுக்கு மட்டுமே கேட்குமாறு சொன்ன வார்த்தைகள்..

“இளவரசரே! இந்தத் தேரை உங்களுக்குப் பரிசாக வழங்கினாலும், இதில் நீங்கள் மட்டுமே ஏறிச் செலுத்தலாம். என்றைக்கு நாகநீலியை நீங்கள் மணக்கிறீர்களோ, அன்றைய முதற்கொண்டு, அவள் உங்கள் பக்கத்தில் அமரலாம். மற்றபடி இதனை யார் செலுத்தவும் அனுமதியோம்! எவர் உட்காரவும் சம்மதியோம்.”

ஒ.. எத்தனை கடுமையான உத்தரவு.

செழியன் சொன்னான்:

“நானே நாகநீலியை என்று மணக்கிறேனோ, அன்றுதான் இந்தத் தேரில் அமருவேன். இந்த வெண்டேர் பவனி எங்களிருவரையும் ஏற்றி மகிழ்வதாக இருக்கும்!”

செழியனின் இந்த உத்தரவாதம், மலயமான் கீர்த்தியின் உச்சியைக் குளிரச் செய்தது.

ஆ! இளவரசர் உண்மையிலேயே நாகநீலியை மறக்கவில்லை. அவரது இதயத்தில் தனது மகள் பூரணமாகக் கொலுவீற்றிருக்கிறாள்.

நம்பிக்கையுடன் மலயத்தீவு மக்கள் விடைபெற்றனர்.

நம்பிக்கையுடன் நாகநீலியும் இச்செய்தியைக் கேள்விப்பட்ட கணம் முதல் காத்துக் கிடந்தாள்.

திருமணமாகி ஏறத்தாழ மூன்று திங்கள் வரை செழியன் கவாடபுரத்து அலுவல்களில் மூழ்கிக் கிடந்தான். திருமண தினத்தன்றே அவனுக்கு மகுடாபிஷேகம் செய்விக்க வேண்டும் என்றுதான் பட்டத்தரசி வானவன் தேவி விரும்பினாள். ஆனால், மன்னர் கடுங்கோன் பாண்டியர் இது விஷயத்தில் சற்றுப் பிடிவாதமாக இருந்துவிட்டார்.

நாகநீலி விஷயத்துக்கு ஒரு முற்றுப்புள்ளியைப் பூரணமாக வைக்காது மகுடாபிஷேகத்தில் இறங்குவது அர்த்தமுடையதாகாது என்று எண்ணி மௌனம் சாதித்துவிட்டார்.

பட்டத்தரசி வானவன் தேவியும் தனது அன்பு மகன் செழியனிடம் ஓர் அன்புக் கட்டளையுடன் சில விஷயங்களை யாசித்தாள். எப்படியும் அரியணை ஏறுகிற வரை நீ சர்வ ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும் என்றும், அண்டை நாட்டு மன்னர்கள் பாண்டிய நாட்டைப் பற்றித் தவறாக எண்ணிவிடக் கூடாதென்றும், மேலும் சேரர் குடியில் பெண் எடுத்திருக்கும் நீ ஒரு காட்டுவாசியுடன் தொடர்பு கொண்டிருக்கிறாய் என்பது தெரிய வந்தால் மறுகணமே போர் மூண்டாலும் வியப்பதற்கில்லை என்றும், இவ்வாறு போர் மூண்டு வெற்றி கண்டால் ஆயிற்று. தோல்வி காணுவோமேயானால் மலயத்தீவு மட்டுமல்ல, வேறு எந்தத் தீவினரும் உனக்கு உரிய மரியாதை தர மறுப்பது ஒருபுறமிருக்கட்டும்! நமது வாழ்வே ஓடி ஒளிந்து தலைமறைவாகி மரியாதையைக் கெடுத்துக் கொள்கிற வாழ்வாக அமைந்துவிடும் என்று பெரிதாக உபதேசம் செய்து அந்த உபதேசத்தையே ஒரு யாசிப்பு மாதிரி வேண்டி நின்றாள்.

அன்னையின் இந்தப் பகிரங்க விளக்கம் யோசித்துப் பார்த்ததில் செழியனுக்குச் சரியாகவே தென்பட்டது. அதுவும் குறிப்பாக 'ஓடி ஒளிந்து தலைமறைவாகி மரியாதையைக் கெடுத்துக் கொள்கிற வாழ்வாக அமைந்துவிடும்' என்ற வார்த்தைகள் ஒருகணம் அவனைத் திணறச் செய்தன.

“அம்மா! எப்படியோ நீங்கள் சொல்கிற மாதிரி ஒரு ஆறு மாதக் கட்டாயத்துக்கு நான் ஒதுங்கியும் பகிரங்கப்படாதும் நடந்து கொள்ளலாம். அதற்கு மேலாகிலும் நாகநீலியை உங்கள் மருமகளாக ஏற்றுக் கொள்வீர்கள் அல்லவா?”

செழியன் இவ்வாறு கூறுகிற போது மிகவும் பரிதாபமாகவுமிருந்தது.

அன்றைக்கு நாகநீலியின் பிறந்த தின வைபவத்தன்று ஒருநாள் முழுவதும் மலயத்திவிலிருந்துவிட்டுத் திரும்பிய வேகத்தில் பேசிய செழியனாக இப்போதில்லை. பொறுப்புகளையுணர்ந்த செழியன் போலப் பேசினான். முன்பு வருவதுணராது பேசிவிட்டான். இப்போது, வருவதையுணருகிறான். எல்லாம் ஆட்சி இருக்கிற வரைதான் மரியாதை என்பதையும் அறிகிறான்.

ஆனால், காதலுக்கு இந்த அனைத்தும் தேவையில்லை. மலயத்தீவின் ஒரு மருங்கே நாகநீலியுடன் வாழ்ந்தால் போதும் என்று செங்கோலற்ற அந்தக் காதல் சாம்ராஜ்யம் அறிவுறுத்தினாலும், தீவைச் சார்ந்த மக்கள் தன்னை மதிக்க வேண்டுமல்லவா! வாழ்வு என்பதுதான் என்ன? வெறுங்காதலில் சிக்கி, அது வாழ்வாக மலர்ந்து சோபனங்களை அனுபவித்து, சுகதுக்கங்களைக் காண்பது மட்டும் வாழ்வாகிவிட முடியுமா? மனிதர்கள் என்ன பறவை இனங்களா, விலங்கினங்களா?

மரியாதை, மானம், மதிப்பு இன்னும் பிற எத்தனையோ நிறைந்தல்லவா வாழ்க்கை! காமத்தைத் துய்க்காத வரை காதல். அது முடிந்த பிறகு, அந்தச் சுவை தெளியத் தெளியத்தான் காதல் என்பதும் ஒருவித மயக்கம் நிறைந்த போதை என்பதையுணரக் கூடிய அனுபவத்தைச் செழியன் பெற்றிலன். எனினும், தாயின் போதனையில் தெறித்த சில சொற்கள் அவனைப் பயங்கொள்ளச் செய்து சிந்திக்கச் செய்தன. இந்தச் சிந்தனை முன்பு வராத நிலை வேறு! எடுத்தியம்பிப் பின்னர் ஏற்பட்ட நிலை வேறு!

மகன் செழியன் கேட்ட பாணியும், அவனது முக பாவங்கள் தெரிவித்த செய்திகளையும் கொண்டு குமரிநாட்டுப் பட்டத்தரசி வானவன் தேவி மாறுபட்டும் வேறுபட்டும் இவ்வாறெல்லாம் சிந்திக்கிறாள். ஆயினும், மகனுடைய கேள்விக்கு என்ன மறுமொழி

கூறுவது என்பது குறித்துத்தான் உடனடியாகச் சிந்திக்க முடியவில்லை.

ஆறு மாதத்துக்குள் இதனை எவ்வாறு நிறைவேற்றிவிட முடியும்? அது அவ்வளவு எளிதான செயலா?

“எண்ணம்மா, நான் கேட்ட கேள்விக்கே ஆறு மாதம் கழித்துத்தான் விடை சொல்லுவீர்களா?”

“ஆறு துடிப்புகளிலும் மறுமொழி கூறிவிடலாம். செழியா! உன் தந்தையாரை ஒருநிலைக்குக் கொண்டு வந்து அவரது பரிபூரணச் சம்மதத்தைப் பெற்று இக்காரியத்தில் இறங்கினால் ஆயிரம் காலத்துப் பயிராகத் திகழும். அவசரப்படக் கூடாது.”

“தந்தையாருக்கு இதில் சம்மதம் இருப்பதாக ஒருமுறை சொன்னீர்கள்.”

“இருக்கிறது. இல்லையென்று நான் மறுக்கவில்லை. இதனை ஆறு மாதத்தில் முடித்தாலும் முடிக்கலாம். அடுத்த மாதமே நிறைவேற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தந்தையாரை மெல்ல எனது வழிக்குக் கொண்டு வந்து, பிறகு எடுத்துச் சொல்கிற முறையில் எடுத்துக் கூறி, இந்தத் திருமணத்தைப் பலராறியச் செய்யலாமா, காதும் காதும் வைத்த மாதிரி முடிக்கலாமா என்றெல்லாம் தெரிந்துகொள்ளச் சில நாள்கள் ஆகலாம் அல்லவா? ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறுவேன்; இந்தத் திருமணம் நடந்தே தீரும். கொஞ்ச கூடக் கவலை வேண்டாம். இன்னொன்றையும் நீ சிந்தித்துப் பார்க்க வேண்டும். தந்தையா சம்மதத்தைப் பெறுவது சுலபமானாலும் உனது மனையாள் குணசேகரிக்கு இது விஷயம் துப்புரவாகத் தெரியாது; தெரியவும் நியாயமில்லை. பின்னர் எப்படியும் தெரியப் போகிறது. அப்போது அவள் என்னிடம் கேட்டு முறையிடுவாள், நானும் ஒன்றுமறியாது போல நடித்து அவளைத் தேற்றி வழிக்குக் கொண்டு வந்து அவளது சம்மதத்தைப் பெற வேண்டும். அப்படிச் சம்மதம் பெறுவதென்பது எளிதான காரியமல்ல. நாளை அவள் மூர்க்கத்தனமாக மறுக்கலாம். அவளது மறுப்பை நாம் அலட்சியம் செய்யவும் முடியாது. அது பகையாகி யுத்தத்தில் முடிந்துவிடவும் கூடாது. மேலும், நீ நாகநீலியை மணப்பது அரசியல் காரணமல்ல. அரசியல் காரணமானால் ராஜாங்கமே இடம் கொடுத்துவிடும். இது காதல் காரணம். அதுவும், ஒரு சாதாரண

காட்டுவாசிப் பெண்ணை மணக்க ஆசைப்படுகிறாய். நாகரிகம் வளர்த்த மரபில் வந்த நமக்கு இது அநாகரிகத்தைப் பறைசாற்றுவதாகும். இதையும் நாகரிகமாக்கி நாகரிகமான முறையில் இத்திருமணத்தை முடிப்போமேயானால் எதற்கும் நல்லது; யாருக்கும் நல்லது.”

அன்னையின் இந்த நீண்ட பேச்சு ஒரு அனுபவ காவியத்தையே படித்து முடித்தாற் போலிருந்தது செழியனுக்கு. எதையும் தீர்க்க ஆலோசித்து ஒரு நல்ல முடிவுடன் அன்னையின் ஆசீர்வாதம் கிடைக்கும் என்று அவனது நெஞ்சு நிறைவாக நம்பியது.

ஆனால் விதி?

அத்துடன் அவன் செய்து கொண்டிருக்கும் உடன்பாடு அவனறியாத ஒன்றல்லவா?

# அத்தியாயம் - 05

எப்படி முயன்றும் மன்னர் கடுங்கோன் பாண்டியருடைய செவிகள், பட்டத்தரசி வானவன் தேவியின் நாவுக்கு இடமளிக்க மறுத்துவிட்டன. நாகநீலியை மருமகளாக ஏற்க அவரது நெஞ்சு கொஞ்சமும் சம்மதிக்க மறுத்தது. தமக்கு வேண்டுமானால் ஏதேனும் அகௌரவங்கள் வந்து முளைக்கட்டும். தமது அருமந்த புதல்வன் வாழ்வில் இவ்வாறான அகௌரவங்கள் முளைக்கக் கூடாது என்பது மன்னருடைய திட்டவட்டமான முடிவாக இருந்தது. காரணம், தமிழில் நன்கு பாண்டியத்தியமுடைய செழியனால் இடைச்சங்கம் கடைத்தேறி முழுமை பெற வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். எனவே அவரது போக்கு ஒரு பிடிவாதத்தின் கீழ் வட்டமிட்டது.

நாள்கள் நகர நகர ஏதேனும் அசம்பாவிதமான நிலை ஏற்பட்டு, எதிர்பார்ப்பது ஒன்று, நடைபெறுவது மற்றொன்றாகி, அரசாங்க நிலைக்கு ஏதேனும் குந்தகம் விளையுமோ என்கிற அவநம்பிக்கையும் முகிழ்த்தது.

அந்த வெண்டேரை – வெள்ளைத் தேரை – தந்தத்தாலான வெண் தேரைப் பார்க்கப் பார்க்கப் பரவசமடைவதற்கு மாறாகப் பற்றியெரியச் செய்தது. ஏதோ ஓர் உற்பாதத்தைத் தேடித் தரவே இந்த வெண்தேர் பரிசளிக்கப்பட்டிருக்கிறது என்று மன்னருடைய மனம் கருதியது.

இந்த விஷயம் பற்றி அமைச்சரவை கூட்டி ஆலோசிக்க அவரது மனம் உடன்படவில்லை. ஒன்றை ஆலோசிக்கப் போய் அது மற்றொன்றாக முடிந்து அதுவே அரசியல் பிரச்சினையாகிவிடக் கூடாது.

தம் பட்டத்தரசி வானவன் தேவியிடம் எவ்வளவு வாதித்தும் அவருடைய பேச்சுக்கள் எடுபடாமல் போய்விட்டன. பட்டத்தரசி இது விஷயத்தில் மிகவும் பிடிவாதமாக இருக்கிறாள்.

மகனுடைய திருமணத்தை அவளது செல்வாக்கு மிக்க வன்மையாலும் சர்வவல்லமை பொருந்திய தாய்மைச் சக்தியாலும் முடித்து வைத்தவள். அப்பேர்ப்பட்டவள் இப்போது நாகநீலியின் காதலுக்காகவும் வாதாடுகிறாள்.

எவ்வகையிலும் அவளை இரண்டாம் மருமகளாக ஏற்பேன் என்று வஞ்சினம் கூறி, முதல் மருமகள் குணசேகரியைத் தன்வயப்படுத்தவும் சென்றிருக்கிறாள்.

இப்படியான பிரச்சினைகள் இருக்க, இந்த விஷயம் அமைச்சரவையில் வைத்து வேறுவிதமான மாற்றங்கள் கண்டுவிடக் கூடாதே என்பதில் அவரது கவனம் மிகவும் ஆழ்ந்து அலசியது. அமைச்சரவைக்கு நாகநீலியின் காதல் விஷயம் தெரியாத ஓர் இரகசியம் அல்ல. ஆயினும் அது ஆய்வுப்பூர்வமாக எடுத்து வைக்காது, மறைவாகவே நிகழ்ந்து வருவதில் அவர்கள் பெரிதாகக் கவனம் செலுத்தவில்லை.

இது குறித்துத் தாமே யோசித்துத் தமது முடிவின்படி செயல்படச் சிந்தனையைக் குழப்பிக் கொண்டிருந்தார் கடுங்கோன் பாண்டிய மன்னர்.

வானவன் தேவியின் வாதத்துக்கே மூல வித்துவாக அமைந்துவிட்ட அந்த வெண்தேரைச் சுக்கல் சுக்கலாக உடைத்தெறியலாமா என்று கூடக் கோபப்பட்டுக் கொண்டார்.

“எத்துணைத் துல்லியமான காதல் பரிசாக அந்த மக்கள் தந்து மகிழ்ந்து இருக்கிறார்கள். அந்தத் தூய மக்களின் ஆதரவு நமது மகனது எதிர்காலத்திற்குப் பாதுகாவலாகவும் சமாதானச் சூழ்நிலையாகவும் இருக்கும்” என்று வானவன் தேவி கூறியது அவரது செவிகளில் இன்னமும் ரீங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

இதற்கு என்ன வழி?

என்ன வழி?

அரண்மனையைவிட்டு வெளியே வந்த கருங்கோன் பாண்டியர், சங்கமத்துறையை ஒட்டினாற் போலமைக்கப்பட்டிருந்த பூங்காவினுள் நுழைகிறார்.

கவாடபுரத் தலைநகரின் மிக அழகிய அரசப்பூங்காவான அதில் பல வண்ணப்பூக்கள் பூத்துக் குலுங்கி மணத்துக் கொண்டிருக்கின்றன. நடுவே ஓர் அழகிய மணி மண்டபம். அதன் எதிரே நீராடுதுறை தொலைவில் குமரியாறு கடலோடு சங்கமமாகி எழுப்பும் பெருங்கூச்சல் இதமாக – இனிமையாகக் கேட்கிறது. அதன் பெருத்த காற்று அங்கிருந்து தொடர்ந்து, சிறுகச் சிறுகக் குறைந்து

அரண்மனைப் பூங்காவைத் தொடுகிற போது போதுமான இதத்தையளிக்கிறது.

மணிமண்டப மேடையில் அமர்ந்து கொண்டு தெற்கு நோக்கிக் கவனிக்கிறார் கடுங்கோன் பாண்டியர். தொலைவில் – கண்ணுக்கெட்டிய தூரத்தில் பச்சைப் புவியாகத் தெரியும் மலயத்திவை மிகவும் எரிச்சலுடன் கவனிக்கிறார்.

அந்தத் தீவையே சுட்டுச் சாம்பலாக்கிவிடலாமா என்று அவரது மனம் கருவிக் கொள்கிறது.

எத்தனை பெரிய பிரச்சினையை உண்டு பண்ணிவிட்ட தீவு அது. எவராவது தமது மனத்துக்கு இனியவர் வரமாட்டாரா என்றும் எதிர்பார்க்கிறார். தனது மனத்திலுள்ள பாசத்தை இறக்கி வைக்க அப்படி ஒரு சுமைதாங்கியை அவர் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிற மாதிரி அலைமோதுகிறார்.

ஆனால், சுமையை இறக்கி வைக்க எதிர்பார்த்ததற்கு மாறாக, சுமை ஏற்றிப் பளுவையுண்டுபண்ண தொலைவில் மருமகள் குணசேகரி வந்து கொண்டிருந்தாள். இந்த நேரத்தில் இந்த இடத்தில் நாடி இவள் தனிமையில் வருவானேன்?

ஒ.. வானவன் தேவி இவளிடம் நாகநீலியைக் குறித்து ஏதோ பேசி இருக்க வேண்டும். அந்த பேச்சின் சாராம்சமாக இவள் தன்னை நாடி வர வேண்டும் என்ற அவர் நினைக்கிறார்.

நினைக்கிற போதே நெஞ்சில் சுமை கூடுவதாக உணர்கிறார். இவளால் எந்தப் பிரச்சினை குறித்து எந்தப் பாதகமும் ஏற்படக் கூடாதே என்று தம்முள் பிரார்த்தனையும் செய்து கொள்கிறார்.

சிலம்பொலிகளின் கணீர் சத்தம் தம்மை நெருங்கி வரவர, நெஞ்சில் ஏறிய சுமை மேலும் மேலும் கனத்துக் கொண்டே போகிறது.

ஒருகால் இவள் ஒப்புக் கொண்டால்..

ஐயோ! பிரச்சினை புதிய திசைத்திருப்பமல்லவா கண்டுவிடும்.

நாகநீலியால் தமிழ் வளர்ச்சி பாதிக்கப்படுமோ என்று அஞ்சுகிற அச்சம் சுமையாகிவிடுமோ!

புலவர் பெருமக்கள் இதனை ஓர் அசூசையாகக் கருதிச் சங்கத்துக்கே இளவரசன் வரக்கூடாது என்றும் சொல்லிவிடலாம் அல்லவா.

அவர்கள் நிச்சயமாக ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்பதை இயலிசைப் புலவர் சிகண்டியார் மேம்போக்காகக் கோடிட்டுக் காட்டியது நினைவுக்கு வருகிறது.

இடைச்சங்கம் ஒரு காட்டுமிராண்டியத்தனமாகத் தமிழ் வளர்த்தது என்கிற அவப்பெயரை எவனாவது ஒரு புலவன் பாடி வைத்துவிடுவானேயானால் முதற்சங்கத்தின் மதிப்பும் இத்துடன் அழிந்துபட்டுவிடுமே!

கடற்கோளைவிடப் பயங்கரமல்லவா காவியக் கோள்!

அருகே வந்து நின்ற மருமகள் குணசேகரியைக் கவனிக்கிறார் கடுங்கோன் பாண்டியர். அவளுடைய கண்கள் சிவந்து குழம்பிக் காணப்படுகின்றன. காற்றும் அனலாகி வீசுவது போல.. ஓசையும் புயலாகி மோதுவது போல..

“வா குணசேகரி! தனிமையில் பேச வேண்டும் என்று வந்திருக்கிறாயா?” கடுங்கோன் குரலிலும் ஓசைத் தடுமாற்றம்.

“நீங்களும் தனிமையில் எதைப் பற்றியோ சிந்திக்கத்தானே வந்திருக்கிறீர்கள், மாமா” – குரலில் தகிப்பு தெரிகிறது.

“தனிமையில் வந்தால் சிந்திக்கத்தான் வேண்டுமா? சிந்தனையற்ற தவமன நிலைக்காகவும் வரலாம் அல்லவா?”

“அவ்வாறு வந்திருந்தால் தங்கள் முகம் சலனமற்று இருக்கும். கண்கள் நீலமாகி ஒளியுமிழும். மாறாக முகம் அலை மோதல் கண்டு, கண்கள் கசிவதற்கு முன் சிவக்கும் வருத்த பாவம் கொண்டு விளங்குவானேன்?”

ஆ! எத்தனை தைரியமாகப் பேசுகிறாள்.

பேசவில்லையென்றால் குடிமுழ்கிவிடும் என்கிற கொள்கையுடன் கொந்தளித்து வரும் பேச்சாக இது இருக்கிறதே.

“குணா! நீ ஏதோ உன்னை மறந்து வந்து என்ன பேசுகிறோம், யாரிடம் பேசுகிறோம் என்று புரியாது பேசுகிறாய். நீ சேரமானின் செல்வப் புதல்வியாக இருக்கலாம். நான் கபாடபுரத்துக் காவலன்! கன்னித் தமிழின் பாதுகாவலன்!”

“அத்துடன் இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ளலாமே!”

“என்ன?”

“காட்டுவாசிகளின் சம்பந்தி!”

“குணா!”

சில கணங்கள் வரை அமைதி. “இப்போது புரிகிறதா மாமா, நான் என்ன பேசுகிறேன் என்பது?”

“யாரிடம் பேசுகிறாய் என்பதுதான் புரியவில்லை.”

“உங்களுக்குப் புரியவில்லை..”

மீண்டும் கடுங்கோன் கண்களில் கடுங்கோபம்.

“அமைதியாகச் சிந்தியுங்கள் மாமா! நான் கபாடபுரத்துக் காவலனிடம் பேசவில்லை; கன்னித்தமிழின் பாதுகாவலரிடம் பேசவில்லை, ஏன்? காட்டுவாசிகளின் சம்பந்தியிடமும் பேசவில்லை. நான் பேசுவது எனது மாமனாரிடம்; நான் பேசுவது என் கணவரின் தந்தையிடம்! நான் பேசுவது, என் வாரிசுக்கான மூலவித்திடம்! இப்போது சொல்லுங்கள் மாமா! உங்கள் கோபத்திற்கு அர்த்தமிருக்கிறதா? என் திருமணத்தின் போது காட்டுவாசிகள் தந்தத்தாலான வெண் தேரைப் பரிசாகக் கொடுக்கிற போது எனக்கு ஐயம் ஏற்படவில்லை. தீவு மக்கள் தங்கள் இளவரசருக்குத் தரும் அன்புக் காணிக்கை என்றெண்ணி அகமகிழ்ந்து போனேன். ஆனால், அந்த வெண்தேரில் நான் அமர முடியாது என்பதை அரையும் குறையுமாகத் தெரிந்து கொண்ட போது ஐயப்பட்டேன். பின்பு அதில் அமரப் போகிறவள் நாகநீலி என்பாள் என்ற ரகசியம் பின்னர்த் தெரிந்த போது நான் பட்ட வேதனை யார் பட்டு இருக்க முடியும்? இதனை மாமியிடம் கேட்டால், அவர்கள் என்னைச் சமாதானப்படுத்த வாதிக்கிறார்கள். எப்படியும் நான் சம்மதித்தே தீர வேண்டும் என்று யாசிக்கவும் செய்கிறார்கள்.”

குணசேகரியின் கண்களில் நீர் தாரையிட்டது.

அவளது மனம் இப்போது பாண்டிய மன்னருக்குப் புரிகிறது. அவளுக்காக அவர் இரங்கவும் செய்கிறார்.

“நீ என்ன முடிவு சொன்னாய் குணா? – மன்னருடைய குரலில் சுருதியிறக்கம் தெரிகிறது.

குணசேகரி சொன்னாள்: “எனது நிலையில் நீங்கள் இருந்து பாருங்கள் என்று சற்று துணிவாகவே கேட்டேன்.”

“அப்படி என்றால்?”

“எனது மாமனார் ஒரு காட்டுவாசியை இந்த வயதில் காதலித்து மணக்கப் போவதாக வைத்துக் கொள்ளுங்கள். அப்போது நீங்கள் எந்த நிலையில் இருப்பீர்கள் என்று கேட்டேன்.”

ஒருகணம் அயர்ந்து போகிறார் மன்னர் கடுங்கோன் பாண்டியர். அவரது மூளை சுருசுருவென்று வேலை செய்கிறது. எண்ணங்கள் எங்கெல்லாமோ பாய்ந்து பரவுகின்றன.

அயர்ந்து போன தன் மாமனாரைக் கவனிக்கிறாள் குணசேகரி.

“என்ன மாமா! அயர்ந்து போய்விட்டீர்களா?

“ம்! ஒன்றுமில்லை. இதற்கு உனது மாமி என்ன மறுமொழி கூறினாள்?”

“அவர்களும் உங்களை மாதிரியே அயர்ந்து போனார்கள். பின்னர் மறுமொழி சொன்னார்கள்.”

“அதுதான் என்னவென்று கேட்கிறேன்.”

“மனப்பூர்வமாகச் சம்மதிப்பார்களாம்.”

“அப்படியா சொன்னாள்?”

“அப்படியேதான் சொன்னார்கள்!”

மீண்டும் மன்னர் கடுங்கோன் பாண்டியருடைய சிந்தனை பிய்ந்து கந்தலாகிறது.

‘நீ என்ன நினைக்கிறாய்?”

“அது பொய்யான சம்மதம். ஏனென்றால் அது நடவாத காரியம். என்னைச் சம்மதிக்கச் செய்ய ஒப்புக் கொண்ட ராஜதந்திரம்.”

“நீ சொன்ன மறுமொழி.”

“நான் பட்டத்தரசியானதும் யோசித்துச் சம்மதிப்பதாகச் சொன்னேன்.”

“அது என்ன பட்டத்தரசியானதும் யோசித்துச் சம்மதிப்பது?”

“நான் பட்டத்தரசியாகத் தனித்துச் சிம்மாசனத்தில் அமர வேண்டுமல்லவா? எனது மாமியார் எப்படித் தனித்துக் கம்பீரமாக அமர்ந்தார்களோ அப்படி நான் அமர வேண்டுமல்லவா? அதனால்தான்! அதன் பிறகு ஒவ்வொரு தீவுக்கும் ஒருத்தியாக அவர்

மணந்து கொண்டாலும், கவலைப்படவில்லை. நான் பிரகடனப்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.”

“உன் இன்பம்?”

“என் இன்பம் இந்த ராஜ்யத்தைக் கட்டிக்காப்பதும், தமிழ்ச் சங்கத்தை வளர்ப்பதும்!”

“குணா!” என்றிரைந்தார் கடுங்கோன் பாண்டியர்.

முன்பு இரைந்ததற்கும் இப்போதைக்கும் வேறுபாடு இருந்தது.

முன்பு கோபத்தின் உச்சியில் நின்று இரைந்தார்.

இப்போது குளுமையின் மடியில் அமர்ந்து இரைந்தார்.

முன்பு கடுமை இருந்தது!

இப்போது கடுங்கோன் இருந்தது.

முன்பு பாண்டியனாக இரைந்தார்.

இப்போது தமிழனாகக் குளிர்ந்தார்.

“குணா! உனக்கு இப்படி ஒரு சோதனை வரவிடமாட்டேன். நீ எப்போது எனது ராஜ்யத்தையும் தமிழையும் காதலிப்பதாகச் சொன்னாயோ, அப்போதே உனது மாமனார் விசுவரூபம் கண்டுவிட்டான். நீ கொஞ்சமும் அஞ்சாதே! உனது இன்பத்துக்குப் பங்கம் வர நான் பார்க்கமாட்டேன். ஆனால் இந்த ரகசியம் உன்னுடன் இருக்கட்டும். இது நீ நேசிக்கும் ராஜ்யத்தின் மீது ஆணை! நீ காதலிக்கும் தமிழின் மீது ஆணை! இந்த மலயத்தீவு விஷயம் எப்படித்திசை திருப்பம் காணுமோ? இப்போதைக்கு என்னால் அறுதியிட்டுக் கூற முடியாது. நீ கவலையின்றி அந்தப்புரத்துக்குச் செல். இதனை மனத்தில் கொண்டு யாரிடமும் கோபமாகவும் நடந்து கொள்ளதே! ஆனால் ஒன்று, ‘நான் பட்டத்தரசியானதும் நாகநீலியை மணந்து கொள்ளலாம், தடையில்லை’ என்றாயல்லவா? அந்தப் பிடியிலிருந்து கொஞ்சமும் தளர்ந்துவிடாதே! மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன்.”

கண்களில் ஆனந்தநீர் தாரையிடத் தனது மாமனாரின் கால்களில் விழுந்து பணிகிறாள் குணசேகரி.

அவளைப் பற்றித் தூக்கிய கடுங்கோன் பாண்டிய மன்னர், அவளது முதுகில் தட்டித் தேற்றி அனுப்பி வைக்கிறார்.

அவள் அந்தப்புரம் நோக்கி நடக்கிறாள்.

சிலம்பொலி கணீரிடுகிறது..

இப்போது அந்த ஒலியில் மாற்றம் தெரிகிறது.

முன்பு பிரச்சினையில் கோவையாகக் கேட்ட அந்த ஒலி..

இப்போது..

ஒரு விடிவின் தேவை நோக்கி ஒலிக்கிறது.

சங்கமத்துறையில் ஆறும் கடலும் கூடி 'ஓ'வென்று இரைகின்றன.

'சோ'வென்ற முழக்கமுடன் காற்று..

கடற்பறவைகளின் ஆரவாரம்.

*நீர் நாய்கள் கடற்கரையில் நீந்தி விளையாடி ஆனந்தமடைகின்றன.

கடுங்கோன் பாண்டிய மன்னருடைய சிந்தனை பலமாக வேலை செய்கிறது.

நேரே அவைப்புலவர் சிகண்டியாரைக் கண்டு ஆலோசிக்க அவரது மனம் எண்ணியது. நேரே ரதத்தை எடுத்துக் கொண்டு சிகண்டியார் இல்லம் நோக்கி விரைகிறார்.

சிகண்டி என்பார் இசையிலும், இயலிலும் பெரும் புலவர். அன்னார் மன்னரது அன்புக்குப் பெரிதும் பாத்திரமானவர்.

கடுங்கோன் பாண்டிய மன்னர், சிகண்டியார் இல்லமடைந்து உள்ளே நுழைகிறார்.

அப்போது மாப்புலவர் சிகண்டியர், தொல்காப்பியத்துக்கும் முந்தைய இலக்கண நூலான மாபிண்டத்தை வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்.

---

*அக்காலத்தே நீர்நாய்களிருந்தன என்பதற்கு ஆதாரம் உண்டு. குமரிக் கண்டம் அல்லது கடற்கொண்ட தென்னாடு – பன்மொழிப் புலவர் அப்பாதுரையார்.

# அத்தியாயம் - ௦௬

பாண்டியப் பேரரசின் அரியணையில் அமர்ந்து மகுடம் தரிக்கும் வரை இளவரசன் செழியன், தலைநகரைவிட்டு எங்கும் செல்லக் கூடாது என்கிற இரகசிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறிப்பாகக் காட்டுவாசிகள் வாழும் தீவுகளுக்குச் செல்லவே கூடாது என்கிற அவசர உத்தரவைப் பிறப்பித்தார் பாண்டிய மன்னர் கடுங்கோன்.

இந்த உத்தரவு இளவரசன் செழியனுக்கு எரிமலையாய்க் கோபத்தை உண்டு பண்ணிவிட்டது.

எதற்காக இந்த ரகசிய உத்தரவு?

மலயத்தீவின் ராணியான நாகநீலியைச் சந்திக்கக் கூடாது. அவ்விதம் சந்திப்பது நாட்டுக்கும் அரியணைக்கும் அவமானமென்றால் தனி யுத்தரவு பிறப்பிக்க வேண்டும். அந்த உத்தரவைத் தகர்த்து எறிவதோ, பின்பற்றி நடப்பதோ அது வேறு விஷயம். எதற்காக ஒட்டுமொத்தமாகக் கபாடபுரத்தைவிட்டு வேறு எங்குமே செல்லக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்க வேண்டும்?

இது தன்னைப் பொறுத்தமட்டில் எத்துணைப் பெரிய அவமானம்?

அக்கினி கோபம் கொண்டு சீறி எழுந்தான் செழியன்.

இதற்கான முடிவை இன்றே பார்த்துவிட வேண்டும் என்பதில் தீவிர சிந்தனை கொண்டான்; சினம் கொண்டான்!

தன் தந்தையாரைக் காண வேண்டும்; கண்டு காரண காரியங்களை ஆராய வேண்டும் என்கிற முடிவுடன் புறப்பட்டுக் கொண்டிருக்கையில்..

நூபுரங்களின் ஓசை கணீர் கணீர்' என்று கேட்கிறது.

யார் வருகிறார்கள்..? தாயா? தாரமா? தாயின் வருகை இத்தனை இளமையாக ஓசையெழுப்பாதே. ஓ.. குணசேகரி வருகிறாள். வரட்டும்; அவளது வருகைக்குப் பிறகுதான் இத்தனை குழப்பங்கள் தலைதூக்கி இருக்கின்றன.

உண்மையிலும் அறைக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தவள் குணசேகரிதான். அவளது வருகை எமனுடைய வருகையே போலிருந்தது அவனுக்கு. அவனது சினம் சீறிப் பாய எத்தனிக்கிறது.

ஆயினும், அதனை மெல்ல அடக்கிக் கொண்டு மௌனமாக அலங்கரித்துக் கொண்டிருக்கிறான்.

"எங்கேயோ அவசரமாகச் சென்று கொண்டிருப்பதாகத் தெரிகிறது" என்று தனது யாழினும் இனிய குரலில் கேட்கிறாள் சேர நாட்டுச் சுந்தரி குணசேகரி.

அவளுக்குப் புரிகிறது. இந்த ரகசிய உத்தரவு தனது கணவனை எப்படியெல்லாம் அலைக்கழித்து இருக்கிறது என்பது. தன் மீது இந்தக் கோபத்தைக் காட்டினாலும் வியப்பதற்கில்லை என்று எதிர்பார்த்தே துணிவுடன் பேச முன்வந்திருக்கிறாள்.

"ஆமாம்; மலயத்தீவு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன்." பதற்றமாகவே பேசினான் செழியன்.

"அப்படியா!" அவள் ஒன்றையுமே கண்டுகொள்ளவில்லை.

இரகசிய உத்தரவு குறித்து இவள் ஏதேனும் பேசுவாள்; பிடிபிடி என்று பிடித்துக் கொள்ளலாம் என்றுதான் செழியன் எதிர்பார்த்தான்.

ஆனால் குணசேகரி, அப்படி ஓர் உத்தரவு இருக்கிறதென்பதைக் காட்டிக் கொள்ளாது நடந்து கொண்டாள். மேலும், அது இரகசிய உத்தரவு. காட்டிக் கொள்ள முடியுமா?

"ஏன் செல்லக் கடாதா?" என்று ஓர் எதிர்வாதமே போலக் கேட்டுத் தூண்டிப் பார்க்கிறான் செழியன்.

குணசேகரிக்கு இது புரிகிறது.

அவள் மௌனமாகப் புன்னகை புரிந்து "செல்லக் கூடாது என்று நான் தடை போட்டிருப்பது போலல்லவா கேட்கிறீர்கள். நீங்கள் வருங்கால குமரி நாட்டு மன்னர். நீங்கள் எங்கும் செல்லலாம். எப்போதும் திரும்பலாம். நான் வந்த காரியம் வேறு!"

"எந்தக் காரியம்?"

"எதற்காக இப்படிக் கடுகடுவென்று பேசுகிறீர்கள்?"

"பகல் உணவில் கடுகை அதிகமாகப் போட்டுத் தாளிதம் செய்துவிட்டார்கள்."

"ஓகோ! அது சரி.. நமக்குத் திருமணமான பிறகு, முறைப்படி ஒருமுறை சேரநாட்டுக்கு – அதாவது, எனது தாய் வீட்டுக்கு நாம் சென்று திரும்ப வேண்டுமல்லவா?"

குணசேகரி எதற்காக வந்திருக்கிறாள் என்பது ஓரளவு புரிகிறது. தாய் வீட்டுக்குச் சென்று திரும்ப வேண்டும் என்கிற போக்கில் சேரநாட்டுக்கு அழைத்துச் சென்று சில காலம் நாள்களை ஒட்டிவிட இப்படி ஒரு தந்திரம். ஆயினும், 'முறைப்படி' என்ற சொல்லில் ஒலித்த அழுத்தம் நியாயமானதாகப்பட்டது.

செழியன் கேட்டான்.

"நான் கவாடபுரத்தைவிட்டு எங்கும் வெளியில் செல்லக் கூடாது என்கிற உத்தரவு உனக்குத் தெரியாதா குணசேகரி?"

"அப்படி ஒரு உத்தரவா?"

குணசேகரியைக் கூர்ந்து கவனிக்கிறான் செழியன். இவள் தெரியாதது போல நடிக்கிறாளா? உண்மையில் இவளுக்குத் தெரியாதா?

"நிச்சயமாகவே உனக்குத் தெரியாதா குணசேகரி?"

"இதுவரை எனக்குத் தெரியாது. நீங்கள் சொல்லித்தான் தெரியும்." தனக்கு ஒன்றுமே தெரியாதது போல பாவனை செய்கிறாள் குணசேகரி.

"அப்படியென்றால், இந்த உத்தரவுக்கு ஒரு முடிவு தெரியட்டும். சேர நாட்டுப் பயணம் பற்றிப் பிறகு யோசிக்கலாம்." அவன் விரைந்த புறப்பட ஆயத்தமாகிறான்.

"ஆமாம்; நான் உங்களிடம் தனித்துப் பேசலாம் என்று வந்தால் ஏதோ அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தால்.."

"இரவில்தான் நிதம் பேசிக்கொண்டுதானே இருக்கிறேன்."

"பகலில் பேசக் கூடாது என்று ஏதும் இரகசியச் சட்டம் பிறப்பிக்கவில்லையே!"

"ஒருவேளை நான் பிறப்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தப் பிரச்சினை இப்படியே சென்று எனது சுதந்திரத்துக்குப் பங்கம் விளைவிக்குமானால் அந்த அதிசய உத்தரவை நானே பிறப்பிப்பேன். அந்த முடிவை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறேன். மன்னர் எங்கிருந்தார் குணசேகரி?

"அந்தப்புரத்தில்."

"அந்தப்புரத்திலா?"

“ஆமாம்;, மாமியுடன் ஏதோ பேசி முடிவெடுக்க வேண்டும் என்று சென்றிருக்கிறார்.”

“ஏதோ என்றால்?”

“எனக்கெப்படித் தெரியும்?”

“வரவர அரசாங்கத்தில் மந்திரிமார்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் தூங்க வேண்டியவைகளாகப் போய்விட்டன. எதற்கும் எனது அன்னையாரே, ஆலோசனைக் கருவாய்விட்டார்கள் போலும்! நான் அந்தப்புரம் செல்கிறேன். நீயும் என்னுடன் வருகிறாய்.”

“நானா?”

“ஏன்? நேரே அந்தப்புரத்துக்குத்தானே நீயும் செல்லுகிறாய்? உனக்கும் ஏதேனும் உத்தரவு பிறந்திருக்கிறதா?”

அவள் மௌனமாக நிற்கிறாள். “எனக்கு அப்படி உத்தரவு பிறப்பிக்க வேண்டுமானால் அது நீங்களாகத்தானிருக்க முடியும்.”

“இப்போது நான் உத்தரவிடுகிறேன். என்னுடன் அந்தப்புரத்துக்கு வருகிறாய்.”

“வருகிறேன். உங்கள் நிலை கோபத்தால் விழுங்கப்பட்டிருப்பது போலிருக்கிறது. அந்தக் கோபம் அந்தப்புரத்தை எரிக்குமானால், அதன் தகிப்பை என்னால் தாங்கிக் கொள்ள முடியாமலும் போய்விடலாம். எது எப்படி நடந்தாலும் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். எனக்கு எதுவுமே தெரியாது; நான் எதிலும் சம்பந்தப்பட்டவளல்ல; முழுமையாகச் சொல்ல வேண்டுமானால் நான் நிரபராதி.”

குணசேகரியின் கண்கள் பனிக்கின்றன.

செழியன் தனது இல்லாளைக் கூர்ந்து மிகவும் கவனமுடன் பரிசீலிக்கிறான்.

தன்னை நிரபராதி என்கிறாளே. நாகநீலியின் விஷயத்தை உள்ளடக்கித்தான் இவ்வாறு சொல்லுகிறாளா?

“குணசேகரி..”

“ம்..!”

“நாகநீலி என்பாளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?”

“முழுமையாக அறிவேன்.”

“பார்த்திருக்கிறாயா?”

“இன்னும் மாமியே பார்த்ததில்லை என்கிற போது நான் எப்படிப் பார்த்திருக்க முடியும்? அழகாக இருப்பாளா?”

“உன்னிலும்..!”

அவள் நிமிர்ந்து கவனிக்கிறாள்.

“நீ வெண்முத்து, அவள் கறுப்புமுத்து..”

“மகிழ்ச்சி!”

“நீ இந்தக் காதலை ஆதரிக்கிறாயா?”

ஒ.. நேர்முகமாகச் சந்தர்ப்பம் கிடைத்ததும் பளிச்சென்று கேட்கிறார் தன் கணவர் என்பது குணசேகரிக்குப் புரிகிறது.

“நான் ஆதரிக்கிறேனோ இல்லையோ? எனது கணவர் வழியில் நான் குறுக்கிடமாட்டேன்.”

“அது என்ன, ஆதரிக்கிறேனோ இல்லையோ?”

“எந்த மனைவிதான் ஆதரிப்பாள் என்பது உங்களுக்குப் புரியவில்லையா? அந்த அனுபவம்தான் போதாதா?”

ஒருகண விழிப்பு..

செழியனால் மறுமொழி கூற முடியவில்லை. உண்மைதானே!

“எனக்கு வேண்டியது நீங்கள். எனவேதான் சொன்னேன். உங்கள் வழியில் குறுக்கிடமாட்டேன்.”

“இது சத்தியமான பேச்சா?”

“கணவன் விஷயத்தில் எந்தப் பெண்ணும் அசத்தியத்தை மாலையாக அணிந்து கொள்ளமாட்டாள்!”

“ஒ..”

இருவரும் அந்தப்புரத்தை நாடி நடந்தனர். போகிற வழியில் குணசேகரி அதுவரை தன் கணவருடன் பேசிய பேச்சுக்களை நினைவு கூர்ந்து பார்க்கிறாள். அந்தப் பேச்சில் எதெல்லாம் உண்மை, எதெல்லாம் உண்மைக்குப் புறம்பானது என்பதைக் கூட்டிக் கழித்துப்

பார்க்கிறாள். அதில் உண்மைக்குப் புறம்பான பேச்சும் இருக்கக் கண்டு அதற்காகத் தன்னுள் நாணப்பட்டுக் கொள்ளவும் செய்தாள். குணசேகரிக்கு மட்டும் இல்லை என்று சொல்லிவிட முடியாது..

செழியனும் தனது மனைவியைப் போலவே தனது பேச்சுகளைக் கூட்டிக் கழித்துப் பார்க்கிறான். மனைவியின் கடைசிப் பேச்சு அவனை அடிக்கடி மெய்ச்சிலிர்க்கச் செய்கிறது. சொல்லப்போனால் அவள் சொன்ன ஒரு கருத்தை அவனது மனம் ஆதரிக்கத்தான் செய்தது. 'ஆதரிக்கிறேனோ? இல்லையோ?' என்கிற பேச்சு.

எந்த மனைவியும் ஆதரிக்கமாட்டாள். ஆனால் இவள் தனது நிலையறிந்து ஆதரிக்கலாமே என்று அவனது மனம் சுயநலமாகச் சிந்தித்து ஒருதலையாகச் சாய்கிறது.

அந்தப்புரத்தில் மன்னர் கடுங்கோன் பாண்டியரும் பட்டத்தரசி வானவன் தேவியும், செழியன் வருகிற செய்தியைச் செவிமடுக்கின்றனர். உடன் குணசேகரியும் வருகிறாள் என்பதுதான் அவர்களுக்கு ஆச்சரியம். இந்தக் குணசேகரி திடுமென்று அவன்பால் சாய்ந்துவிட்டாளோ?

கேள்விப்பட்ட கணம் முதல் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முடியாத நிலையில் கவனித்துக் கொள்கின்றனர்.

ஒரு தோழி வந்து செய்தியறிவித்து உத்தரவு கேட்கிறாள். மன்னர் கடுங்கோன் பாண்டியர் உத்தரவு தர அஞ்சி பட்டத்தரசியாளைப் பார்க்க, வானவள் தேவி கொஞ்சமும் தயக்கமின்றி உத்தரவு பணிக்கிறாள்.

தோழிப் பெண் சென்றதும்..

"எதற்காக அஞ்சுகிறீர்கள், கேட்கிற கேள்விக்கு மறுமொழி கூறுங்கள். மீறிப்போனால் நான் பேசத் தொடங்குகிறேன். ஒரே ஓர் ஐயம்; இந்தக் குணசேகரி எப்படிப் புரண்டிருக்கிறாள் என்பதுதான்."

இதற்குள் காலடி ஓசை கேட்டு மௌனமாயினர். இருவரும் உள்ளே நுழைந்தனர்.

"வா செழியா! ஏது? என்றுமில்லாமல் இந்த அந்தப்புரம் நாடி வந்திருக்கிறாய்? அதுவும் மனையாளுடன்!" அன்னை வானவன் தேவிதான் வாய் திறந்தாள். மன்னர் மௌனமாகவே காணப்பட்டார். அவருடைய கண்கள் எங்கோ கவனித்துக் கொண்டிருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையைக் கண்ட செழியன், எதற்கும் துணிந்தவனே போன்று, "அந்தப்புரத்துக்கு வரக்கூடாது என்கிற தடை உத்தரவு இல்லையே?" என்றான்.

மன்னர் கடுங்கோன் பாண்டியர் இப்போது மகனைக் கவனிக்கிறார். அன்னை வானவன் தேவியே இப்போதும் மறுமொழி பகருகிறாள்.

"ஒரு கால் அரசு நிலைக்க, அரசியல் பண்பு நிலைக்க, அரச கௌரவம் நிலைக்கத் தேவையானால் இந்த உத்தரவு பிறந்தாலும் வியப்பதற்கில்லை."

"ஒகோ! அப்போது உங்கள் மருமகள் எங்கிருப்பாள்?"

"ஏன்? அந்தப்புரத்தில்தான் இருப்பாள்."

"அவளை நான் சந்திக்க வேண்டுமானால்?"

"அந்தப்புரத்துக்கு வரக்கூடாது என்கிற ஆணையே அவளால்தானே எழ முடியும். அப்படியிருக்க நீ அவளை எப்படிச் சந்திக்க முடியும்?"

"பொறுத்தருளுங்கள் மாமி! இப்படி ஒரு கசப்பான நிகழ்ச்சியைக் கற்பனை செய்துகூடப் பார்க்க வேண்டாம். அவரின்றி எனக்கு அந்தப்புரம் எதற்கு? ஏன்? அரச வாழ்வே எதற்கு?"

மன்னரும் பட்டத்தரசியும் மருண்டு போயினர்.

ஆ! இவளை நம்பி எதுவும் இனி சாதிக்க முடியாது. இவளது நன்மைக்காக எதையோ செய்யப் போய் முடிவில் அது வேற்றுருவம் கண்டு அரசைப் பாதித்துவிடக் கூடாதே!

பட்டத்தரசி வானவன் தேவி பூசி மெழுகி மறுமொழி பகர்ந்தாள்!

"ஒரு பேச்சுக்குத்தான் சொன்னேனேயொழிய இது நடந்துவிடப் போவதில்லை."

"எது நடக்கும், எது நடக்காது என்பது இப்போது இந்த அரசாங்கத்தில் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை தாயே! அவை கூடுகிறதா? அரசு முடிவெடுக்கிறதா? ஆயங்கள் இயங்குகின்றனவா? எல்லாவற்றையுமே எனது சர்வ வல்லமை பொருந்திய அன்னையாரின் திருநாக்குத்தானே சட்டமாகப் பிரதிபலிக்கிறது!"

இடைபுகுந்து கலக்கினான் செழியன்.

“செழியா!”

“ஏதேனும் புது உத்தரவு பிறப்பிக்கப் போகிறதா?”

“உனது நலனை உத்தேசித்துத்தான் இந்த உத்தரவை நாங்கள் பிறப்பித்தது.”

“எனது நலன்? அது எனக்குத் தெரியாது எங்கிருந்தம்மா முளைக்கும்?”

“தெரியாமல் முளைப்பதுதான் தீங்கு.”

“நன்மைகள் கூடப் பல சமயங்களில் தெரியாமல் முளைத்துவிடுகின்றன.”

“அதனால் பாதகம் ஏற்பட்டு விடுவதில்லை.”

“தீங்குகள் கூடச் சில சமயங்களில் சாதகம் விளைவிப்பதுண்டு.”

சில கணங்கள் அமைதி.

“ஏன் பேச்சைக் காணோம்?”

“உன் எதிர்வாதத்துக்குப் பேச்சு என்ன வேண்டிக் கிடக்கிறது?”

“அப்படியானால் நீங்கள் பிறப்பித்த இரகசிய உத்தரவு உத்தரவுதானா?”

“சந்தேகமே இல்லை.”

“அதனைத் திரும்பப் பெற முடியாதா?”

“நீ பட்டத்தில் அமருகிறவரை திரும்பப் பெற முடியாது.”

“திருமணத்துக்கு முன்பு பேசிய தாய்தானா இப்போதும் பேசுவது?”

“அதே தாய்தான்! அப்போதும் உன் நன்மையை உத்தேசித்துத்தான் பேசினாள்! இப்போதும் நன்மையை உத்தேசித்துத்தான் பேசுகிறாள்.”

“இந்த அராஜக தண்டனை நன்மையை உத்தேசித்தா?”

“இது அவசியத் தண்டனை.”

“மீறினால்?”

பல கணங்கள் அமைதி.

மன்னர் சொன்னார்: "சிறைவாசம்!"

"அதை இப்போதே செய்யலாமே!"

"இன்னும் மீறவில்லையே!"

"ஓ.."

நன்றாகவே சிந்திக்கிறான் செழியன்.

"தந்தையே, ஒன்று சொல்வேன். சிறை தண்டனை என்பது உங்களுக்குப் பெருத்த அவமானத்தை விளைவிக்கும்."

"மரணதண்டனை நல்லது என்கிறாயா?"

"அதனை உங்கலால் வழங்க முடியாது."

"பெற்ற பாசம் வழங்காது என்கிறாயா?"

"இந்த அரசு என்னை இழக்காது என்று நினைக்கிறேன். ஏனென்றால் கவாடபுரம் வாரிசு அற்றுப் போய்விடும்."

"போகட்டுமே!"

"அப்போது, எந்த மலைஜாதியினரை நீங்கள் கேவலப்படுத்துகிறீர்களோ, அவர்கள் வந்து அரியணையில் அமர்ந்து கொள்வர்."

இந்த உரையைக் கேட்டதும் மன்னர் கடுங்கோன் பாண்டியர் மட்டுமல்லாது, பட்டத்தரசி வானவன் தேவியும் பெரிதாக அதிர்ந்து போயினர்.

# அத்தியாயம் - 07

ஓ..

எத்தனை நாள்களுக்குத்தான் இந்தக் கடற்கரைக்கு வருவாள்; காதலனை எதிர்பார்ப்பாள்; எதிர்பார்த்து வாராமை கண்டு ஏமாற்றத்துடன் திரும்புவாள் நாகநீலி.

அந்தி சாய்கிறபோதெல்லாம் அடிவயிறு குமுறச் சூரியனைச் சபிப்பாள்.

“ஏ சூரியனே, நீ ஏன் மறைகிறாய்? சிறிது கால தாமதமாகத்தான் மறையக் கூடாதா? அதற்குள் என் காதலர் வந்துவிடுவாரே! என்று இதமாகவும் கூறுவாள்; மறைகிற போது சினமாகவும் சொற்களைத் தெறிப்பாள்.

நாகநீலியைப் பார்க்க இப்போது மிகவும் பரிதாபமாகவுமிருந்தது. அவளது கறுப்பழகில் மின்னிய நீலமெருகு அழிந்து சாம்பிக் கிடந்தது. கட்டுக்கோப்பான அந்தக் கட்டுடல் கூடக் கட்டுத்தலர்ந்து மெலிந்து காணப்பட்டது. அவள் எங்கே சாப்பிடுகிறாள்? எங்கே உறக்கம் கொள்கிறாள்? கண்களைத் திறந்திருக்கிற போது செழியனுடைய நினைவுகள். கண்களை மூடினால் அவனது கனவுகள். இரண்டிலுமே அவன் தன்னை வருத்தி மெலியச் செய்கிறான். தன்னை அணைத்து வியர்க்கச் செய்கிறான். தன்னை முத்துமிட்டு உதடுகளை வீங்கச் செய்கிறான். தன்னை.. தன்னை..

அவளுடைய கண்கள் தீனமாக அழுகின்றன. அவளுடைய மார்பகங்கள் கானமாக இசைத்து மோனமாக ஆழ்ந்து தீனமாகவே அடங்கிக் குமுங்குகின்றன.

அவளுடைய இடை தளர்ந்து இம்சிக்கின்றது.

கடலலைகள் ‘சோ’வென்று வீசியும் அவளது வெப்பத்தைத் தணிக்க முடியவில்லை. அலைகளின் போராட்டத்தைவிட அவளுடைய மனக்கவலைகளின் போராட்டம், எழுத்திலடங்கா உணர்ச்சிப் போராட்டங்கள்..

அவள் சில சமயங்களில் நினைத்துப் பார்க்கிறாள். எதற்காக இப்படித்தினமும் தன்னை வருத்திக் கொள்ள வேண்டும்? ஒரே அடியாகத் தற்கொலை செய்து கொண்டுவிட்டால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டுவிட முடியும் அல்லவா?

அவள் தினமும் இவ்விதமாக எண்ணுகிறாள்.

அவளால் செயல்பட முடியவில்லை. இவ்வாறு செயல்பட முடியாமைக்கு அவள் நாணப்படவும் செய்கிறாள்.

"ஓ.. நான் ஒரு கோழை."

கதிரவன் மேல்திசையில் வீழ்ந்து கொண்டிருக்கிறான். நாகநீலிக்கு எரிச்சலோ எரிச்சல்.

தொலை தூரத்தில் காவலுக்காக இருந்த தோழிப் பெண்ணும் சிநேகிதியுமான செல்லி மெல்ல எழுந்து வருகிறாள். இப்போது சென்று தூண்டினால்தான் நாகநீலி எழுந்து புறப்பட இருட்டிவிடும்.

செல்லி அருகே வருகிறாள்.

"நீலி நேரமாகிறது!"

நாகநீலி அண்ணாந்து பார்க்கிறாள். அவளது அழகிய கண்களில் அவலமான நீர்த்திவலைகள்.

"எழுந்திரு நீலி! வீட்டிற்குப் போய்க் கவலைப்படலாம்."

"கவலையை எங்கிருந்து பட்டால் என்ன என்று சொல்கிறாயா?"

நாகநீலியின் குரலில் ஏதோ அடைபட்டுச் சொற்களைத் தடை செய்கிறது.

செல்லியாலும் இதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"செல்லீ! அவர் எதற்காக வராமல் இருக்கிறார் என்பதற்கான காரணம் தெரியுமா?" தொண்டை விம்மக் கேட்கிறாள் நாகநீலி.

செல்லிக்குப் பராபரியாக விஷயம் தெரியும். ஆனால் அதனை இதுகாறும் சொல்லத் தயங்கி வந்தாள். இனியும் அதனை மறைக்க அவளால் முடியவில்லை. இளவரசன் மீது இவளுக்கு வெறுப்பு ஏற்பட்டுவிடுமோ என்கிற தயக்கம்.

இப்போது அவள் வெளிப்படுத்தினாள்.

"நான் கேள்விப்பட்டதுதான்; அது உண்மையாகவுமிருக்கலாம்; பொய்யாகவும் இருக்கலாம்."

"என்ன செல்லீ?"

"இளவரசருக்குத் தடை விதித்து ஆணை பிறப்பித்திருப்பதாகக் கேள்வி."

"தடையா?"

“ஆமாம்! தலைநகரைவிட்டு எங்கும் செல்லக் கூடாது என்பது அந்த இரகசிய உத்தரவு.”

“உனக்கு யார் சொன்னது?”

“அரண்மனைத் தோழிகளில் ஒருத்தியை எனக்கு அறிமுகம் செய்து வைத்திருக்கிறார் இளவரசர். எந்தச் செய்தியும் எங்களுக்குள் பரிமாற்றம் நடக்கும். இந்தச் செய்தியும் அப்படியே!”

“ஏன் இதுவரை சொல்லவில்லை?”

“நீ வருத்தப்பட்டு ஏதேனும் செய்து கொள்வாயோ என்கிற பயம்!”

“ஏதேனும்..? நான் கோழையாக இருப்பதால்தானே இதுகாறும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன்? இல்லையென்றால் இந்த ஏதேனும் இந்நேரம் நிகழ்ந்திருக்குமே!”

தனது தலைவியின் இந்தக் கூற்றைக் கேட்டுச் செல்லிக்குத் தாங்க முடியாத துயரம். ஓ.. இவள் ஏற்கெனவே தற்கொலையைப் பற்றிச் சிந்தித்து வைத்திருக்கிறாள்.

“எழுந்திரு நீலி! வேளையோடு வீட்டுக்குச் செல்வோம். அப்பா வேறு அடிக்கடி கோபித்துக் கொள்கிறார். நீ இப்படிச் செய்வதால் அப்பாவுக்கும் நம்மினத்தவருக்கும் பாண்டிய இளவரசர் மீது வஞ்சம் நிறைந்த கோபமே மேலும் ஏற்படும். ஏனென்றால் உனது துயரம் அவர்களை அப்படித் தூண்டிவிடும்.”

“உண்மைதான். ஆமாம், இந்த இரகசிய உத்தரவு இங்குள்ளவர்களுக்குத் தெரியுமா?”

“எனக்கே தெரிந்த இரகசியம், இப்போதுதான் உனக்கே தெரிகிறது.”

நாகநீலி எழுந்து கொண்டாள்.

நன்றாகவே இருட்டிவிட்டது. கடற்காற்று பேயாக வீசுகிறது.

அப்போது..

கடலலைகளுக்கு நடுவே ஒரு தோணி செல்லக் கவனிக்கிறார்கள் இருவரும்.

“யாரது?”

“நமது சென்னியப்பன் மாதிரி இருக்கிறது” என்றாள் செல்லி.

“ஏனிவன் தலைநகர் நோக்கிச் செல்ல வேண்டும்? அதுவும் இருட்டிய பிறகு?”

“அவனும் இப்படிக் கவாடபுரத்தில் எவளையாவது காதலிக்கிறானோ என்னவோ?”

“இருக்கும், இருக்கும். இவன் கெட்ட கேட்டுக்கு ஒரு காதல்! இவன் இங்கே ரகசியமாகப் பலருக்குத் தூண்டில் போட்டுக் கொண்டு வருவது போதாதா? ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாளைக்கு இவன் மரணதண்டனையடையப் போகிறான்.”

தோணி செல்லும் திசையை அவர்கள் இருவரும் கவனித்துப் பின்னர் தங்கள் இருப்பிடம் நோக்கித் திரும்பினர்.

அக்கரையில் விளங்கும் கவாடபுரத் தலைநகரையடைந்த சென்னியப்பன் சற்றே நின்று கவனிக்கிறான்.

சற்றைக்கெல்லாம் ஒருவன் வந்து நின்றான்.

அவன் அரண்மனை ஒற்றன்.

“நீதானே சென்னியப்பன்?”

“ஆமாம்!”

“என்னுடன் வா! குதிரை ஏறிப் பழக்கம் உண்டா?”

“உண்டு.”

“அப்படியானால் அதோ நிற்கும் குதிரையை அவிழ்த்துக் கொண்டு என்னைப் பின்தொடர்ந்து வா!” என்று கூறிய அந்த அரண்மனை ஒற்றன், தனது குதிரையில் ஏறித் தட்டிவிட்டான்.

அரண்மனை நோக்கி இரு புரவிகள் வேகமாகச் சென்று கொண்டிருந்தன.

புகழ்மிக்க கவாடபுரத் தலைநகரம் அந்த இரவில் அழகுமிக்கதாக விளங்குகிறது..

*பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகத்தின் எல்லை மிகவும் பரந்து விரிந்ததாகும். தெற்கே அதன் பரந்த எல்லையில் இருந்த தலைநகரந்தான் தென்மதுரை.

முதற்சங்கம் என்கிற நாகரிகத் தொட்டில் இங்கேதான் தங்கத்தாலாக்கித் தாலாட்டுப் பாடியது. இன்றைய குமரிக்குத் தெற்கே எழுநூறு **காவதம் அளவுக்குப் பரந்து விரிந்திருந்தது.

அத்தனை பெரிய நிலபரப்பு!

அதுவே குமரிக்கண்டம்.

***முதல் தமிழ்ச் சங்கத்தில், அகத்தியரும், சிவபெருமானும், முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனாரும் ஆகிய ஐநூற்று நாற்பத்தொன்பதின்மர் இருந்து தமிழை எப்படியெல்லாம் ஆராய்ந்து வளர்த்தன. ஓ.. கேட்கவே எத்துணை இனிமையாக இருக்கிறது.

அவர்கள் எழுதிய அக்காலத்துப் பரிபாடல்கள், முதுநாரை, முதுகுருகு, களிரியாவிரை போன்ற எத்துணை நூல்கள்..

காய்சின வழுதி என்கிற பாண்டிய மாமன்னர் முதல் நம் கடுங்கோன் பாண்டியர் ஈறாக எண்பத்தொன்பதின்மர் இந்தத் தென்மதுரையைக் கட்டியாண்டு பெருமைப்படுத்தினர்.

இவர்களில் நெடியோன் என்கிற ****நிலந்தரு திருவிற் பாண்டியன் புகழ், காவியமாய் மணக்கிறது.

*****கடலலைகள் இவரது காலைத் தொட்டு, தமிழ் வளர்த்த பெரியோய் என்று வணங்கிச் செல்லுமாம். எனவே, ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்ற மாப்புகழைப் பெற்றார். பெருமைக்குரிய பஃறளியாற்றினை வெட்டுவித்தவர் இப்பாண்டிய மாமன்னர்.

இவ்வாறெல்லாம் புகழ் மணக்க நெடிதோங்கி விளங்கிய தென்மதுரை..

ஓ.. தமிழர்களுக்குச் சதி செய்வதற்கென்றே தோன்றிய கடல், பொங்கி, ஏற்பட்ட கோளால் தென் மதுரை அழிவுற்றது. தமிழ் நூல்களை வாரிக் கொண்டு போனதால்தானே இந்த வஞ்சகக் கடலுக்கு 'வாரி' என்ற பெயர் உண்டாயிற்றுப் போலும்!

---

*கி.மு. 30,000–க்கு மேல் என்கிறார்கள் ஆராய்ச்சி அறிஞர்கள்.

**ஒரு காவதம் 10 மைல்.

***இறையனார் அகப்பொருள்.

****இவன் காலத்தேதான் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது என்பர்.

*****இன்றைக்கும் அப்பகுதித் தீவு மக்கள் மகுடாபிஷேகத்தைப் பாறையில் பாதங்கள் செதுக்கிச் செய்வதாக வரலாறு கூறுகிறது.

இந்த கடற்கோள்களின் அழிவுக்குப் பிறகு, பாண்டியரது இரண்டாம் தலைநகரம் உருவாயிற்று. அதுதான் நமது கவாடபுரம். இந்நகரம் குமரியாற்றிற்கும் பொருநையாற்றிற்கும் இடைப்பட்ட நிலத்தில் உதயம் கண்டது.

நம் கடுங்கோன் பாண்டியர் தப்பி வந்து இத்தலைநகரை உருவாக்க எப்படியெல்லாம் பாடுபட்டார்.

அப்போது செழியன் சின்னஞ்சிறு பாலகன்.

வான்மீகி முனிவராலும் சாணக்கியராலும் புகழப்பட்ட கவாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச் சங்கத்தை நிறுவக் கடுங்கோன் பட்டபாடு கடுமையான உழைப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

முதற்சங்கத்தில் ஆராய்ந்த நூல்களின் பெயர்களும், சில பகுதிகளும் அவரது நினைவுகளில் இருந்தனவேயொழிய, மற்றபடி நூல்களனைத்தும் கடலில் மூழ்கிப் போன வருத்தத்தை மறக்க அவருக்கு நீண்ட நாள் பிடித்தது. இப்போது கவனத்திலிருக்கும் சில பகுதிகளை ஓலைகளில் படிவம் எடுத்துப் புலவர்களைக் கூட்டி ஆராய முனைகிற நேரத்தில் இந்தச் செழியன் காதல் வயப்பட்டுக் கவலைகளையுண்டுபண்ணி வருகிறானே!

கவாடபுரத்து அரண்மனை உச்சியில் நின்று அந்த இரவு நேரத்தில் தமது தலைநகரைக் கண்டு துய்க்கிறார் கடுங்கோன் பாண்டியர். அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஒற்றன் வருவது தெரிகிறது. அவர் தமது அந்தரங்க அறை நாடிச் செல்கிறார்.

சற்றைக்கெல்லாம் செய்து வைத்திருக்கும் முன் ஏற்பாட்டின்படி ஒற்றனுடன் சென்னியப்பன் அந்த அந்தரங்க அறையினுள் நுழைகிறான்.

மாமன்னரை முதன் முறையாகக் கண்டதில் அவனுக்கு அதிர்ச்சி நிறைந்த ஆச்சரியம். அவன் நெட்டங்கமாக விழுந்து வணங்குகிறான்.

“உன் பெயரென்ன?” மெல்லிய குரலில் கேட்டார் கடுங்கோன் பாண்டியர்.

“சென்னியப்பன்” என்றான் மிகவும் பணிவுடன்.

“தாய் – தகப்பன் இருக்கிறார்களா?”

“அநாதை.”

“திருமணம்?”

“இன்னும் ஆகவில்லை. ஒருவிதத்தில் பார்த்தால் நாகநீலி என் முறைப்பெண். ஆனால்..”

“இளவரசன் செழியன் குறுக்கிட்டுவிட்டான்.”

சென்னியப்பன் தலைகுனிந்து கொள்கிறான்.

சென்னியப்பனைக் கூர்ந்து கவனிக்கிறார் கடுங்கோன் பாண்டியர்.

கறுத்து மழுமழுவென்ற உடல்; கனத்த பயங்கர மீசை; வளர்ந்த கூந்தல்; வாளால் வெட்டினால் கூர் மழுங்குமோ என்கிற மாதிரி இரும்புடல்.

“நாகநீலியை மணந்து கொள்ள முடியும் என்று நீ நம்புகிறாயா, எதிர்பார்க்கிறாயா?”

“நம்பவுமில்லை, எதிர்பார்க்கவுமில்லை மன்னர் பெருமானே!”

“ஏன்?”

“பெரிய இடத்து விஷயம்.”

“ஓகோ! அதற்கு நான் வழி சொன்னால்?”

“அப்போதுக் கூட அவள் வேண்டாம் மன்னர் பெருமானே! எனக்கு அவளைத் திருமணம் செய்து வைப்பார்கள் என்று எதிர்பார்ப்பதே ஒரு கனவு மாதிரி.”

“அப்படியா? நான் உனக்கு நல்ல அழகியை மணம் செய்விக்கிறேன். இருக்க மாளிகை தருகிறேன். படையில் ஓர் அங்கமாகச் சேர்த்துக் கொள்கிறேன். பொன் தருகிறேன். பொருள் தருகிறேன். நான் சொல்கிற காரியத்தை நிறைவேற்றி வைப்பாயா?”

“ஆக்ஞை மன்னர் பெருமானே! இப்படி ஓர் அதிர்ஷ்டத்தை யார்தான் மறுக்க முடியும்?”

ஒற்றனைக் கவனிக்கிறார் மன்னர் கடுங்கோன்.

அவன் குறிப்பறிந்து வெளியில் செல்கிறான்.

“சென்னியப்பா! நாகநீலியை இளவரசன் காதலிப்பது அரசாங்கத்தில் பெரிய எதிர்ப்பாக இருக்கிறது. அதனால் நீ அவளைக் கற்பழித்துவிட்டால், அதைச் சாக்காகக் கொண்டு அவளை நிராகரித்துவிடலாம்.”

அதிர்ந்து போனான் சென்னியப்பன்.

எரிந்து கொண்டிருந்த தீப்பந்தங்கள் அவனது பிணத்தை எரிப்பன போலத் தென்படுகின்றன.

“ஏன்? பயப்படுகிறாயா?”

“எங்கள் குலவிதிப்படி மரணதண்டனை!”

“அவளைக் கொலை செய்தாலும் மரணதண்டனைதானே?”

அவன் மவுனம் சாதிக்கிறான்.

“பயப்படாதே! ஒன்று அவளைக் கற்பழித்துவிடு. இல்லை, கொலை செய்துவிடு. இரண்டில் ஒன்றைச் செய்துவிட்டு எப்படியாவது தப்பி ஓடிவந்து கவாடபுரத்தை அடைந்துவிடு. பின்னால் உன்னை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது.”

அவன் பாவமாகப் பார்க்கிறான்.

“இது நான் இடும் உத்தரவா என்று யோசிக்கிறாயா சென்னியப்பா? என்ன செய்வது? மகன் மீது கொண்ட பாசமல்ல; இந்த நாட்டின்மீது கொண்ட பாசம், தமிழ் மீது கொண்ட பாசம். நாகநீலியால் என் பாரம்பரியம் கெட்டழிந்துவிடுமோ என்ற பயத்தால் ஏற்பட்ட முடிவு. செய்து முடிப்பாயா?”

“பயமாக இருக்கிறது மன்னர் பெருமானே!”

“பயப்படாதே! அப்படியே நீ அகப்பட்டுக் கொண்டால் உன்னை எப்படி மீட்பது என்பது எனது ஒற்றர்களுக்குத் தெரியும். இந்தா, இந்தப் பொன் முட்டையை எடுத்துக் கொள். நாளையே இக்காரியத்தைச் சுணக்கமின்றி செய்து முடித்துவிடு. கற்பழிப்பது கேவலந்தான். இது நல்ல உத்தரவேயல்ல. நீ அவளை எப்படி நேசிக்கிறாய் என்பதை அறியவே இவ்வாறு சொன்னேன். கொலை செய்துவிடு. கற்பழிப்பதற்கு நேரமாகும். கொலை செய்வது சுலபமாகும். போய் உடனடியாகச் செய்து முடித்துக் கவாடபுரத்தை அடைந்துவிடு. ஆனால், இது குறித்து நீ யாரிடமாவது வாய்திறப்பாயேயானால் உன் உயிர் உன் உடலில் இருக்காது என்பது ஒரு புறமானால், இதையே உன் மீது சுமத்தி மலயத்தீவில் மரணதண்டனை வாங்கித்தர அதிக நேரம் பிடிக்காது. செவ்வனே செய்து முடித்துவிட்டால் நீ மலயத்தீவின் தலைவனானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.”

அவன் பயந்து நடுநடுங்கி பொன்முடிப்பைப் பெற்றுக் கொண்டு வெளியில் சென்றான்.

அவன் சென்றதும் ஒற்றன் உள்ளே நுழைந்தான்.

“அவனைப் பின்தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். கற்பழிப்பு என்றால் அவனது நாவில் பசையூறும் என்று எதிர்பார்த்தேன். அவன் அப்படியில்லை. கொலை செய்யவே முயல்வான். அவனை எப்படியும் காத்து இங்கே கொண்டு வர முயலுங்கள். முடியவில்லை என்றால் அவனைக் கொன்றுவிடுங்கள். ஏனென்றால், இந்த ரகசியம் முக்கியமானது. கவாடபுரத்தையே அழிக்கவல்ல ரகசியம். கவனம்!” என்றார் மன்னர் கடுங்கோன் பாண்டியர்.

ஒற்றன் வெளியேறினான்.

காற்று திடுமென்று அந்த அறையினுள் வேகமாகப் பிரவேசித்ததால் தீப்பந்தங்கள் அலைமோதின.

# அத்தியாயம் - 02

மலயத்தீவையடைந்த சென்னியப்பன், மன்னர் கடுங்கோன் இட்ட ஆணையைக் குறித்து நன்கு யோசித்துப் பார்த்தான். செயலைச் செவ்வனே முடித்துவிட்டால் மலயத்தீவின் தலைவனானாலும் வியப்பதற்கில்லை என்று மன்னர் கொடுத்த வாக்குறுதி மனவாறுதலைத் தந்தது.

கற்பழித்துவிடு என்று சொன்னதுதான் அவனுக்கு விளங்கவில்லை. கொலை செய்துவிடு என்று ஆணை பிறப்பிப்பது நியாயம். கற்பழித்துவிடு என்று ஏன் சொல்ல வேண்டும்? அப்படி ஓர் ஆசையிருந்தால் அதனையும் செய்து முடித்துவிடு என்று தூண்டுகிறாரா?

உண்மையில் அவனுக்கும் அந்த ஆசை நீண்ட நாள்களாகவே இருந்து வந்தது. என்றைக்காவது ஒரு நாளைக்கு இந்த அழகிய நீலியை ஆசை தீர அனுபவித்து, அதனால் வருகிற மரணதண்டனையை ஆனந்தத்துடன் ஏற்பது என்று எண்ணி எதிர்பார்த்து வந்தான்.

அந்த எண்ணத்தைத் தெரிந்து வைத்துக் கொண்டுதானே மன்னர் அவனது நாவில் பசை தடவிப் பார்த்தது. மேலும், கற்பழித்துவிட்டால் அவனுக்கு மலயத்தீவின் தலைவன் பதவியளிப்பது என்பது ஒற்றுக் கொள்ள முடியாத விஷயம்.

கொலை செய்துவிட்டுப் பதவிக்கு வரலாம்; கற்பழித்துவிட்டு நடமாடக் கூட முடியாதே..

பல்வேறு ராஜதந்திரத்தை உள்ளடக்கித்தானே மன்னர் கடுங்கோன் பாண்டியர் இவ்வாறெல்லாம் சென்னியப்பனைத் தூண்டிச் செயல்பட வைத்தது?

சென்னியப்பனும் பலமாக வலையில் வீழ்ந்து செயல்படத் தொடங்கினான்.

ஆனால், மன்னர் அவனது செயலின் தீர்மானம் குறித்து அவனுக்கு என்ன செய்யலாம் என்ற ஒரு முடிவுக்கும் அவர் வந்திருந்தார்.

சென்னியப்பன், அன்றைய தினமே செயலில் இறங்கி, எப்படியும் காரியத்தை முடித்துவிடுவது என்பதில் தீவிரமாக எதிர்பார்த்தான்.

அன்று மாலை வழக்கம் போலத் தனது அன்புக் காதலனை எதிர்பார்த்து, அலைபாயும் கடலோரத்தில் அமர்ந்து கொண்டு அலை பாய்ந்து கொண்டிருக்கிறாள் மலயத்தீவின் கறுப்பு முத்து நாகநீலி.

ஆனால், அன்றைக்குப் பார்த்து அவளும் ஒரு தீர்க்கமான முடிவின் கீழ் துணிந்து ஒரு செயலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். நாளைய இரவு எப்படியும் பாண்டிய இளவரசன் செழியனை இங்கு வரவழைக்க என்ன செய்வது என்பது குறித்து ஆலோசிக்கிறாள்.

இனி எவ்வகையிலும் செழியனுடன் சேர்ந்து வாழ்வதென்பது முயற்கொம்பு என்கிற தீர்க்கமான எண்ணத்தில் நெஞ்சளவில் துன்பியல் கீதம் பாடத் தொடங்கிவிட்டாள். இந்தக் கீதத்தை எத்தனை நாள்களுக்குத்தான் இந்த காடும், வனாந்திரமும், கடலும், மலைகளும் கேட்டுக் கேட்டு வருந்தும்? இதற்கு ஒரு முடிவைத் தேடிக்கொண்டால் என்ன?

வழக்கம் போலக் கடலலைகளைக் கவனிக்கிறாள். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை காதலனின் நாவாய் வருகிறதா என்று எதிர்பார்க்கிறாள். ஏமாற்றம் கண்களில் நீராய்த் தாரையிடுகிறது. கடலில் மட்டுந்தானா உப்பு நீர்? அவளது கண்களிலும் உப்பு நீர்!

அந்தி, பொன்மயமாகச் சாய்ந்து கொண்டிருக்கிறது. என்றும் போலத் தோழி செல்லி தொலை தூரத்தில் அமர்ந்து கொண்டிருக்கிறாள். இந்தத் தினப்படியான சோக நிகழ்ச்சிக்கு ஒரு முடிவு ஏற்படாதா என்று நினைக்கிற அளவுக்குச் செல்லிக்குக் கூட வேதனையாகிப் போய்விட்டது.

நேற்றிரவு கூட மலயத்தீவின் தலைவன் மலையமான் கீர்த்தி, இந்தத் தோழிப் பெண் செல்லியை அழைத்து மிகவும் கண்டித்து இருக்கிறார்.

செல்லி என்ன செய்வாள்? என்ன சொல்வாள்?

“நான் என்ன செய்ய முடியும் மலயப் பெருமானே! எனது தலைவியின் உத்தரவுக்கு நான் பணிந்து செயல்பட வேண்டியவள்” என்று மறுமொழி கூறி விடைபெற்றுக் கொண்டாள்.

அதன் பிறகு தன் தலைவன் மலயத்தீவு மலையமான் கீர்த்தி இவ்வாறு கண்டித்ததையும் தலைவி நாகநீலியிடம் சொல்லிவிட்டாள்.

இது குறித்து நாகநீலியும் பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை. ஒரு தந்தையின் நியாயமான உணர்ச்சிகளே என்றளவில் அவள் வாளாயிருந்துவிட்டாள்.

பொழுது நன்றாகவே சாய்ந்து இருட்டிக் கொண்டு வந்தது. செல்லியும் எழுந்து கொண்டாள். தன் தலைவியைச் சமாதானப்படுத்தி அழைத்துச் செல்ல வேண்டுமே. அப்போது..

இருட்டியதுதான் தாமதம் என்கிற துணிவுடன் தனது வேலையைச் செயல்படுத்த மெல்ல மறைந்து வந்து கொண்டிருக்கிறான் சென்னியப்பன்.

தொலைவில் செல்லி அமர்ந்திருப்பதைக் காணுகிறான். அவள் எழுந்து கொண்டதைக் கண்டு வேகமாக வருகிறான். அவளை என்ன செய்வது? கட்டிப் போட்டுவிட்டு நாகநீலியைக் கற்பழித்துவிடுவது.

நாகநீலியைக் கற்பழிப்பது என்கிற ஈனத்தனமான முடிவுடன்தான் அவன் செயல்படத் துணிந்தான்.

கொலை செய்வது எம்மாத்திரம்? அவள் மீது எத்தனை நாள்களாக மோகம். எத்தனை இரவுகள் கனவு. எத்தனை இரவுகள் அவன் தன்னை வீணாக்கிக் கொண்டிருக்கிறான்.

எனவே, அவளைச் சுவைத்துவிட்டு அப்படியே தோணியேறிக் கவாடபுரத்தை யடைந்துவிட்டால். பிறகு பாண்டிய மன்னர் பாதுகாப்பளிப்பார். ஒருகால் தனது ஆசை நிறைவேறாமல் கொலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமே ஏற்பட்டுவிடுமானால்..

அப்போதும் இந்தச் செல்லி சாட்சி பூர்வமாகிவிடுவாளே. இங்கே நாகநீலியைக் கொலை செய்துவிட்டு அடுத்துக் கட்டிப் போட்டு வைத்திருக்கும் செல்லியையும் தீர்த்துக் கட்டிவிட்டுக் கவாடபுரம் நோக்கிச் செல்ல எந்நேரம் பிடிக்கும்.

வனாந்திரமான இந்தக் கடல் பிரதேசத்தில் தனித்து – அதுவும் இருட்டில் அகப்பட்டுக் கொண்ட இருவரைத் தீர்த்துக் கட்ட அதிக நேரம் பிடிக்காது.

நாகநீலியை முடிந்தவரை அனுபவித்துவிட்டு இருவரையுமே கொலை செய்துவிட்டு.. ஏன்? செல்லியையும் ஒரு கை பார்த்துவிட்டு. சீ! இது அதிகப்படியான ஆசை; வீண் முயற்சி.

இருவரையுமே தீர்த்துக் கட்டிவிட்டுத் தலைநகர் நோக்கி ஓடிவிட வேண்டியதுதான்.

இந்த நேரத்தில்..

அந்தப் பாண்டிய ஒற்றனும் இந்த நிலையை ஒற்றறிய நோட்டம்விடுகிறான்.

இப்பேர்ப்பட்ட மாபாதகச் செயலைத் தூண்டிச் செய்யப் பணித்தது அரசாங்க நிலையைக் காக்கும் அரச தந்திரமானாலும், இந்த மாபாதகத்தைச் செய்தவனுக்கு அரசாங்கத்தில் அபயம் கொடுப்பதாவது?

மன்னர் கடுங்கோன் பாண்டியன் இதற்கும் முன் யோசனையுடன் செயல்படச் சிந்தித்திருந்தார்.

செல்லியை நெருங்கி வந்த சென்னியப்பன், அவளது வாயைத் தனது பலம் கொண்ட மட்டும் பற்றித் துணியை அடைத்து இறுகப் பற்றுகிற போது அவன் உணர்வுகள் தலைதூக்கிப் பேயாட்டமிடுகின்றன. அங்கேயே அவளை முடித்துவிடலாமா என்றும் நினைக்கின்றான்.

சீ! தேக்கி வைத்திருக்கும் உணர்வுகள் நாகநீலிக்கே பயன்பட வேண்டும் என்று உள்மனம் சொல்லுகிறது.

இருட்டில், அந்த நேரத்தில், வனாந்திர இயற்கை அமைப்பில், கடற்காற்றுச் சுகத்தில் செல்லியின் இளமைச் செழிப்பு அவனை எப்படியெல்லாமோ ஆட்டிப் படைக்கிறது. ஒரு புறம் அடங்கு என்கிறது. மறுபுறம் ஆனந்தத்தை அனுபவி என்கிறது. ஆயினும், கால தாமதம் ஆபத்தை விளைவித்துவிடக் கூடாதே என்று அச்சுறுத்துகிறது.

தன்னை ஒருவாறு கட்டுப்படுத்திக் கொண்டாலும் அவனால் அது முடியவில்லை. தொடக்கத்திலேயே செல்லியைத் தொட்டுவிட்டது தேவையற்றதாய்விட்டது.

அவ்வாறு தொடவில்லையானாலும் அவளால் ஆபத்து வந்துவிடுமே. எனவே, செல்லியின் இளமைப்பூரிப்பு அவனைக் கட்டுமீறச் செய்துவிட்டது.

அந்த கட்டு உடைந்து அணை புரண்டது. அது இயற்கையின் பீறிட்டால் முடிந்தேவிட்டது. அதன் பிறகு அவளை ஒரு மரத்தில் கட்டி வைத்துப் பின்னர் வந்து கொலை செய்து திரும்புவதைவிட,

அதனையும் அப்போதே செய்துவிட அவனது மூர்க்கமான நினைவுகள் அவனை அடிமைப்படுத்திவிட்டன.

செல்லி கொலையுண்டாள் அவ்வளவுதான்.

மறைவில் நோட்டம்விட்டுக் கொண்டிருந்த ஒற்றர்கள், பாண்டிய மன்னர் சிந்தனைப்படி சுறுசுறுவென்று செயல்படத் தொடங்கினர்.

மூர்க்கத்தின் எல்லையில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்ட சென்னியப்பன், நேரே நாகநீலியை நோக்கிச் செல்கிறான்.

நாகநீலி அதுவரையும் செல்லி வருவாள் என்கிற நினைவு கூட இல்லாமல், இன்றாவது இளவரசர் வருவாரா என்கிற இனிய கனவுகள் நெஞ்சில் கூடுகட்ட எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

அவளது நெஞ்சில் நேற்று முதற்கொண்டே ஒரு தீர்க்கமான முடிவு. எப்படியும் செல்லியை விட்டனுப்பி, நாளை மாலை இளவரசரை வரவழைக்க வேண்டும். அவரை மனம் போன போக்கில் தழுவி இன்பத்தை எல்லை வரை கண்டு அனுபவித்துவிட வேண்டும். எந்தச் சுகத்துக்காக இதுகாறும் காதலித்து எதிர்பார்த்தோமோ அந்தச் சுகம் முதலில் முடியட்டும். அதற்கப்புறம் அரச சுகத்தைப் பற்றி ஆலோசிக்கலாம் என்கிற தீர்க்கமான முடிவுதான் அது.

அதற்காக அவள் தனது உடல் வியர்க்க, கணத்துக்குக் கணம் எதிர்பார்த்து, இன்ப வயப்பட்டு, அலைமோதிக் கொள்கிறாள்.

அந்தச் சமயத்தில்..

எதிர்பாராது திடுமென்று இரண்டு முரட்டுக் கரங்கள் அவளைப் பற்றுகின்றன.

இன்ப நினைவில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டிருந்த நாகநீலிக்கு இம்மாதிரியான ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி ஏற்பட்டுவிடவே, அவள் அதிகப்படியாக அதிர்ந்து அண்ணாந்து பார்த்தாள்.

அவளது இதயம் அக்கணமே நின்றுவிடும் போலிருந்தது. வந்திருந்தவன் சென்னியப்பன்.

"சென்னியப்பா, நீயா?" —அரண்டு மருண்டு கேட்கிறாள் நாகநீலி.

"நானல்லாத இளவரசரா வருவார்? அவர்தான் இனி வரமாட்டாரே! அரசாங்கத் தடையுத்தரவு அப்படி. நான் உன்னை எதிர்பார்த்தேன்.

அது முடியாது. உன்னை அனுபவித்துவிட்டு வருகிற சாவு சொர்க்கம் என்று முடிவு செய்து, இன்று செயலில் இறங்கினேன்.”

“வேண்டாம் சென்னியப்பா, தண்டனை எதுவென்று தெரியுமா?”

“மரணதண்டனையேயானாலும் கவலையில்லை.”

“வேண்டாம். இது இளவரசருக்காகவே பிறந்த உடம்பு; பாதுகாத்து வருகிற உடம்பு; நீ ராஜதுரோகம் செய்கிறாய்.”

“இல்லை, ராஜவிசுவாசம் செய்கிறேன், நீலி! இடையில் வந்தது உனக்கு ராஜநேசம்; அதனால் ஏற்பட்ட ராஜமோகம் – காதல்! ஆனால் நியாயப்படி உன்னை மணந்து கொள்ளப் போகிறவன் நான். அது இப்போது ஏமாற்றத்தில் முடிந்துவிட்டது. எத்தனை நாள்களுக்குத்தான் ஏமாந்து இருக்க முடியும்? உன் நினைவாக நான் ஏங்கியதால் பல பெண்களிடம் சக வாசம் வைத்துக் கொள்ள நேரிட்டது. இப்போது அது தேவையில்லை என்கிற முடிவுக்கு வந்துவிட்டவன் நான். உன்னை அடைந்துவிட்டுப் பெண்கள் சகவாசத்துக்கே ஒரு முழுக்குப் போட்டுவிடுவது என்கிற தீவிரமான முடிவுக்கு வந்துவிட்டேன். இன்று உன்னை அடைவது; இல்லை, மரணத்தைச் சந்திப்பது என்கிற முடிவுடன் வந்துவிட்டேன்” என்று கூறிப் புலியைப் போல உறுமிக் கொண்டு நாகநீலியின் மீது பாய்ந்தான் சென்னியப்பன்.

வெறி கொண்ட புலி போலப் பாய்ந்த சென்னியப்பனைக் கண்டு பெரிதாக அதிர்ச்சி கண்டுவிட்டாள் நாகநீலி.

நன்றாக இருட்டிவிட்ட அந்தச் சூழ்நிலைக்கு நம்பிக்கை கொடுப்பது போல உதயமாகிக் கொண்டிருந்தது முன் நிலவு.

அடர்ந்த புதர்களும், இடையிடையே நீண்டும் பரந்தும் காணப்பட்ட பாறைகளும், அவற்றுக்குச் சற்றே தூரத்தில் கடலும். ஆ! எத்தனை பயங்கரம் என்று அப்போதைக்குத் தெரிந்தது நாகநீலிக்கு.

இந்த நிகழ்ச்சிக்கு முன்பு வரை அந்த இடம் ஓர் அற்புதம் நிறைந்த காவிய ரசனைக்குரிய இடமாகத் தெரிந்தது. அதுவே இப்போது.. மனத்தின் மாறுபாட்டுகளுக்கும் வேறுபாட்டுகளுக்கும் ஒப்பத்தான் இயற்கை ரசனையையும் காவிய ரசனையையும் அனுபவிக்க முடிகிறது.

இந்த நேரத்தில் – ஏற்கெனவே மகளைக் கண்டு அறிவுரை கூறித் தேற்ற வேண்டும் என்ற நினைவுடன் கடற்கரை நோக்கிப் புறப்படவிருந்தார், மலயத்தீவின் தலைவர் மலயமான் கீர்த்தி.

சற்று தாமதமாகச் சென்றால் என்ன என்று எண்ணியிருக்கையில்தான் பாண்டிய நாட்டு ஒற்றன், அவரை நாடி வந்து வணங்கி நின்றான்.

“மலயத்தலைவா! இளவரசர் தங்களைக் கண்டு வரும் படி அனுப்பினார்” என்று பொய்யுரையாக ஒரு பிடிகை போட்டுப் பின்னர், “அவ்வாறு வருகையில் கடற்கரையோரத்தில் ஒரு பயங்கர சம்பவம் காண நேர்ந்தது. யாரோ ஒருவன், நாகநீலியின் கற்பைச் சூறையாடப் பலாத்காரம் பண்ணிக் கொண்டிருக்கிறான். இந்நேரம் ஏதேனும் நடைபெற்று முடிந்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை” என்று கூறி முடித்த மறுகணம்..

மலயத்தீவே பற்றிக் கொண்டது போன்ற உணர்வு கண்ட மலயமான் கீர்த்தி, பெருத்த சத்தமுடன் புறப்பட்டு ஓடத் தொடங்கினார். அந்தச் சத்தத்தைக் கேட்டு அனைவரும் ஆயுதங்களை ஏந்திக் கொண்டு பின் தொடர்ந்து ஓடினர்.

கடற்கரையில் சென்னியப்பனுடைய பலங்கொண்ட முயற்சி அவ்வளவு எளிதில் பயனையளித்துவிடவில்லை. நல்ல வலிமை பொருந்திய தேகம் கொண்டவளான நாகநீலி, உயிரைப் பணயம் வைத்துத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் போராடினாள்.

அவளது உடலில் சிற்சில இடங்களில் காயம்பட்டு இரத்தம் ஒழுகியது. சென்னியப்பனைப் பொறுத்தமட்டில் இன்னும் முயன்று எப்படியாவது சுவைத்துவிடுவது என்கிற வெறியில்தான் பலாத்காரத்தில் கடுமை காட்டினான்.

கொலை செய்வது என்பது அவனால் எளிதில் முடியும். ஆனால் பிணத்தை..

சே! சற்றுமுன் செல்லியிடம் மட்டும் அவன் தனது பலத்தை இழக்காமல் காத்திருந்தால், இந்த அளவுக்கு அவனுக்கு மூச்சு வாங்கி இராது.

என்ன செய்வது!

முதலில் ஏற்பட்ட வெறி..

பலவீனக் கண்களைத் திறந்துவிட்டது.

இதற்குள் யாரோ பலர் ஓடிவரும் சத்தம் கேட்கவே, சென்னியப்பன் ஒருகணம் அரண்டு மருண்டு திரும்பிப் பார்க்கிற நேரத்தில்..

நாகநீலி ஓடிச்சென்று ஒரு பாறைக்கு இடையே புகுந்து, புதருள் சென்று மறைந்து கொண்டாள்.

அவளுக்கு மார்பகமே நின்றுவிடக் கூடிய அளவுக்குப் பெருமூச்சு வாங்கியது.

உடல் குபீரென்று வியர்த்திருந்தது.

கடற்காற்று போதவில்லை.

கூந்தல் கலைந்து, முகம் விகாரப்பட்டிருந்தது.

மலயத்தீவு மக்கள் ஈட்டியும், அம்பும், வாளுமாக நுழைந்துவிடவே, சென்னியப்பனால் ஓடி மறைய முடியாமல் போய்விட்டது.

சுற்றிலும் பலர் வியூகம் வளைத்துக் கொண்டனர்.

சென்னியப்பன் வசமாக அகப்பட்டுக் கொண்டான்.

# அத்தியாயம் - 09

சென்னியப்பனுடைய இந்தச் செய்கை மலயத்தீவையே மலைக்க வைத்தது.

சென்னியப்பன் ஒரு மாதிரியானவன் என்பது அந்தத் தீவு மக்களுக்குப் புரிந்த விஷயமானாலும் அந்தச் சேட்டைகளை அடுத்த தீவுகளிலும், ஏன், கவாடபுரத் தலைநகரிலுமாக வைத்துக் கொண்டிருக்கிறான் என்கிற அளவில் அவர்கள் புரிந்து வைத்திருந்தனர்.

மலயத்தீவிலும் அவன் பல இடங்களில் கை வரிசையைக் காட்டியிருக்கிறான். ஆனால், அவைகள் மறைக்கப்படுகிற அளவில் நடந்து கொண்டுவிடுவான்.

இப்போது இத்துணைத் துணிவுடன் மலயத்தீவின் தலைவனுடைய மகளிடமே தனது துணிவான கை வரிசையைக் காட்டியதுதான் பேராச்சரியத்தில் மூழ்க வைத்தது.

இதற்கெல்லாம் எந்தச் சபை கூடி எந்த முடிவும் எடுக்க வேண்டிய அவசியமில்லை. மலயத்தீவின் தலைவன் சொல்லுகிற தண்டனைதான் மகாதேவன் தீர்ப்பு மாதிரி. கற்பழிப்பவனுக்குச் சித்திரவதைகளுடன் கூடிய மரணதண்டனை என்பது தொன்றுதொட்டு வரக்கூடிய தண்டனையாகும். இவ்வாறான கடுமையான தண்டனைகள் மூலந்தான் அக்கால பண்பாட்டினை அவர்களால் காத்துவர முடிந்தது.

கொலைக் குற்றத்திற்கு மரணதண்டனை என்கிற ஒரே பண்பாடுதான் இன்றளவும் நீடித்ததேயொழிய ஏனைய அனைத்து தண்டனைகளைப் பற்றிய நாகரிகம் மறைந்து போனது.

அவையனைத்தும் அநாகரிகமானவை என்று இக்காலம் அநாகரிகமாகக் கருதிக் கைவிட்டுவிட்டன. திருடினால் கையைத் துண்டித்தல். பொய் சொன்னால் நாக்கைத் துண்டித்தல். பெண்களைக் கேலி செய்தால் கண்களில் ஒன்றை எடுத்துவிடல். கோயில் சொத்தில் கைவைத்தால் மாறு கை, மாறு கால் வாங்கல். இப்படியான கடுமையான தண்டனைகளின் பயமுறுத்தல்கள்தாம், அக்கால நாகரிகத்தைப் பண்பான சங்கிலிகளில் கட்டி மனித வாழ்வைத் தாலாட்டி மகிழ்ந்தன.

அவை இக்காலத்தில் இல்லாததனால்தான் நாகரீகம் என்ற சொல் அகராதியுடன் நின்றுவிட்டது. ஓ.. எத்தனை அற்புதமான காலம் அது.

பொற்காலத்தில் வாழ்ந்த அந்த நாகரிகம் அழிய அழிய, உயர்ந்த மாடமாளிகைகளைக் கொண்டு மிருகங்கள் வாழ்கிற நாகரிகத்தை இந்த மண் ஏற்றுக் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கியத்தை அடைந்துவிட்டது.

பொழுது புலருகிற வரை சென்னியப்பனை அவர்களுக்கென்று அமைந்திருந்த சிறைச்சாலையில் அடைத்துப் பலமான காவலில் வைத்திருந்தார்கள். இவ்விதமான அநியாயமான பலாத்காரத்துக்குட்பட்ட நாகநீலியின் மனம் இரவு முழுவதும் அமைதியின்றி அழுது வடிந்தது.

ஆ! இந்த இளவரசனைத் தவிரத் தனது உடலை எந்த ஒரு பிராணியும் தொடக்கூடாது என்று பாதுகாத்தோமோ அந்த உடலை இந்த அக்கிரமக்காரன் தொட்டு மகிழ்ந்துவிட்டானே.

தன் தந்தையார் – பெற்ற தந்தையாருங் கூட ஓர் ஆடவனே என்று எண்ணித் தொடமறுத்து வந்த நாகநீலிக்கு இப்படி ஒரு சோதனையா..

தன் அருமைத் தோழியைப் பழிவாங்கிவிட்டானே. அவளது நிலையைக் கவனித்த போது, அதிகாரிகள் சொன்ன முடிவு..

அவள் கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறாள். அடப்பாவி சென்னியப்பா..

உனக்கேன் இந்தத் துணிவு?

அன்றைய பொழுது புலருகிறது..

சென்னியப்பனுக்கான மரணதண்டனையை நிறைவேற்ற ஆயத்தங்கள் சுறுசுறுவென்று நடைபெற்று கொண்டிருந்தன. மலயத்தீவின் நடுமையாக அமைந்திருந்த திடலில்தான் குற்றவாளிகளுக்கான தண்டனைகளை நிறைவேற்றுவார்கள். அப்போதெல்லாம் மரணதண்டனை என்பது தூக்குத் தண்டனையல்ல, சிரச்சேதம் செய்துவிடுவது. கற்பழிப்புக்கு மட்டும், சித்திரவதைகள் என்னென்ன உண்டோ, அத்தனையும் செய்வார்கள்.

அவ்வாறு செய்கிற போது– "அவளை இழுக்கிற போது இந்தக் கை எத்தனை இன்பம் அனுபவித்திருக்கும்" என்று கூறி, விரல்களில்

முள்ளைச் செருகுவார்கள். விரல்களை வெட்டுவார்கள். பிறகு கையைத் துண்டிப்பார்கள்.

“காமப் பார்வை பார்க்கிற போது இந்தக் கண்கள் எப்படியெல்லாம் சந்தோஷப்பட்டிருக்கும்” என்று கூறிக் கண்களில் தீக்கோலைச் செருகுவார்கள்.

“முத்தமிட முயன்ற போது.. இந்த உதடுகள் எப்படி இன்பவயப்பட்டுத் துடித்திருக்கும். முத்தமிடுகிற போது எத்துணை சுகங்களை அனுபவித்திருக்கும்” என்று கூறி வாயைத் திறக்க வைத்து நெருப்புக் கட்டியைப் போடுவார்கள்.

இன்ன பிற சித்திரவதைகளுக்குப் பிறகு சிரச்சேதம் நடைபெறும்.

இவையனைத்தையும் கண்ணுறும் மக்களுக்குக் கற்பழிக்கிற எண்ணந்தான் உதயம் காணுமா? ஆனால், சென்னியப்பன் கற்பழித்து விடவில்லையானால் பலாத்காரத்தில் மூழ்கியவன். சித்திரவதை நடக்கும். பின்னர் கைகளிரண்டையும் துண்டித்துவிடுவார்கள்.

ஆயினும், செல்லியை கற்பழித்ததோடல்லாது கொலையும் செய்திருக்கிறானே.. சென்னியப்பனைப் பொறுத்த மட்டில் தண்டனைகள் இரட்டிப்பு.

திடலில் அனைத்துச் சித்திரவதைகளுக்கான ஆயுதங்களும் அந்த ஆயுதங்களை ஏந்திய கொடூரர்களும் நேரத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

மலயத்தீவு மக்கள் அந்தத் திடலைச் சூழ்ந்து நின்று காணப்பட்டனர். இம்மாதிரியான தண்டனைகளைக் காண அருவறுப்படைந்தவர்கள் தத்தம் வீடுகளில் முடங்கிக் கிடந்தனர்.

மலயத்தீவு தலைவன் வந்தமர்ந்தான். நாகநீலி வரவில்லை; அவள் அங்கு வரவே நாணப்பட்டாள். பொதுவாகக் கற்பழிக்கப்பட்டவள் கண் முன்தான் இந்தத் தண்டனைகள் நிறைவேறும்.

இவ்வளவு தண்டனைகள் வழங்கும் அக்காலத்தவர்கள் கற்பழிக்கப்பட்டவளுக்குக் காட்டிய வழி என்ன? பெரிய கேள்வி..

இக்காலத்தில்.. இது விஷயத்தில் இன்னும் நாகரிகமடையாத இக்காலத்தில் தீர்வு காண முடியாத விஷயத்துக்கு அக்காலத்திலேயே தீர்வு கண்டிருந்தனர்.

கற்பழிக்கப்பட்டவளை எவராவது ஏற்றுக் கொண்டு ஒழுங்காகக் குடித்தனம் நடத்தினால் அரசாங்கம் மான்யங்களை வழங்கும். எவரும் ஏற்க மறுத்தால் – ஆண் விதவைகள் இரண்டாம் திருமணம் செய்து கொள்வதற்கு மாறாக அவர்களை ஏற்கலாம். அவர்களும் மறுத்தால் 'நீ காண்பது இரண்டாம் இன்பம். அவள் காணப் போவதும் இரண்டாம் இன்பம். அதுவும் முதலின்பம் ஆத்மா ஏற்க நடந்ததில்லை. எனவே ஏற்றே தீர வேண்டும்' என்று வற்புறுத்தப்படும்.

திருமணமானவள் கற்பழிக்கப்பட்டால், அவளுக்கு அரசாங்கத்தில் அவளுக்கேற்ப உத்தியோகம் கொடுத்து அவளது வாழ்வுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவர்.

ஓ.. எத்தனை பெரிய நாகரிகம் அது என்று இன்றும் வியக்கத் தோன்றுகிறதல்லவா?

தண்டனையை நிறைவேற்றுவதற்கான நேரம் நெருங்கிவிட்டது. சென்னியப்பனுடைய சித்திரவதைப் பட்டியல் மிகவும் தீனமாகக் குறித்துத் செல்லியைக் கற்பழித்து கொலை செய்த மாபெரும் குற்றம் ஒருபுறம். இளவரசி நாகநீலியைக் கற்பழிக்க முயன்று பலாத்காரம் நடத்திய ராஜத்துரோகம் மறுபுறம்.

தண்டனை ஒன்றேயானாலும் சித்திரவதைகள் இரட்டிப்பாக இருந்தன.

"எங்கே அந்த ஜடம்?" என்று உறுமினான் மலயமான் கீர்த்தி.

பொதுவாக இப்படியாக அநாகரிகமான குற்றங்களைச் செய்து தண்டனையடைந்தவர்களுடைய பெயர்களை யாவரும் குறிப்பிடமாட்டார்கள். குற்றம் செய்த மறுகணமே அவர்களை பிணங்களுக்கு ஒப்பாக மதித்துவிடுவர்கள். மிருகங்கள் கூட இவர்களைவிட மேலானவைகளாகிவிடுகின்றன.

சினை தரித்ததும் பசு எந்த இணையையும் சேர்க்காது.

இணை சேர்ந்ததும் சிட்டுக்குருவி வேறு ஆண் குருவியைச் சேர்க்க மறுக்கும்.

மிருகங்களிலும் சைவப் பிராணிகள் இருக்கின்றன. பறவைகளிலும் குயில் சைவம்; அன்னம் தேவாம்சம். பாம்புகளில் நாகம் சத்திய தேவதை. இப்படி இருக்க – இவையனைத்தையும் கண்டறியவும் விண்டறியவும் சீர்தூக்கி அலசவும் ஆறாவது அறிவு

படைத்த மனித இனம் இவ்வாறான அநாகரிகக் குற்றங்களைப் புரிகின்றனவென்றால்..

ஒ.. அதுகள் ஜடங்களே. இவ்வாறாக அக்கால மக்கள் வரையறுத்து நடைமுறையில் கொண்டு வந்தனர்.

மலையமான் கீர்த்தி குரல் கேட்டு, ஒருவன் ஓடினான். சென்னியப்பனை விரைந்து கொண்டு வருமாறு பணிக்க அவன் ஓடினான்.

அப்போது..

அவனெதிரே இரு காவலர்கள் ஓடிவந்தனர்.

அவர்களுக்கு மூச்சு இரைத்தது. மலையமான் கீர்த்தி விளங்கிக் கொள்ள முடியாத வியப்புடன் நோக்குகிறான்.

"எங்கே அந்த ஜடம்?"

"தலைவா! அது சிறையில் கொலையுண்டு கிடக்கிறது. பார்த்து அறிந்ததில் அது தன்னைத்தானே குத்திக் கொண்டதாகத் தெரியவில்லை. யாரோ கொலை செய்திருக்க வேண்டும் என்றே தெரிகிறது."

இந்தச் செய்தி கேட்ட அடுத்த கணம் மலயமான் கீர்த்தி அதிர்ந்தான். அவனைத் தொடர்ந்து அந்தக் கூட்டமே ஆச்சரியம் கலந்த அதிர்ச்சியில் மூழ்கியது.

சென்னியப்பன் எவ்வாறு கொலையுண்டான்?

குமரிநாட்டு மன்னன் கடுங்கோன் பாண்டியன் இச்செய்தியை – சென்னியப்பனைக் கொலை செய்தாய்விட்டது என்கிற செய்தியை – கேள்விப்பட்ட கணம் முதல் மனத்துக்கு ஓர் ஆறுதல்.

ஆயினும் அந்த மடையன், முதலில் செல்லியின் பால் சென்றதால் அவனது முயற்சி வீணாகிவிட்டது. செல்லிக்கு நேர்ந்தது நாகநீலிக்கு நேர்ந்திருக்குமேயானால் எத்துணை நிறைவு. பூதாகரமாகத் தலை தூக்கி அலைக்கழிக்கும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு மகத்தான தீர்வு கண்டது போலாயிருக்குமல்லவா?

இப்போது இந்தப் பிரச்சினை கண்ணும் மூக்கும் கொண்டு பூதப் பார்வையுடன் சுவாசிக்கத் தொடங்கிவிடுமே. என்ன செய்வது? பாவங்களை மனத்தில் எண்ணாது செயல்படும் ராஜதந்திரம் என்கிற

அரசியல் போர்வையுள் புகுந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தியும் அது விழலுக்கு இறைத்த நீராகிவிட்டதே.

அடுத்து என்ன செய்வது? நல்லவேளையாக அகப்பட்டுக் கொண்ட சென்னியப்பனைப் பாண்டிய ஒற்றர்கள் தங்களது திறமையால் கொலை செய்துவிட்டார்கள். அவ்வாறு மட்டும் நடைபெறவில்லையானால்..

மரணதண்டனைக்குப் பயந்து அவன் உளறிக் கொட்டியிருந்தால் ஏதும் நடைபெற்றுவிட முடியாது. தீவுகளுக்கும் தலைநகரத்துக்கும் போராட்டம் நிகழும்.

ஆனால், இந்த விஷயமறிந்தால் செழியன் எத்துணை சினம் கொண்ட வேங்கையாக மாறித் தந்தையை எதிர்த்துத் தலைநகரை எதிர்த்துக் குமரி நாட்டுக்கே எதிரியாக இருப்பான்.

மன்னர் கடுங்கோன் பாண்டியர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும் இதே வேளையில் பாண்டிய இளவரசன் செழியனுக்குச் செய்தி எட்டிவிட்டது.

மலயத்தீவில் நடந்த குழப்பம் அவனுக்கு முழுவதுமாகத் தெரிய வந்தது. அவனுக்கென்று சில ஒற்றர்கள் பணியாற்றுகிறார்கள் அல்லவா? நடந்த அத்தனையும் தெரிய வந்ததேயொழிய இது எப்படி நடந்தது? யாரால் நடந்தது? ஏன் நடந்தது என்பன போன்ற கேள்விகளுக்கு விடை கிடைக்கவில்லை.

இத்தனை நாள்களாக இல்லாத இந்த நிகழ்ச்சி இப்போது நடப்பானேன்? அதுவும் மலயத்தீவின் தனிப்பெருந்தலைவன் மலயமான் கீர்த்தியின் புதல்வியிடம்..

பாண்டிய இளவரசனுடைய பவித்திரமான காதலி என்பது மலயத்தீவு அறிந்த விஷயம்தானே? இப்படியிருக்க நாகநீலியிடம் ஒருவன் வாலாட்டியிருக்கிறான் என்றால் அவனால் நம்பமுடியவில்லை.

செல்லியைக் கொலை செய்தது அவனுக்கு அதிகப்படியான வருத்தத்தையுண்டுபண்ணியது.

ஆ! செல்லி எத்துணைக்குச் செல்லமான தோழி. தனக்கு எத்துணைக்கு ஆறுதலான சகோதரி. கொலையுண்டவனைத் தண்டிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அவனை யார் கொலை செய்திருக்க முடியும்? அவன் தானாகத் தற்கொலை

செய்து கொண்டதாகத் தெரியவில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டதாமே. யார் செய்திருப்பார்கள்? இது பற்றித்தான் இளவரசன் செழியனுக்குப் பெருத்த சிந்தனைக் குழப்பம் கண்டது.

இதில் ஏதோ உண்மையிலேயே ஓர் உள்நோக்கம் நிறைந்த சதித்திட்டம் இருக்க வேண்டும் என்று அவனது மனம் ஊர்ஜிதப்படுத்தியது.

நாகநீலி மட்டும் கற்பழிக்கப்பட்டிருந்தால்.. நாகநீலியைக் கொலை செய்திருந்தால்.. நினைக்கவே நெஞ்சு பிளக்கிறது. நிச்சயமாகத் தன்னால் தாங்கிக் கொள்ள முடியாது. ஏன்? உயிர்போராட்டம் நிகழ்ந்தாலும் வியப்பதற்கில்லை. இது பற்றி நாம் ஆராய்வதோடு மிகவும் கவனமாகவும் இருக்க வேண்டும் என்று உறுதி பூண்டான் செழியன்.

மனக்கவலையுடன் அலைமோதிக் கொண்டிருக்கும் நாகநீலிக்கு யாரே ஆறுதல் சொல்வர்?

ஆறுதல் சொல்ல வேண்டிய அருமைத் தோழி செல்லியும் போய்விட்டாள்.

அவள் தனது குறையை – தனது மனப்பாரத்தை யாரிடம் சொல்வாள்? யாரிடம் இறக்கிக் கொள்வாள்?

நாம் செல்லலாம் என்றாலோ இரகசியத் தடையுத்தரவு.

நாம் சென்று ஆறுதல் அளிக்காவிட்டால் நாகநீலி தற்கொலை செய்து கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஒ..

நாகநீலி தற்கொலை..

நினைக்கவே இதயம் வெடிக்கிறது.

நாகநீலி..

தடையாவது உத்தரவாவது. இரகசிய உத்தரவுதானே? இதுவே பரஸ்பர உத்தரவாக முளைக்கட்டுமே.

இன்று மாலை நாகநீலியைக் காண்பதே நலம் என்கிற முடிவுக்கு வருகிறான் செழியன்.

இதனால் தனக்கு மரணதண்டனை கிடைத்தாலும் ஏற்பது என்கிற தீவிர முடிவுக்கு வருகிறான்.

தனக்காவது மரணதண்டனையாவது..

யாருக்கு அவ்வளவு துணிவு ஏற்படப் போகிறது..

எப்படியும் இன்று மாலை மலயத்தீவுக்குப் புறப்படுவது என்கிற துணிவான முடிவுக்கு வந்துவிட்டான் இளவரசன் செழியன்.

# அத்தியாயம் - 10

மாலைப்போது வானில் பொன் வேய்ந்து கொண்டிருக்கிறது.

என்னதான் இரகசியத் தடையை மீறி மலயத்தீவுக்குச் செல்லப் பாண்டிய இளவரசன் செழியன் முடிவு செய்திருந்தாலும், அதற்காகப் பலரறிய புறப்பட்டுச் செல்ல அவனது உள்மனம் துணியவில்லை; இடமளிக்கவில்லை.

அவன் அந்த இரகசியத் தடையை மீறி இரகசியமாகவே சென்று திரும்ப முடிவு செய்கிறான்.

அதன்படி யாருமறியாது மாறுவேடமிட்டுச் செல்லலாமா.. இன்றைக்கு மாறுவேடமிட்டுச் சென்றுவிடுகிறோம்.

நாளை செல்ல வேண்டியிருந்தால்..? அப்போது என்ன செய்வது?

ஒருகால் மனத்தில் திட்டமிட்டபடி நாகநீலியை மலையத்தீவில்விட்டு வைக்காது கவாடபுரத்துக்கே அழைத்து வர நேர்ந்தால்?

எதற்காக இவ்வாறு பயப்பட வேண்டும்? துணிந்தது துணிந்தாயிற்று. வருவது வரட்டுமே! சந்தித்தால் போகிறது.

ஒருகணம்..

ஒருகணமென்ன, பல கணங்கள் யோசிக்கிறான் செழியன்.

இன்றைக்கு முதல் தடவையாகப் பல நாள்கள் கழித்துச் செல்கிறோம்.. அதுவும் இரகசியத் தடையுத்தரவை மீறிச் செல்கிறோம்..

இன்றைக்கு மட்டும் புனைவடிவம் தாங்கி – மாறுவேடமிட்டுச் செல்லலாம். சென்ற பிறகு நாகநீலியின் நிலையறிந்து நாளைத் தடையைப் பகிரங்கமாக மீறுவது குறித்துச் சிந்தித்தால் என்ன?

அவன் இந்த முடிவுக்கே வந்துவிட்டான்.

தன்னை ஒருவரும் கண்டுகொள்ளாத வண்ணம் மாறுவேடம் புனைந்து, ஓர் அரண்மனைச் சேவகன் போல அரண்மனையைவிட்டு வெளியேறினான். அவ்வாறு வெளியேறுகையில் அவனுக்கு விஷயம் புரியாமலில்லை.

இந்தக் கவாடபுரத்து ஒற்றர்களுக்கு உடம்பெல்லாம் கண்கள். கண்டுவிட்டாலும் கவலையில்லை என்ற திடமான நெஞ்சுடன் அவன் புரவி ஏறிப் புறப்பட்டான்.

கடற்கரையை அடைந்ததும், அங்கே நாவாய்க்காரர்கள் காத்திருந்தனர். வழக்கமாக அவன் தினமும் வருகை தருகிற போது மலயத்தீவின் தலைவனுடைய மரியாதைக்குரிய நாவாய் காத்திருந்து, அவனை அழைத்துச் செல்லும். இப்போது சில நாள்களாக அவனது வருகை தடைப்பட்டுவிட்டது. அவன் எப்போது வருவான் என்று யாரறிவார். எனவே, அந்த மரியாதைக்குரிய நாவாய் வர நியாயமில்லை.

ஆகவே, அங்கிருந்த பயணிகள் நாவாயில் அவன் தனது குதிரையுடன் மலயத்தீவை அடைய வேண்டிய நிலைக்கு ஆளானான். அப்போதுதான் அவனுக்கு ஓர் உண்மை புரிய வந்தது.

ஆ! நாம் மாறுவேடமிட்டு வரவில்லையானால் இந்த நாவாய்க்காரனுக்குத் தான் யாரென்பது புரியும். இளவரசன் ஒரு சாதாரண நாவாயில் ஏறுகிறான் என்கிற அகௌரவம் தனக்கானாலும், ஓர் இளவரசன் தனது நாவாயில் ஏறி வருகிறான் என்கிற கௌரவம் அந்த நாவாய்க்காரனுக்குச் செல்லும். அவன் பெருமையடையலாம். தனக்கு எத்துணைச் சிறுமை?

நாவாய் மலயத்தீவின் கரையை அடைகிறது. கரையை அடைந்த செழியன் நாவாய்க்காரனுக்குச் சேர வேண்டிய கூலியைக் கொடுத்துவிட புரவியைக் கரைசேர வைக்கிறார்கள்.

நீண்ட நாள்களுக்குப் பிறகு வருவதால் அந்தப் பிரதேசத்தைச் சுற்றுமுற்றும் ரசனையுடன் நோக்குகிறான். அவனுடைய பழைய ஞாபகங்கள் கண்முன் சித்திரங்களாக விரிகின்றன. அவனுடைய கண்களில் ஏக்கத்தின் நீர்த்திவலைகள்.

புரவி ஏறிச் செல்கிறான். தினம் தினம் அவர்கள் சந்தித்து அளவளாவுகிற இடம் நாடி வருகிறான். நீண்டும் அகன்றுமிருந்த கற்பாறையில் கடலலைகள் மோதி நுரைத்தள்ளி ஆப்பரிக்கின்றன. சோவென்று வீசும் காற்று..

அங்கே நாகநீலியைத் தவிர்த்து அனைத்தும் அன்று கண்டன போலவே இன்றும் இருக்கின்றன.

எங்கே நாகநீலி? அவள் வரவில்லை.

இதுகாறும் அவள் என்றைக்குத் தவறியிருக்கிறாள். எது தவறினாலும் மாலையில் வந்து இளவரசனை எதிர்பார்த்துத் தங்கி ஏமாறுவதில் தவறவில்லையே!

பலாத்காரமான அந்த அற்ப நிகழ்ச்சி நடைபெற்ற பிறகு நாகநீலியால் வீட்டைவிட்டு வெளியேறவே மனம் வரவில்லை. பலர் முகத்தில் தனது முகத்தைப் புதைக்கவே நாணப்பட்டாள்.

அந்த வீட்டில் மூங்கில் பர்ணகசாலை போலமைந்த மூங்கில் மாளிகையில் அவள் அடைந்து கிடப்பதே மேல் என்று எண்ணிவிட்டாளோ..

இப்படி எத்தனை நாள்களுக்குத்தான் அடைந்து கிடப்பாள்? தற்கொலைக்குத் துணிகிறவரையிலா? அல்லது தன்னை அழைத்துச் செல்ல இளவரசன் வருகிற வரையிலா?

கடற்கரையில் வெகுநேரம் எதிர்பார்த்த இளவரசன் செழியனுக்கு ஒன்றுமே புரிபடவில்லை. அவள் இங்கு வருவதை இப்போது நிறுத்திக் கொண்டாள் போலும்.

இயற்கைதானே? தானே அவளை மறந்துவிட்ட நிலை போலான பிறகு அவள் மட்டும் தான் வருவேன் என்று எதிர்பார்த்து எவ்வாறு காத்திருக்க முடியும்?

அவன் நேரே மலயத்தீவின் தலைவன் மலயமான் கீர்த்தி இல்லத்துக்கே துணிந்து புறப்பட்டான். அவ்வாறு புறப்படுகிற போது என்னென்ன எதிர்ப்புகள் வரும் என்பது அவனுக்குப் புரியாமல் இல்லை. ஆயினும், துணிந்து புறப்பட்டான்.

என்னதான் வரப்போகிறது?

மலயத்தீவின் நடுநகரத்தை அடைகிற போது மக்கள் அவனைக் கவனிக்கின்றனர்.

யாரிவன்? யாரோ அரசாங்கச் சேவகன். தலைவர் இல்லம் நோக்கிச் செல்கிறான் என்றே அவர்கள் நினைத்தனர்.

குதிரை மலயமான் கீர்த்தியின் இல்லத்து வாசற்படியில் போய் நிற்கிறது.

பலரும் வேடிக்கை பார்க்கிறார்கள்.

மலயமான் கீர்த்தி வெளியே வந்து வியந்தும் வெறுப்புடனும் விசாரிக்கிறான்.

செழியன் தனது மாறுவேடத்தைக் கலைக்கிறான்.

“இளவரசர்!”

அனைத்து வாய்களும் முணுமுணுக்கின்றன.

ஆனால், எந்தவித எதிருணர்வுகளும் யாரிடமும் ஏற்படவில்லை.

மலயத்தீவுத் தலைவன் மலயமான் கீர்த்தி வணங்கி உள்ளே செல்லுமாறு வேண்டுகிறான்.

“நாகநீலி உள்ளே அடைபட்டிருக்கிறாள் இளவரசே!”

இதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. அவன் குலுங்கிக் குலுங்கி அழுகிறான்.

இளவரசன் செழியனுக்கு என்ன தோன்றியதோ.

“மலயமானே! கவலை வேண்டாம். நாளை நானே வந்து நாகநீலியைத் தலைநகருக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்துவிட்டேன். நீங்கள் எனக்காகப் பரிசளித்த வெண்டேரை வெள்ளைத் தேரைக் கொண்டு வந்து முதன் முதலாக நாகநீலியை அதில் அமர்த்திச் செல்ல முடிவு செய்துவிட்டேன். இதில் எந்த எதிர்ப்பு வந்தாலும் அரசையே துறந்துவிடவும் முடிவு செய்துவிட்டேன்.”

இளவரசன் செழியன் இவ்வாறு கூறுகிற போது அனைத்துக் கண்களிலும் நீர்த்திவலைகள். உள்ளே இருந்த நாகநீலியும் செவிமடுக்கிறாள்.

“அரசையே துறப்பேன்..” என்கிற சொற்கள்.

அவளை.. அவளை.. அவளை..

மெய்சிலிர்த்தாள்; மேனி நடுங்கினாள்; பொய் சிலிர்த்துப் போனதோ என்று புலம்பிய மனத்துக்கு ஒரு பூரிப்பு; ஒரு புளகம்; ஒரு புத்துணர்வு.

பாண்டிய இளவரசன் செழியன் அந்த மூங்கில் மாளிகையுள் முதன் முறையாக நுழைகிறான்.

அவ்வாறு அவன் முதன் முறையாக நுழைகிற போது, இன்முகம் கொண்டு வரவேற்க வேண்டும் என்கிற உள்ளுணர்வுடன் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கிறாள் நாகநீலி.

ஆனால், மலயத்தீவுத் தலைவன் மலயமான் கீர்த்தியோ, பாண்டிய இளவரசன் முதன்முறையாகத் தனது குடிலில் நுழைகிற போது, தாரை தப்பட்டை முழுங்க வரவேற்க முடியவில்லையே என்று வருந்துகிறான்.

அவள்தான் என்ன செய்ய முடியும்?

திடீர்ப் பிரவேசம் இது!

ஆயினும் நாளை வந்து வெண்தேரில் அமர்த்தித் தனது மகளைத் தலைநகர் கவாடபுரம் நோக்கி அழைத்துச் செல்வதாகச் சொன்ன சொற்கள்..

மதுவில் தோய்ந்தெடுத்த பலாச்சுளைகளைப் போல் இனிப்பும் போதையும் தந்தன.

இல்லத்தினுள் பிரவேசித்த இளவரசன் செழியன் அந்த இல்லம் எத்தனை அழகாக மூங்கிலால் வேயப்பட்டு வண்ண வண்ணமாக இருக்கிறது என்று கூடப் பார்க்கவில்லை, பார்க்க நேரமில்லை.

அவனது கண்கள் நாகநீலியின் பால் லயித்து நிலை குத்தி நிற்கின்றன.

நாகநீலியின் நயனங்கள் நடுக்கத்தால் இமைகள் படபடக்க மருளுகின்றன.

ஓ.. எத்தனை கரிய கரிய விழிகள்.

சில கணங்கள் நான்கு கண்களின் காவியப் பார்வை எத்தனையோ கதைகளைப் பேசிக் கொள்கின்றன.

இடையில்..

பிரிவாற்றாமை..

பிரிவாற்றாமை!

ஓ.. வென்று ஊசலாடுகிறது.

உதடுகள் துடிக்கின்றன..

இருவருக்குமே வியர்த்துக் கொட்டுகிறது.

சற்றைக்கெல்லாம் இருவருடைய மனத்துள்ளும் என்ன புகுந்து கொண்டதோ.

ஓடிச்சென்று ஒருவரையொருவர் அனைத்துத் தங்களை மறக்கின்றனர்.

நாகநீலியும் மறுக்கவில்லை.

செழியனும் கட்டு மீறிவிட்டான்.

வியர்த்த உடல்கள் இரண்டும் பிணைந்து ஒன்றாகி – ஒருயிராகி – உன்மத்த நிலையாகி..

ஓ.. சாரையும் நாகமும் பிணைந்தது போலென்பார்கள்.

அது மலயத்தீவின் தலைவன் இல்லம் என்பதை அவன் மறந்துவிட்டான்.

வெளியில் தந்தை இருக்கிறார் என்கிற நினைவு நாகநீலிக்கும் மறந்துவிட்டது.

ஏற்கெனவே செழியன் உள்ளே நுழைந்ததும் ஒரு பணியாளன் மிகவும் சாதுர்யமான புத்தியுடன் கதவைச் சாத்திக் காவலாக நின்று கொண்டான்.

அவர்கள் பேசுவதை மற்றவர் கேட்கக் கூடாது என்பதற்காக மலயமான் கீர்த்தியும் சற்றே தொலைவில் சென்று ஆறுதலாக அமர்ந்துவிட்டான்.

நாளைய காலையில் தனது மகள் கவாடபுரம் நோக்கிப் பயணமாகிறாளே..

காதலர்கள் வாய் முணுமுணுக்கவில்லை. அவர்கள் உள்ளம் உரக்கவே பேசிக் கொள்கிறது. இருவரிடையே அந்த நிலை வெகுநேரம் பிரிபடவில்லை. நான்கு உதடுகளில் மிதந்த மொழியற்ற காவியங்கள் – முத்தக் காவியங்கள்.

எத்தனையோ, எத்தனையோ.. அவன் நினைக்கிறான்.. இவள் கற்பிழந்திருந்தால்..

ஓ..

அவள் நினைக்கிறாள்.. நாம் கற்பிழந்திருந்தால்..

ஓ..

தெய்வம் காப்பாற்றியிருக்கிறது..

ஓ..

இந்தச் சுகானந்தத்துக்காகவா? இந்தச் சுகானுபவத்துக்காகவா? இந்தச் சுந்தரப் படலத்துக்காகவா?

உள்ளே தீப்பந்தங்கள் எரிகின்றன என்கிற நினைவு அவர்களுக்கு வரவில்லை. இது இரகசியமான இடமுமல்ல என்கிற நினைவே

அவர்களுக்கு எழலில்லை. நாளை அழைத்துச் செல்லப் போகிறேன் என்று இளவரசன் கூறிய நம்பிக்கை, எழுச்சி நிறைந்த மகிழ்ச்சி அவளுக்கு.

நாளை என்ன நடந்தாலும் பார்த்துக் கொள்வது என்கிற துணிவு நிறைந்த வெறி அவனுக்கு.

அவர்கள் பல கணங்கள் சொர்க்கக் கதவுகளைத் திறந்து, சுந்தர ஜோதியைக் கண்டு, சுகப் பிரார்த்தனையை முடித்து, சுய உணர்வு அடைகிறார்கள்.

ஆ! என்னே பேரின்பம் என்று அவள் நினைத்து வழிபடுகிறாள்.

அவனுக்கு அது இரண்டாம் அனுபவம். முதல் அனுபவத்தைத்தான் சேரன் குலக்கொடி குணசேகரி பெற்றுவிட்டாளே!

அவரவர் தத்தம் நிலைக்கு வந்ததும் ஒருவரையொருவர் நோக்கி நாணத்தால் தலை கவிழ்ந்து கொள்கிறார்கள்.

இப்படி நடக்கும் என்று இருவருமே எதிர்பாராதது.

நடந்துவிட்டது..

ஆனால், அவர்கள் அதற்காக கவலை கொள்ளவில்லை.

மாறாக முறுவலித்துக் கொள்கிறார்கள்.

“நாகநீலி!”

“ம்ம்!”

“எதிர்பாராதது நடந்துவிட்டது.”

“எதிர்பார்த்தே நடந்ததாகவே இருக்கட்டுமே! இப்போது நான் இறந்தாலும் கவலையில்லை.”

“நாகநீலி!”

“ஒரு பேச்சுக்குச் சொன்னேன். எனது பிறவி முழுமையடைந்துவிட்டது என்பதற்காகச் சொன்னேன்.”

“நாளைக் காலையில் நான் வெண் தேருடன் வருவேன்.”

“மன்னர் சம்மதித்துவிட்டாரா?”

“உலகமே சம்மதிக்கவில்லையானாலும் எனக்குக் கவலையில்லை. இதற்காக நான் பாண்டிய அரசையே இழக்கச் சித்தமாய்விட்டேன்.”

“அப்படிச் சொல்லாதீர்கள்; பாண்டிய பாரம்பரியம் என்னாவது?”

"மண்ணோடு மண்ணாகட்டும்."

"உண்மையாகத்தான் சொல்லுகிறீர்களா?"

"சத்தியமாகவே சொல்லுகிறேன்."

பல கணங்கள் வரை அரண்டு மருண்டு நோக்குகிறாள் நாகநீலி. ஓ.. இவர் தனது காதலுக்காக – ஒரு பெண்ணுக்காக எதையுமே துறக்க..

"கட்டிக் கொண்ட மனைவி என்னாவது இளவரசே?"

"வாழ வேண்டுமானால் என்னுடன் வரட்டும். அரச போகம் வேண்டுமானால் அரண்மனையில் இருக்கட்டும்."

"இது பிடிவாதம்!"

"இல்லை முடிவானது! நியாயமானது. நேரமாகிறது. வெளியில் பலரிருக்கிறார்கள். தவறாக.."

"நினைத்தாலும் தவறில்லை."

செழியன் எழுந்து கொண்டான். தனது காதலிக்கு அன்பாக ஒரு முத்தம் வழங்கி விடைபெற்றுக் கொண்டான்.

சென்னியப்பனால் நடந்த அந்தக் கசப்பான பலாத்கார செய்தியை அவளும் விளக்கச் சம்மதிக்கவில்லை; அவனும் கேட்க விரும்பவில்லை.

மலயத்தீவின் தலைவனிடம் விடைப் பெற்றுக் கொண்டு செழியன் புறப்பட்டான்.

அவனை விடை கூட்டியனுப்ப மலயமான் கீர்த்தியும் மற்றவர்களும் கடற்கரை வரை சென்றார்கள்.

வாசலிலேயே நின்று கண்களில் நீர்வழிய நோக்கிக் கொண்டிருந்தாள் நாகநீலி.

நாளை ஒரு யுகப்புரட்சியே கவாடபுரத்தில் நிகழவிருக்கிறது என்பதை அவள் எண்ணிப் பார்க்க, எண்ணிப்பார்க்க..

மறுநாள் போது நாகநீலி என்று விடிகிறது.

இளவரசன் செழியன் வெண் தேருடன் தலைநகரைவிட்டுப் புறப்பட்டுவிட்டான் என்கிற செய்தி அரண்மனையைக் கலக்குகிறது.

முதன் முறையாக வெண்தேரில் அமர்ந்து, புரவிகளைப் பூட்டி, அவனுக்கே உரிய வேகத்துடன் கடற்கரை நோக்கிச் செல்கிறான். தேர் ஓட்டுவதில் அவனுக்கு நிகர் அவனேயாயிற்றே.

வெண்தேரைக் கவாடபுரத்துக் கடற்கரையிலேயே விட்டுவிட்டுக் காத்துக் கொண்டிருக்கும் நாவாயை நோக்கி வருகிறான். நாவாயில் ஏறுகிற போது அவரவர் வணங்குகிறார்களேயொழிய மவுனமாக இருந்தனர். அனைவரது முகங்களிலும் ஏதோ மாற்றம் தென்படுகிறது. விசாரிக்கவும் முடியவில்லை. நாவாய் மலயத்தீவுக் கடற்கரையை அடைகிறது. மலயமான் கீர்த்தி வந்திருந்து வரவேற்பான் என்றுதான் செழியன் எதிர்பார்த்தான். அவ்வாறு யாரும் வரவில்லை.

மலயத்தீவையடைந்த செழியன், அவனுக்காகக் காத்திருந்த பல்லக்கில் ஏறி மலயமான் இல்லம் நோக்கிச் செல்கிறான்.

மலயமானின் இல்லத்தைச் சுற்றி மலயத்தீவே திரண்டு வந்திருந்தது.

தங்களை வழி கூட்டியனுப்பத்தான் இத்தனை பேர்கள் என்று முதலில் அவன் நினைக்கிறான்.

ஆனால் அங்கே நிகழ்ந்திருந்தது..

கவாடபுரம் காக்கப்பட வேண்டும், கன்னித் தமிழ்ச்சங்கம் வளர வேண்டும் என்கிற நல்லுணர்வுடன் நாகநீலி தன்னைத்தானே பலி கொடுத்திருந்தாள்.

தற்கொலை செய்து கொண்டிருந்தாள்.

போதும் ஓரிரவு அனுபவித்தது என்கிற பூரண நிறைவுடன் புன்னகை புரிந்தவாறு மாண்டு கிடந்தாள்.

ஓ.. நாகநீலி..

இன்னொரு கடற்கோள் எழுந்தது போல மருண்டு போனான்; மலைத்துப் போனான்; சிலைத்துப் போனான் செழியன்.

# அத்தியாயம் - 11

நாகநீலியின் மரணச் செய்தி அதிவேகமாக கவாடபுரத்து அரண்மனையுள் நுழைந்து அத்தனை காதுகளிலும் விதவிதமான கோணங்களில் கிசுகிசுக்கிறது.

மன்னர் கடுங்கோன் பாண்டியர் அடைந்த வியப்புக்கு எல்லையில்லை.

நாகநீலி எதற்காகத் தற்கொலை செய்து கொண்டாள்? இது தற்கொலையா? கொலையா? எதற்கும் ஒற்றர்கள் செய்தி கொண்டுவரட்டும் என்று எதிர்பார்த்தார்.

அத்துடன் இளவரசன் செழியனையும் எதிர்பார்த்தார்.

இரவு அவன் மலயத்தீவை நோக்கிச் சென்ற விவரம் அப்போதைக்கு யாருக்கும் தெரியாது. அந்த அளவில் அவனது புனைவடிவம் கைகொடுத்து உதவி இருக்கிறது.

சற்றைக்கெல்லாம் ஒற்றர்த் தலைவன் வந்து வணங்கி நிற்கிறான்.

“இந்தக் கொலை எப்படி நடந்தது? நம்மவர்கள் செய்ததா?”

“இல்லை, மன்னர் பெருமானே! நமது ஒற்றர் குழுவையே விசாரித்தாய்விட்டது. நாகநீலியே செய்து கொண்ட தற்கொலை!”

“ஓ.. என்ன காரணம் என்று விசாரித்துப் பார்த்தீர்களா?”

“நன்றாகவே விசாரித்து அறிந்து வந்திருக்கிறார்கள். இரவு நமது இளவரசர் மலயத்தீவுக்குப் போயிருக்கிறார்.”

“இரவு செழியன் மலயத்தீவுக்குச் சென்றானா?”

“மாறுவேடத்தில்.”

“தினமும் போவதுண்டா?”

“இல்லை, மன்னர் பெருமானே! நேற்றிரவுதான் போயிருக்கிறார். மலயமான் இல்லத்தில் நாகநீலியிடம் வெகுநேரம் பேசியிருந்திருக்கிறார்; இன்று காலையில் வெண்தேரை எடுத்து வந்து அழைத்துச் செல்வதாக வாக்குறுதி தந்திருக்கிறார். அதன்படி இளவரசரும் வெண்தேரை எடுத்துச் சென்றிருக்கிறார். அங்கே இவர் போகுமுன் நாகநீலி தற்கொலை செய்து கொண்டிருக்கிறாள்.”

“என்ன துணிச்சல் செழியனுக்கு! வரட்டும்.. பேசிக் கொள்கிறேன்! தற்கொலைக்குச் சரியான காரணம் என்னவென்பது புரியவில்லை.”

“புரியவில்லை, மன்னர் பெருமானே! நீங்கள் மருமகளாக ஏற்கச் சித்தமில்லை. ஆயினும் நான் அழைத்துச் செல்கிறேன் என்று இளவரசர் சொல்லியிருக்க வேண்டும். பிடித்தமில்லாத இடத்தில் புகுவானேன் என்று நாகநீலி தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டும்!”

மவுனமாக எழுந்த கடுங்கோன் பாண்டிய மன்னர் உலவத் தொடங்கினார்.

“இப்போது அந்த வெண் தேர் எங்கிருக்கிறது?”

“மலயத்தீவில். அந்தத் தேரில்தான் நாகநீலியின் பிணம் ஊர்வலமாகப் புறப்படவிருக்கிறது. அதுவரையிலும்..”

“இளவரசன் அங்குத்தானே இருக்க வேண்டும். சரி. நீ போகலாம்.”

கேள்விப்பட்ட கணமுதல் ஒருபுறம் மகிழ்ச்சி, மறுபுறம் வேதனையாகவுமிருந்தது. அப்போது பார்த்து, பட்டத்தரசி வானவன் தேவியும், குணசேகரியும் உள்ளே நுழைந்து கொண்டிருந்தனர்.

இரவு வெகுநேரம் கழித்து அரண்மனைக்குத் திரும்பினான் இளவரசன் செழியன். அவ்வாறு திரும்புகிற போது வெண்தேரைத் தன்னுடனேயே எடுத்து வரத் தவறவில்லை. இரவு உணவு உட்கொள்ள மறுத்துவிட்டான். மேன்மாடத்தில் நின்று கொண்டு வானத்தையும், மலயத்தீவு இருக்கிற திசையுமாக நோக்கிக் கொண்டிருந்தான்.

அப்போது –

அங்கே கடுங்கோன் பாண்டியரும் பட்டத்தரசி வானவன் தேவியும் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களது வருகை செழியனுக்குப் புரிகிறது. அவனது கோபம் பன்மடங்கு அதிகரிக்கிறது. அருகே வந்து நின்ற பெற்றோரை அவன் சட்டை செய்யவில்லை.

அவன் மவுனமாகவே கண்டுகொள்ளதவன் போலிருந்தான்.

“செழியா! வெண்தேரை யார் அனுமதியுடன் எடுத்துச் சென்றாய்?” – மன்னர் கேட்டார்.

முகம் சிவக்கத் திரும்பிய செழியன் "யார் அனுமதி பெற வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? அது இந்த அரசுக்குரிய சொத்தல்ல."

"நாகநீலியைப் பார்த்துவிட்டு வருகிறாயா?"

செழியன் கோபம் இன்னும் அதிகரிக்கிறது.

"நாகநீலியைத் தகனம் செய்துவிட்டு வருகிறேன்."

"என்ன? இறந்துவிட்டாளா?"

"இறக்கவில்லை, கொன்றுவிட்டீர்கள்."

"செழியா!"

மன்னர் கடுங்கோபமாகக் கதறுகிறார்.

"யார் உத்தரவின் பேரில் நீ மலயத்தீவு சென்றாய்?"

"சென்றேன். என்ன செய்யப் போகிறீர்கள்? நாளைய காலையிலேயே எனது சிரச்சேத ஏற்பாடுகளைக் கவனிக்கலாம். போதுமா..? இன்னும் அதிகமாகப் பேசினால்.."

"அதிகமாகப் பேசினால்..?"

"இந்த அரண்மனையையே இடித்துத் துகளாக்கிவிடச் சுற்றிலுமுள்ள தீவுமக்கள் கொதித்தெழத் தூண்டிவிடுவேன்."

"அவர்களையடக்க எனக்குத் தெரியும்."

"அவர்களுக்குத் தலைமை தாங்கவும் எனக்குத் தெரியும்."

"செழியா!" அன்னை கத்தினாள்.

"ஏனம்மா கத்துகிறீர்கள்? என்ன பாவம் செய்தோ முதல் தலைநகரம் தென்மதுரையைக் கடல் கொண்டது. மேலும் பாவம் செய்து கவாடபுரத்தையும் அழித்துக் கொள்ளாதீர்கள். ஒன்றை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். எனது உடலில் ஒரு துளி ரத்தம் சிந்தினால் கவாடபுரத்தில் ஓராயிரம் தலைகள் உருளும், மனத்தில் கொள்ளுங்கள்."

செழியன் மேலும் அங்கு நின்று வாக்குவாதம் நிகழ்த்த எண்ணாது மேன்மாடத்தை விட்டகன்றான்.

பெற்றவர்கள் பிரமித்துப் போயினர். உண்மையிலும் செழியனை மருட்டலாம். தண்டிக்க முடியுமா?

பொழுது பலபலவென்று விடிகிறது.

பாண்டிய இளவரசன் வெண்தேரை எடுத்துக் கொண்டு மலயத்தீவுக்குப் புறப்பட்டான். பால் தெளித்தல் என்கிற சடங்கை அவன் நிறைவேற்றத் தவறவில்லை.

மலயத்தீவில் ஆகவேண்டிய சடங்குகளை முடித்துக் கொண்டு பகலுக்கு மேல் தலைநகரம் கவாடபுரத்தை அடைகிறான். அவனுக்கு உடனடியாக அரண்மனை செல்ல விருப்பமில்லை. அந்தத் தேரை எடுத்துக் கொண்டு ஆத்திரம் தீரக் குமரி நாட்டையே சுற்றி வரவேண்டும் என்கிற வெறி ஏற்படுகிறது. அன்றைய பொழுதில் அவன் கவாடபுரத்து ராஜவிதிகளில் தேரை ஓட்டிய வேகம்..

ஆ! தெருவில் செல்பவர்களுக்கு ஏதேனும் நிகழ்ந்துவிடுமோ என்கிற பயம் ஒருபுறமிருக்கட்டும், இளவரசன் எங்காகிலும் மோதிக்கொண்டு பாண்டிய அரசு வாரிசற்றுப் போய்விடக் கூடாதல்லவா?

கவாடபுரத்தை அவன் வெறிகொண்டு சுற்றி வந்த வேகம் அரண்மனை காதுகளுக்கு எட்டுகிறது. மன்னர் கடுங்கோன் பாண்டியரும் பட்டத்தரசி வானவன் தேவியும் மருண்டு போயினர்.

இருவரைக் காட்டிலும் நெற்றித் திலகத்துக்குரிய குணசேகரி பெரிதாகப் பயந்து போனாள்.

அன்றிரவு வெறும்பாலை மட்டும் குடித்துவிட்டு அரண்மனையிலேயே படுத்துக் கொண்டாள்.

தினமும் பொழுது விடிந்தால்..

மனம் பேதலிப்புக் கண்டால்..

வெண்தேரை எடுத்துக் கொள்ள வேண்டும்; கண் மண் தெரியாது வேகமுடன் ஓட்டி ஆத்திரத்தையடக்க முயல வேண்டும்.

ஏனோ நாகநீலியின் நினைவு வந்துவிட்டால் உடனே கண்முன் தோன்றுவது வெண்தேர். அதில் ஏறியமர்ந்ததும் நாகநீலியின் மெத்தென்ற மடியில் அமருவது போன்ற உணர்வு – பிரமை..

ஏறியமர்ந்துவிட்டாலோ, இந்தப் பாண்டிய நாட்டையே அழித்து ஒழித்துவிட வேண்டும் என்கிற மாதிரி ஓர் ஆத்திரம் வெறி.

மன்னர் எவ்வளவோ எடுத்துக் கூறியாய்விட்டது.

அன்னை அழுத கண்ணீருடன் புலம்பிப் பார்த்தாள்.

மனைவி குணசேகரியோ “தங்கள் ஆத்திரம் பாண்டிய நாட்டின் மீது இருக்கிறது என்பது தவறு. அரண்மனை மீது இருக்கிறது. ஒரு காரியம் செய்யுங்கள்; தேர்க்காலில் என்னை வைத்துப் பலியிட்டுவிட்டால் உங்கள் ஆத்திரம் அடங்கிவிடும். நாளைக்கே வேண்டுமானாலும் நான் ஆயத்தமாகிறேன்” என்று *மாங்கல்யத்தைக் கையில் பற்றிக் கொண்டு கேவிக் கேவி அழுதாள்.

செழியன் காதுகள் செவிடுபட்டு எத்தனையோ நாள்களாய்விட்டனவே. நாகநீலி மறைவுக்குப் பிறகு அவனுக்கு இந்தப் புவனமே சூன்யமாய்விட்டது போன்ற பிரமை. அவன் ஊமையாகவே வாழ்ந்தான்.

ஊணுறக்கமின்றி வாழ்ந்தான். அவனது நிலை பலருக்கும் பயத்தைத் தூண்டிவிட்டது. இவ்வாறு அவன் தினமும் வெண்தேரில் வேகச் சவாரி செய்கிற போது சிலர் அடிபட்டும் அகப்பட்டும் மடிகிற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட நேர்ந்தது.

நேற்றுங்கட ஒரு தாயும் சேயும் அவனது தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டுக் கொண்டு மாண்டு போயினர். இவ்வாறு தினமும் விபத்துகள் எழுந்து பலர் மாள மாளத் தலைநகரில் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. உள்நாட்டுக் குழப்பம் தலைதூக்குமோ என்கிற நிலை ஏற்படுகிற போது, பாண்டியத் தானைத் தளபதி தலையிட வேண்டியதாய்ப் போய்விட்டது.

மன்னர் கடுங்கோன் செய்வதென்னவென்று புரியாது திகைத்தார். இவனைத் திருத்த யாரால் முடியும்? தண்டனை வழங்க வேண்டிய ஒரே நீதிபதி மன்னர்தான். அவர் எவ்வாறு வாரிசை இழப்பார்..?

அன்றைய தினம் அரண்மனை முன் கவாடபுரத்து மக்களே திரண்டுவிட்டனர். இளவரசன் செய்யும் இந்த வெறித்தாண்டவத்துக்கு ஒரு முடிவு கோரி அவர்கள் கூடியிருந்தனர். வெளியில் ஒரே மக்கள் கோஷம்.

அரண்மனையில் செழியனில்லை.

---

*இப்போது கயிற்றில் அணிவது போல, அக்காலத்தில் மாங்கல்ய வடம் அணிவர். அது கணத்த காப்பு போலிருக்கும். அதில் மீன் சின்னமிருக்கும். புலித்தாலி சோழருக்கு உரியது.

அவன் வெண்தேரை எடுத்துக் கொண்டு வழக்கம் போல வெறித்தாண்டவத்துக்குப் புறப்பட்டிருந்தான். ஒரு நாகநீலி மாண்டுபோனாள் என்பதற்கு மனித வர்க்கத்தையே இவன் அழிக்கத் தலைப்பட்டுவிட்டானே.

மன்னர் கடுங்கோன் பாண்டியர் அரண்மனைக்கு வெளியே வந்து மக்கள் முன் காட்சி தருகிறார்.

எங்கும் ஒரே குழப்பமான கோஷம். எந்த நேரத்திலும் எதுவும் நிகழலாம் என்பதையறிந்த தானைத் தளபதி படைகளை ஆயத்தமாக்கிக் கொண்டிருந்தார்.

கடுங்கோன் பாண்டிய மன்னர் கண்ணீர் மல்க மக்களை நோக்குகிறார். பலவிதமான பழிக்குரல்கள்.

இளவரசரைத் தண்டியுங்கள் என்று ஒருபுறம்..

தூக்குத் தண்டனை அளிக்க வேண்டும் என்று மறுபுறம்..

இல்லையென்றால் நாங்களே குத்திக் கொலை செய்துவிடுவோம் என்று வேறுபுறம்..

எல்லாருக்கும் அமைதியாக மறுமொழி கூறுகிறார் மன்னர்.

இரண்டொரு தினங்களில் இந்த வெறித்தாண்டவத்துக்கான முடிவைக் கவனிப்பதாகக் கூறுகிறார்.

மக்கள் அமைதியாக இல்லாவிட்டாலும் இளவரசனை நெஞ்சாரப் பழித்த வண்ணம் பிரிந்து செல்லுகின்றனர்.

அன்றிரவு அரண்மனையில் பெருத்த வாதங்கள். ஐம்பெரும் குழுவும் எண்பேராயமும் கூடி அறிவுரை கூறுகின்றன.

செழியன் செவிகள் செவிடுபட்டுப் பல நாள்களாய்விட்டனவே. அவன் மறுமொழி கூறினான்; அதுவும் ஆயங்கள் முன்னிலையில் வளமையாக இருந்தால் அவமதித்ததற்கு ஒப்பாகுமே என்று.

“என்னைச் சிரச்சேதம் செய்து என் நாகநீலி இருக்குமிடத்தில் சேர்த்துவிடுங்கள். நான் நாகநீலியைப் போலக் கோழையல்ல, தற்கொலை செய்து கொள்ள! காரணம் அவள் பெண். அவள் பெண் என்பதனால்தான் நான் அழைத்ததும் வர மறுத்துத் தற்கொலை செய்து கொண்டாள். அவளால் – அவள் வருகையால் அரண்மனையில் குழப்பம் ஏற்பட்டுவிடக் கூடாதே என்பதற்காகத் தற்கொலை செய்து கொண்டாள். நான் அவளுக்காக அரசைத் துறக்கச் சித்தமாயிருக்கிறேன் என்பதையறிந்து, இந்த அரசு, இதன்

தமிழ் வளர்ச்சி பாழ்பட்டுவிடக் கூடாதே என்பதற்காகத்தான் தற்கொலை செய்து கொண்டாள். எனக்கு இந்த அரசும் வேண்டாம்; இந்தத் தமிழும் வேண்டாம். கடுங்கோன் பாண்டியரே கட்டியாளட்டும்."

ஓ.. எத்தனை செருக்கான மறுமொழி!

ஆயினும் கண்ணீரை வரவழைக்கும் கதை நாகநீலியின் தியாகம் என்பது அனைவருக்குமே புரிகிறது.

வழக்கம் போல் பொழுது விடிந்தாலும் வழக்கத்துக்கு மாறுபட்ட ஒரு சரித்திரம் நிகழப் போகிறது என்பது போலச் சேவல் கொக்கரிக்கிறது.

வழக்கம் போல அன்றைக்கும் நாகநீலியின் மடியில் அமர்ந்து – வெண்தேரில் அமர்ந்து புறப்படுகிறான், இளவரசன் செழியன். அவன் புறப்படுவதைக் கவனிக்கிறார், கடுங்கோன் பாண்டிய மன்னர்.

அவருடைய கண்களில் அவல நீர்த்திவலைகள்.

உச்சிப் பகல்..

அவனுக்குப் பகலாவது இரவாவது? இரவில் யாரும் நடமாடுவது கிடையாது. அப்படி இருந்தால் இருட்டிலும் தேரோட்டுவான். அத்துணைக்குத் தேரோட்டுவதில் வல்லவன். இதையறிந்துதானே நாகநீலி வெண்தேரைப் பரிசாக அளித்தாள்!

ராஜவீதியில் முரட்டுத்தனமாகவும் மூர்க்கத்தனமாகவும் தேரை ஒட்டிக் கொண்டு வருகிறான். அந்தத் தேரோடும் வீதியே அலறுகிறது. வழியில் ஒரு கிழவன் தூக்கி எறியப்படுகிறான். கண்களில் பட்டால்தானே. ஒரு திருப்புமனையில் தேரைத் திருப்பிச் செலுத்துகிற போது..

யாரோ வேண்டுமென்றே குறுக்கே பாய்ந்து..

தேர் அந்த மனிதர் மீது ஏறிவிடுகிறது.

"செழியா.."

வானமே அதிர அந்தக் குரல் முழங்குகிற போது..

"ஓ.. இது..

புரவிகளின் சேணங்களைப் பலங்கொண்ட மட்டும் இழுத்துத் தேரை நிறுத்தித் திருப்பி வருகிறான், செழியன்.

வழியில் ரத்த ஆறு பாய..

தந்தை – பாண்டிய நாட்டு மன்னர் கடுங்கோன் குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடக்கிறார்.

தேரைவிட்டிறங்கிய செழியன் அருகே நடந்து வருகிறான்.

தந்தையின் இந்த நிலை அவனது கோபத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து வருகிறது.

உயிர் இன்னும் பிரியவில்லை.

“மகிழ்ச்சியா, மகனே?” என்கிறார் கடுங்கோன் பாண்டியர்.

“மகனே! கவாடபுரம் உன்னை இழக்கக் கூடாதே என்பதற்காகத்தான் என்னையே நான் இழந்துவிட்டேன். அதுமட்டுமல்ல! நான் தற்கொலை செய்து கொண்டதே உடனடியாக மேலுலகம் சென்று நாகநீலியைச் சந்தித்துப் பொறுத்தருள வேண்டிக் கொள்ளத்தான். அதுவும் உன் தேர்க் காலில் நான் இறந்ததற்காகப் பெருமைப்படுகிறேன். உன் தேர்க்காலில் செத்தவர்களுக்குப் பிராயச்சித்தம் வேண்டுமல்லவா?”

“அப்பா!”

கல் கரைகிறது.

கனியாத காய் கனிகிறது.

நீண்ட நாள்களுக்கப்புறம் அவனுடைய கண்களில் நீர் அரும்புகிறது.

“செழியா.. நீ இந்தத் தேரோட்டும் பழக்கத்தை.. இந்தத் தேரோடும் வீதியோடு..”

உயிர்ப்பறவை பிரிந்து வானில் சிறகடித்துச் சென்றுவிட்டது.

“அப்..”

சொல் வெளிவரவில்லை.

அவனது மூச்சு அடைபடுவது போன்ற..

வெறி கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்து தரைமட்டமாகிறது.

தந்தையை வாரி எடுத்துத் தேரில் கிடத்துகிறான்.

அதே கண்ணீருடன் தேரில் அமருகிறான்.

தேர் புறப்படுகிறது..

ஆனால், வெறித்தனமான வேகத்தில் அல்ல. அமைதியான குளம்படிச் சத்தத்துடன் செல்கிறது. அதன் கடகடத்த பெருத்த

சத்தம் இனி அந்தத் தேரோடும் வீதியில் கேட்காது. இனி அந்த வெண்தேர் பாண்டிய அரண்மனையில் ஒரு காட்சிப் பொருள். கவாடபுரம் அமைதி கண்டது.

வரலாறு *வெண்டேர் செழியனை இழக்கலாமா?

தமிழ் பேறு பெற்றது.

(நிறைந்தது)

---

*வரலாறு சொன்னது என்ன?

கவாடபுரத்து இரண்டாம் தமிழ்ச் சங்கக் காலத்தில் வெண்டேர்ச் செழியன் என்பவன் ஆண்டு வந்தான். இவன் தந்தை கடுங்கோன் பாண்டியன். இவ்வளவே!

அது என்ன வெண்டேர் – வெண்தேர்? இதுவே என் கற்பனை; இந்தக் கதை.